உ

சிவமயம்



இளவாலை சித்திரமேழி

அமரர்

மான் சதாசிவம் குமாரசிங்கம் அவர்களின்

# நினைவு மலர்

11. 11. 2001

921
குமார
SLIPR





அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்று ஆறு ஆக ஆரியர்க்காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக் கண்டு அயலாரூரில்
அஞ்சிலே ஒன்று வைத்தான் அவன் எம்மை அளித்துக்காப்பான்





கொழும்பு தமிழ்ச் ச
நூலகம்

அமரர்

## ஸ்ரீமான் சதாசிவம் குமாரசிங்கம்

திதி : புரட்டாதி மாதம் அபரபட்ச ஏகாதசி

**23. 11. 1923** **13. 10. 2001**

27492



அமரர்

# ஸ்ரீமதி குமாரசிங்கம் சின்னத்தங்கம்

ஷஷ்டி திதி

**1933** **11. 8. 1990**

உ

ஸ்ரீ ராம ஜெயம்



சிரஞ்ஜீவி ஹனுமான் பாதம் பணியும் பல்லாயிரம் பக்தர்களின் வரிசையில் ஒரு ஜீவன் இன்று எம்மிடையே இல்லையென்பது "புனரபி மரணம், புனரபி ஜநநம்" என்ற கீதாசாரியன் வாக்கை நிலைநிறுத்துகிறது. எனது அண்மைக் கால ஐரோப்பிய நாடுகளின் ஆன்மீகச் சுற்றுலாவுக்கு முதல் நாள் ஆசிபெற்ற ஸ்ரீமான் குமாரசிங்கம் அவர்களின் பிரிவு அவரது குடும்பத்தவர்கட்கு மிகவும் துயர் தரும் சம்பவமாகும்.

ஆரோக்கியமான உடல் நிலையுடன் ஆஞ்சநேய பக்தன் திரு. பரமானந்தம் குடும்பத்தோடு (அமரரின் புதல்வர்) இனிமையான பேரக்குழந்தையுடன் கண்டிப்பான செல்லத்துடன் வாழ்ந்த பெரியார் யாரும் வேதனையுறாத வண்ணம் நித்திரையில் மீளாத்துயில் கொண்டமையும் அந்நாள் ஏகாதசி புண்ணிய திதியாக அமைந்தமையும் அன்னாரின் மீண்டும் பிறவாத வைகுண்டபதம் கிடைத்தமைக்குச் சான்றாகும்.

ஸ்ரீ ஜயவீர ஆஞ்சநேய சுவாமி மேல் பெரும் பக்தி பூண்ட 'சதா' குடும்பத்திற்கும் மற்றைய உறவினர்களுக்கும் தேறுதல் கூறி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஸ்ரீ ராமச்சந்திரப் பிரபுவிடமும், அவர் தம் பக்தன் ஸ்ரீ ஹனுமானிடமும் மன்றாடி, மன்றாடி பிரார்த்தனை செய்வதே எம்மால் முடிந்த பணியென நம்புகின்றேன்.

சீதா தேவியின் துயர் களைந்த சொல்லின் செல்வர் அனைவரது துன்பத்தையும் நீக்குவாராக.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

ஸ்ரீமத் சந்திரசேகர சுவாமிகள்

உ
சிவமயம்

''வேதாகம வித்யா பூஷணம்''

பிரம்மஸ்ரீ விஸ்வநாராயண சர்மா

கொழும்பு அவர்களின்

# ஆத்ம சாந்தியுரை

*"நெரு நல் உளனொருவன் இன்றில்லை என்னும்*
*பெருமை உடைத்திவ்வுலகு".*

மனித வாழ்க்கையின் யாக்கை நிலையாமையை எடுத்தியம்பும் குறள் வாக்கியம் எவ்வளவு உண்மை யென்பதனை அமரர் ஸ்ரீமான் குமாரசிங்கத்தின் பிரிவு நன்றாகவே நிரூபித்துள்ளது. 11 – 10 – 2001ல் அவரின் இருப்பிட வாசல் அழைப்பு மணியை அழுத்தியதும் கதவைத் திறந்து இன்முகம் காட்டி ஆசனம் அளித்து அளவளாவிய பெரியார் 13 – 10 – 2001ல் அமரராகிய துயரச் செய்தி தொலைபேசியில் அறியக் கிடைத்ததும் உண்டான அதிர்வு தான் மேற்கூறிய குறளின் விளக்கம்.

சைவத் தமிழ் வளர்க்கும் யாழ்ப்பாண நன்னகரின் வலி வடக்குப் பிரதேசம் வேளான் பெருங்குடி மக்களை அறநெறி வழுவா தவநெறி வாழ்வில் ஈடுபடுத்தும் பல பெரிய ஆலயங்களையும் (கீரிமலைச் சிவன், மாவைக் கந்தன், தெல்லிநகர் துர்க்கா) விவசாயப் பிரதேசங்களையும் கொண்டதாகும்.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த வலி வடக்கில் இளவாலை சித்திரமேழி எனும் ஊரில் சதாசிவம், சின்னாச்சி தம்பதிகளின் அருந்தவப் புதல்வராகப் பிறந்து சித்திர மேழி ஞானவைரவர் கோவிலின் சூழலில் தவழ்ந்து உழுதுண்டு வாழ்ந்தவர் ஸ்ரீமான் குமாரசிங்கம் அவர்கள்.

அதே வலி வடக்கில் பண்ணோடு பதிகம் பாடும் பெரும் சைவபக்தர்கள் வழியில் வந்த மங்கை நல்லாள் சின்னத்தங்கத்தை வாழ்க்கைத் துணையாய் கைப்பிடித்து வரம்பின் இடையில் பாய்ந்தோடும் வாய்க்கால் நீராகச் சீரான வாழ்க்கையின் நன்மதிப்பாக ஏழு மக்கட் செல்வங்களைப் பெற்று இன்பமாக வாழ்ந்தார்.

அழுத்தும் குடும்பச் சுமையின் காரணமாக யாழ் நகர் வந்து விவசாயத்தைத் துறந்து வியாபாரம் செய்து வந்தார். அந்நாட்களில் யாழ் வண்ணை ஸ்ரீ விசுவேசப் பிள்ளையார் கோவிலடியில் வாழ்ந்து பிள்ளைகளையும் சைவ நற்பழக்கத்தோடு கல்வியையும் புகட்டி வந்தார். இன்று "சதா" என்று எல்லோராலும் அறியப்பட்ட அமரர் குமாரசிங்கத்தின் 3 வது புதல்வர் திரு பரமானந்தம் அவர்களை 5 வயதுக் குழந்தையாக ஸ்ரீ விசுவேசப்பிள்ளையார் கும்பாபிஷேக விழாவில் கண்டேன். அன்று முதல் இன்று வரை அவரது குடும்பம் முழுவதும் என்னுடன் அன்புடனும் பக்தியுடனும் பழகி வருகின்றது.

காலப் போக்கில் தன்னுடைய பிள்ளைகளை ''வையத்துள் முந்தியிருக்கச் செய்து" வருங்கால் தன் இல்லத்துணைவியாரை இழந்தார். ஆயினும் பிள்ளைகளின் எதிர்கால வாழ்வைப் பற்றி மனதைத் தளர விடாது தொடர்ந்தும் பிள்ளைகளை வளர்த்து வந்தார். உரியகாலத்தில் எல்லாப் பிள்ளைகளுக்கும் திருமணம் முடித்து பேரக் குழந்தைகளுடன் கொஞ்சி விளையாடி ஆறுதல் அடைந்தார்.

பிற்காலத்தில் தலைநகர் வந்து தனது மகனுடன் இருந்து வாழும் பொழுது தெகிவளை ஸ்ரீ ஆஞ்சநேய சுவாமியிடம் அன்பு பூண்டார். ஸ்ரீமத்சந்திர சேகர சுவாமிகளின் அன்புக்கும் ஆசிக்கும் பாத்திரரானார். அன்னாரது கள்ளமிலா நெஞ்சம், ஜீவகாருண்யம், பண்பான பேச்சு எல்லோருக்கும் கூடிவராது. அதன் பயனாக ஏகாதசியில் அமரத்துவம் அடைந்து வைகுண்டபத மெய்தினார். அவரது பிரிவால் துயருறும் அனைவருக்கும் தேறுதல் கூறி அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

# அஷ்ட பைரவர்


அசிதாங்க பைரவர்


ருரு பைரவர்


சண்டபைரவர்


குரோத பைரவர்


கபால பைரவர்


உன்மத்த பைரவர்


பீஷண பைரவர்


சம்ஹார பைரவர்

உ

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

பிடியத னுருவுமைகொள மிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

## தேவாரம்

அப்பன்நீ அம்மைநீ ஐயனும்நீ
அன்புடைய மாமனும் மாமியும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும்நீ
ஒருகுலமும் ஒருரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவுந் தோற்றுவாய்நீ
துணையாயென் நெஞ்சத் துறப்பிப்பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்தும்நீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன்நீயே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பிலே விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெ மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

சுருதிவா னவனாம் திருநெடு மாலாஞ்
சுந்தர விசும்பினிந் திரனாம்
பருதிவா னவனாம படர்சடை முக்கட்
பகவான் அகவுயிர்க் கமுதாம்
எருதுவா கனனாம் எயிர்கன்மூன் றெரித்த
வேறுசே வகனுமாம் பின்னுங்
கருதுவார் கருதும் உருவமாங் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையும் சிலதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரள்மேரு
விடங்கன் விடைப்பதகன்
பல்லாண்டு என்னும் பதங்கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

அண்ண லேயெனை யாண்டு கொண்டருளிய அமுதே
விண்ணி லேமறைந் தருள்புரி வேதநா யகனே
கண்ணி னாற்றிருக் கயிலையி லிருந்தநின் கோலம்
நண்ணி நான்தொழ நயந்தருள் புரியெனப் பணிந்தார்.


## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமானே.

## வாழ்த்து


வான்முகில் வாழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மைற யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்கு உலகமெல்லாம்.





உ
சிவமயம்

திருச்சிற்றம்பலம்



### மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய
# சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத் தாண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள் மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க
ஈசன்அடி போற்றி எந்தை அடிபோற்றி
தேசன்அடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன்அடி போற்றி
சீரார் ருெந்துறைநம் தேவன்அடி போற்றி
ஆராத இன்பம் அருளும்மலை போற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயஉரைப் பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார்கழல் இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்

கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்ஆயின எல்லாம் போய்அகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்றமறை யோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள்ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே



தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசம்ஆம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும்இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்க ரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து

*திருச்சிற்றம்பலம்*

உ
சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஔவைப் பிராட்டியார் அருளிய

# விநாயகர் அகவல்



## ஆசிரியப்பா

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன் அரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும் பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்டநீல மேனியும்
நான்ற வாயு நாலிரு புயமும்
மூன்று கண்ணு மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழ நுகரும் மூஷிக வாகன !
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்



தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாப்
பொருந்தவே வந்தென் உளத்தினிற் புகுந்து
குருவடிவாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந் தெனக் கருளிக்
கோடாயுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்கிசை நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறிவித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்

சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முகமாக இனிதெனக் கருளி
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக் கொன்றிடமென்ன
அருள் தரும் ஆனந்தத் தழுத்தியென் செவியில்
எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவுக் கணுவாய் அப்பாலுக் கப்பா லாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும் பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக ! விநாயக ! விரைகழல் சரணே !

திருச்சிற்றம்பலம்



உ

# தினசரி வாழ்வில் சொல்ல வேண்டிய மந்திரங்கள்

## ஸ்ரீ கணபதி மந்திரங்கள்

1. ஸ்ரீ வல்லப மஹா கணபதி மந்திரம்

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம்
க்லௌம் கம் கணபதயே வர
வரத சர்வ ஜனம்மே
வசமானய ஸ்வாஹா

2. தன ஆகர்ஷண கணபதி மந்திரம்

ஓம் க்லாம் க்லீம் கம் கணபதயே
வரவரத மம தன
தான்ய சம்ருத்திம் தேஹி
தேஹி ஸ்வாஹா

3. வ்ராத கணபதி மந்திரம்

ஓம் நமோ வ்ராத பதயே
நமோ கணபதயே நம:
ப்ரமதபதயே நமஸ்தேஸ்து
லம்போதராய
ஏகதந்தாய விக்னவிநாசினே
சிவ சுதாய
வரத மூர்த்தயே நமோ நம ஸ்வாஹா

4. காயத்ரி

ஓம் தத்புருஷாய வித்மஹே; வக்ரதுண்டாய தீமஹி
தன்னோ தந்தி: ப்ரசோதயாத்

5. ஸ்ரீ லட்சுமி கணபதி மந்திரம்
ஓம் ஸ்ரீம்கம் சௌம்யாய லட்சுமி கணபதயே
வரவரத சர்வதனம்மே வசமானய ஸ்வாஹா

6. ஸர்வ வித்யா கணபதி மந்திரம்

தினமும் காலையில் 108 முறை சொல்ல கல்வி; அறிவு வளர்ச்சிப் பெறும். அறிவு விருத்தியாகும் தீய எண்ணங்கள் நீங்கி நல்ல எண்ணங்கள் உண்டாகும்.

ஐம் ப்ளூம் ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம்
க்லௌம் கம் கணபதயே
வர வரத ஐம் ப்ளூம் சர்வ
வித்யாம் தேஹி ஸ்வாஹா

7. எல்லாத் துன்பங்களையும் போக்கும் சங்கட நாசன கணபதி ஸ்தோத்திரம்.

இதில் கணபதியின் பன்னிரெண்டு நாமாக்கள் சொல்லப்பட்டுள்ளன. இதைத் தினமும் படிப்பதால் இயற்கைச் சீற்றத்தால் வரும் துன்பங்கள், நோய் மூலம் தொல்லைகள் பேய், பிசாசு அச்சம் ஆகியவை நீங்கி விடும்.

ப்ரணம்ய சிரஸா தேவம் கௌரி புத்ரம் விநாயகம்!
பக்தா வாசம் ஸ்மரேன் நித்யம் ஆயுக் காமார்த்த சித்தயே!!

ப்ரதமம் வக்ர துண்டஞ்ச ஏகதந்தம் த்விதீயகம்!
த்ருதீயம் கிருஷ்ண பிங்காஷம் கஜவக்த்ரம் சதுர்த்தம்!!

லம்போதரம் பஞ்ச மஞ்ச ஷஷ்டம் விகடமேவ ச!
சப்தமம் விக்ன ராஜேந்திரம் தூம்ரவர்ணம் ததாஷ்டமம்!!

நவமம் பால சந்திரஞ்ச தசமந்து விநாயகம்!
ஏகாந்தசம் கணபதிம் த்வாதசந்து கஜானனம்!!

த்வாதசை நாநி நாமானி த்ரி : ஸந்த்யம் ய : படேன் நர: !
நச விக்ன பயம் தஸ்ய சர்வ சித்திகரம் பரம்!!

வித்யார்த்தீ லபதே வித்யாம் தனார்த்தீ லபதே தனம்!
புத்ரார்த்தி லபதே புத்ராட் மோக்ஷார்தீ லபதே கதிம்!!



ஜபேத் கணபதி ஸ்தோத்திரம் ஷட்பி மாஸை : பலம் லபேத்
சம்வந்சரேண சித்தம் ச லபதே நாத்ர சம்சய:!!

அஷ்டப்யோ பிராம்மணேப்யச்ச லிகித்வாயஸ் சமர்ச்சயேத்!
தஸ்ய வித்யா பவேத் சர்வா கணேசஸ்ய ப்ரசாதத!!

## தரித்திரம் நீங்கிச் செல்வம் பெருக

"ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் தனநாயகாயை
ஸவர்ணாகர்ஷண தேவ்யாயை
சர்வ தாரித்திரிய நிவாரணாயை
ஓம் ஹ்ரீம் ஸ்வாஹா

### ஸ்ரீ லெட்சுமி

ராஜாராஜேஸ்வரீம் லக்ஷ்மீம் வரதாம் மணிமாலினீம்
தேவீம் தேவப்ரீயாம் கீர்த்திம் வந்தே காம்யார்த்த ஸித்தயே.

### ஸ்ரீ லெட்சுமி

"ஓம் ச்ரீம் ச்ரியை நம:"

காலை, மாலை 108 முறை சொல்லி வந்தால் விரைவில் லட்சுமி கடாட்சம் கிடைக்கும்.

### மனோவியாதி விரோதிகளால் அச்சம் நீங்கி மனோ தைரியம் பெற

"ஸக்தே பஜே த்வாம் ஜகதோ ஜனித்ரீம்
ஸூகஸ்ய தாத்ரீம் ப்ரணதார்த்தி ஹந்த்ரீம்!
நமோ நமஸ்தே குஹ ஹஸ்த பூஷே
பூயோ நமஸ்தே ஹ்ருதி ஸன்னி தத்ஸ்வ!!

### துன்பங்கள் விலக முருகன் சுலோகம்
(ஆதி சங்கரரின் ஸ்ரீ சுப்ரமண்ய புஜங்க மாலையிலிருந்து)

மயூராதிரூடம் மஹா வாக்ய கூடம்
மனோஹாரி தேஹம் மகச் சித்தகேஹம்
மஹீதேவ தேவம் மஹா தேவ பாவம்
மஹாதேவ பாவம் பஜே லோக பாவம்

எடுத்த காரியத்தில் வெற்றி பெற

ராமதூத மஹாதீர ருத்ர வீர்ய சமுத்பவ
அஞ்ஜநாகர்ப்ப சம்பூத வாயு புத்ரா நமோஸ்துதே.

### பாவங்களும் வினைகளும் அகல

ஹர என்றால் பாவங்களைப் போக்குவது எனப் பொருள் 'ஹரஒஹர' என்பதே மருவி தமிழில் 'அரோகரா' எனப்படுகிறது. 'அரஹரா' என்று சொல்லி வந்த வினைகளும் பாவங்களும் மறையும்.

'அரஹரா'

தினமும் பெண்கள் கூற வேண்டியது.

சர்வ மங்கள மாங்கல்யே சிவே
சர்வார்த்த சாதகே ! சரண்யே
த்ரயம்பகே தேவி நாராயணீ நமோஸ்துதே

இதை மனதிற்குள் எப்பொழுதும் பெண்கள் சொல்லிக் கொண்டிருந்தாலே வறுமை நீங்கும். தினமும் பலமுறை தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தால் அஷ்டலெட்சுமியின் அருள் கிட்டும்.

### ஸ்ரீ ஹயக்ரீவர்


"ஞானா னந்தமயம் தேவம் நிர்மல ஸ்படிகாக்ருதிம்!
ஆதாரம் ஸர்வ வித்யானாம் ஹயக்ரீவ முபாஸ்மஹே!!



### ஸ்ரீ சுப்ரமண்யர்

'ஷடானனம் குங்கும ரத்த வர்ணம்
மஹாமதிம் திவ்ய மயூர வாகனம்
ருத்ரஸ்ய ஸூனும் ஸூரசைன்ய நாதம்
குஹம் ஸதாஹம் சரணம் ப்ரபத்யே"

## ஸ்ரீ சக்கரம்



நான் இருக்கும் இடத்தில் லட்சுமி காடாட்சம் உண்டு

ஓம் நமோ பகவதி சர்வ மங்களதாயினி
சர்வயந்த்ர ஸ்வரூபிணி சர்வமந்திர ஸ்வரூபிணி
சர்வலோக ஜனனீ சர்வாபீஷ்ட ப்ரதாயினி
மஹா த்ரிபுரசுந்தரி மஹாதேவி
சர்வாபீஷ்டம சாதய சாதய ஆபதோ நாசய நாசய
சம்பதோப்ராபய ப்ராபய சஹகுடும்பம் வர்தய வர்தய
அஷ்ட ஐஸ்வர்ய சித்திம் குருகுரு
பாஹிமாம் ஸ்ரீதேவி துப்யம் நமஹ
பாஹிமாம் ஸ்ரீதேவி துப்யம் நமஹ
பாஹிமாம் ஸ்ரீதேவி துப்யம் நமஹ.

### ஸ்ரீ காயத்ரி மந்திரங்கள்

"வேத சாஸ்திரங்களில் நான் காயத்ரீயாக இருக்கிறேன்" என்று பகவத் கீதையில் கிருஷ்ண பகவான் கூறுகிறார். காயத்ரி மந்திரத்திற்கு மேலான மந்திரம் உலகில் கிடையாது. விசுவாமித்திரரால் அருளப்பட்டது இந்த மந்திரம்.

பிரம்ம தேவன் புஷ்கரம் என்கிற புண்ணிய பூமியில் ஒரு பெரிய யாகத்தைத் தொடங்கினார். அந்த யாகத்தின் போது தன்னுடைய சக்தியினால் ஸ்ரீ காயத்ரி தேவியை சிருஷ்டித்தார்.

காயத்ரி சிகப்பு நிறமாகத் தோற்றம் கொண்டுள்ளாள். ஐந்து திருமுகங்களையும் பத்து திருக்கைகளையும் கொண்டவள்.

இந்த காயத்ரி மந்திரம் சொல்லும் போது காயத்ரி தேவியையும், சூரிய பகவானையும், ஸ்ரீவிஷ்ணுவையும் நினைவில் நிறுத்தி சொல்ல வேண்டும்.

இதைச் சொல்வதால் கொடிய வினைகள் அகலும். உடல் பலம், மனோபலம் கூடும்.

கீழ்கண்டவாறு ஐந்து இடங்களில் இதை நிறுத்தி சொல்ல வேண்டும்.

ஓம்
பூர்ப் புவஸ்ஸுவ
தத்ச விதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீம ஹி
தியோ யோன ப்ரசோதயாத்.

சகல தேவதா ஸ்ரீ காயத்ரீ மந்திரங்கள்

## 1. ஸ்ரீ கணபதி

ஓம்
தத்புருஷாய வித்மஹே
வக்ர – துண்டாய தீமஹி
தந்நோ தந்தி ப்ரசோதயாத்

## 2. ஸ்ரீ சுப்ரமண்யர்

ஓம்
தத்புருஷாய வித்மஹே
மஹாசே நாய தீமஹி
தந்நோ ஷண்முக ப்ரசோதயாத்

## 3. ஸ்ரீ ருத்ரர் (சிவன்)

ஓம்
தத்புருஷாய வித்மஹே
மஹா தேவாய தீமஹி
தந்நோ ருத்ர ப்ரசோதயாத்



## 4. ஸ்ரீலெட்சுமி

ஓம்
மஹா லட்சுமியைச வித்மஹே
விஷ்ணு பத்நயைச தீமஹி
தந்நோ லட்சுமி ப்ரசோதயாத்

## 5. ஸ்ரீ துர்க்கா

ஓம்
காத்யாய நாய வித்மஹே
கன்யகுமாரி தீமஹி
தந்நோ துர்கி ப்ரசோதயாத்

## 6. ஸ்ரீசரஸ்வதி

ஓம்
வாக்தேவ்யைச வித்மஹே
விரிஞ்சி பத்நயைச தீமஹி
தந்நோ வாணி ப்ரசோதயாத்.

## 7. ஸ்ரீ கிருஷ்ணர்

ஓம்
தாமோதராய வித்மஹே
ருக்மணி வல்லபாய தீமஹி
தந்நோ க்ருஷ்ண ப்ரசோதயாத்

## 8. ஸ்ரீராமர்

ஓம்
தசரதாய வித்மஹே
சீதா வல்லபாய தீமஹி
தந்நோ ராம ப்ரசோதயாத்

## 9. ஸ்ரீ மகாவிஷ்ணு

ஓம்
நாராயணாய வித்மஹே
வாசுதேவாய தீமஹி
தந்தோ விஷ்ணு ப்ரசோதயாத்

### 10. நரசிம்மர்

ஓம்
வஜ்ர நாகாய வித்மஹே
தீக்ஷ்ண தம்ஷ்ட்ராய தீமஹி
தந்நோ நரசிம்ஹ ப்ரசோதயாத்

### 11. ஸ்ரீ சாஸ்தா

ஓம்
பூத நாதாய வித்மஹே
பவ நந்தனாய தீமஹி
தந்நோ சாஸ்தா ப்ரசோதயாத்

### 12. ஸ்ரீ ஆஞ்சநேயர்

ஓம்
ஆஞ்ச நேயாய வித்மஹே
வாயு புத்ராய தீமஹி
தந்நோ ஹனுமாந் ப்ரசோதயாத்

### 13. ஸ்ரீ ஆதிசேஷன்

ஓம்
சஹஸ்ய சீர்ஷாய வித்மஹே
விஷ்ணு தல்பாய தீமஹி
தந்நோ நாக ப்ரசோதயாத்

### 14. ஸ்ரீ லட்சுமி ஹயக்ரீவர்

ஓம்
தம் வாகீச்வராய வித்மஹே
ஹயக் ரீவாய தீமஹி
தந்நோ ஹஸெள ப்ரசோதயாத்

### 15. ஸ்ரீ லட்சுமி வராஹன்

ஓம்
தநுர்த்த ராய வித்மஹே
வக்ரதம்ஷ்ட்ராய தீமஹி
தந்நோ வராஹ ப்ரசோதயாத்



### 16. ஸ்ரீ நிவாசர்

ஓம்
நிரஞ்ஜநாய வித்மஹே
நிரா பாசாய தீமஹி
தந்நோ ஸ்ரீ நிவாச ப்ரசோதயாத்

### 17. ஸ்ரீ ஹம்ஸாவதாரம்

ஓம்
ஸ்ரீ ஹம்ஸ ஹம்ஸாய வித்மஹே
பரம ஹம்சாய தீமஹி
தந்நோ ஹம்ச ப்ரசோதயாத்

### 18. ஸ்ரீ பூமாதேவி

ஓம்
தநுர் தராயை –ச வித்மஹே
சர்வ சித்யைச தீமஹி
தந்நோ தரா ப்ரசோதயாத்

### 19. சுதர்சனர்

ஓம்
சுதர்சநாய வித்மஹே
ஜ்வாலா சக்ராய தீமஹி
தந்நோ சக்ர ப்ரசோதயாத்

### 20. விஷ்வக்சேனர்

ஓம்
விஷ்வக்சே நாய வித்மஹே
வேத்ர ஹஸ்தாய தீமஹி
தந்நோ விஷ்வக்சேந ப்ரசோதயாத்

### 21. கருடன்

ஓம்
தத்புருஷாய வித்மஹே
சுவர்ண பட்சாய தீமஹி
தந்நோ கருட ப்ரசோதயாத்

### 22. நந்திச்வரர்

ஓம்
தத்புருஷாய வித்மஹே
சக்ர துண்டாய தீமஹி
தந்நோ தந்தி ப்ரசோதயாத்

### 23. ஸ்ரீ பிரம்மா

ஓம்
வேதாத் மகாய வித்மஹே
ஹிரண்யகர் பாய தீமஹி
தந்நோ ப்ரம்மா ப்ரசோதயாத்

### 24. தட்சிணாமூர்த்தி

ஓம்
தட்சிணாமூர்த்தயேச வித்மஹே
த்யாநஸ்த்தாய தீமஹி
தந்நோதீச ப்ரசோதயாத்

### 25. சரபேஸ்வரர்

சாலுவே சாய வித்மஹே
பட்சி ராஜாய தீமஹி
தந்நோ சரப ப்ரசோதயாத்

### 26. ஸ்ரீ காளி

ஓம்
காளி காயைச வித்மஹே
ச்மாசன வாச சின்யை தீமஹி
தந்நோ கோராப்ரசோதயாத்

## நவக்ரக காயத்ரி மந்திரங்கள்

### 27. சூரியன்

ஓம்
அச்வத்வஜாய வித்மஹே
பாச ஹஸ்தாய தீமஹி
தந்நோ சூர்ய ப்ரசோதயாத்



### 28. சந்திரன்

ஓம்
பத்மத்வஜாய வித்மஹே
ஹேம ரூபாய தீமஹி
தந்நோ சோம ப்ரசோதயாத்

### 29. அங்காரசன்

ஓம்
வீரத்வஜா யவித்மஹே
விக்ந ஹஸ்தாய தீமஹி
தந்நோ பௌம ப்ரசோதயாத்

### 30. புதன்

ஓம்
கஜத் வஜாய வித்மஹே
சுக ஹஸ்தாய தீமஹி
தந்நோ புத ப்ரசோதயாத்

### 31. குரு

ஓம்
வ்ருஷபத் வஜாய வித்மஹே
க்ருணி ஹஸ்தாய தீமஹி
தந்நோ குரு ப்ரசோதயாத்

### 32. சுக்கிரன்

ஓம்
அச்வத் வஜாய வித்மஹே
தநுர் ஹஸ்தாய தீமஹி
தந்நோ சுக்ர ப்ரசோதயாத்

### 33. சனிஸ்வரர்

ஓம்
காகத் வஜாய வித்மஹே
கட்க ஹஸ்தாய தீமஹி
தந்நோ மந்த ப்ரசோதயாத்

## *34. ராகு*

ஓம்
நகத் வஜாய வித்மஹே
பத்ம ஹஸ்தாய தீமஹி
தந்நோ ராகு ப்ரசோதயாத்

## *35. கேது*

ஓம்
அம்வத் வஜாய வித்மஹே
சூல ஹஸ்தாய தீமஹி
தந்நோ கேது ப்ரசோதயாத்

## *36. வாஸ்துபகவான்*

ஓம்
தத்புருஷாய வித்மஹே
யோக மூர்த்யாய தீமஹி
தந்நோ வாஸ்துதேவ மூர்த்திப் ப்ரசோதயாத்

## *37. ஸ்ரீ ஸ்வர்ணாகர்ஷண பைரவர்*

ஓம்
பைரவாய வித்மஹே
ஹரிஹரப்ரம் ஹலப்மகாய தீமஹி
தந்நோ ஸ்வர்ணா கர்ஷண பைரவ ப்ரசோதயாத்

## *ராம ராம*

ராம ராமராம

என்று தொடர்ந்து கூறிக் கொண்டே வந்தால் விஷ்ணு சஹஸ்கர நாமத்தை முழுவதும் ஒரு முறை கூறுவதற்குச் சமம்.

## *பாபங்கள் தீர ராமமந்திரம்*

'ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே'

இதைக் காலை மாலை இரவு சொல்லி வந்தால் நாம் தெரியாமல் செய்த பாபங்கள் விலகிவிடும்.



மாலையில் விளக்கேற்றி வைத்து நமஸ்காரம் செய்து
சொல்ல வேண்டிய மந்திரம்

தீபஜ்யோதி பரம் பிரம்ம
தீபஜ்யோதிர் ஜனார்த்தன:
தீபோஹரது மே பாபம்
சந்த்யாதீப நமோஸ்துதே
சுபம் கரோது கல்யாணம்
ஆரோக்யம் சுகசம்பதம்
மம புத்தி ப்ரகாசாய
தீப ஜ்யோதிர் நமோஸ்துதே.

## *ஹயக்ரீவர்*

கலைமகளுக்கு குரு ஹயக்ரீவர். இவர் குதிரை முகம் கொண்டவர். திருமாலின் உருவங்களில் ஒன்றாக விளங்குபவர். கல்வியில் சிறப்படைய இந்த சுலோகத்தைத் தினமும் காலை, மாலை கூறி வந்தால் நல்ல கல்வி அறிவு கிடைக்கும்.

"ஞானாந்தமயம் தேவம்
நிர்மல ஸ்படிகாக்ருதிம்
ஆதாரம் சர்வ வித்யானாம்
ஹயக்ரீவ முபாஸ் மஹே"

## *வீட்டிலிருந்து வெளியே கிளம்பும் பொழுது சொல்ல வேண்டியது.*

வனமாலீ கதி சார்ங்கீ சங்கீ சக்ரீச நந்தகீ
ஸ்ரீமான் நாரயணோ விஷ்ணுர் வாசுதேவோ அபிரட்சது.

*ராம மந்திரம்*

*"ஸ்ரீ ராம் ஜெயராம் ஜெய ஜெய ராம்"*


இந்த மந்திரம் பதின்மூன்று எழுத்துக்களைக் கொண்டது. "ராம த்ரயோதஸாக்ஷரி மந்திரம்" எனப்படும். இந்த மந்திரத்தை ஸ்ரீ சமர்த்த ராமதாஸ் ஸ்வாமிகள் தொடர்ந்து கூறி ஸ்ரீ ராம பிரானின் தரிசனம் பெற்றார். இவர் க்ஷத்திரபதி சிவாஜி மன்னரின் குரு.

*சூரியன் துதி - சோம்பேறித்தனம் விலக*

காலையில் எழுந்ததும் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு விபூதி பூசி கிழக்குத் திசை நோக்கி இரண்டு கைகளையும் தலைக்கு மேல் குவித்து

"ஓம் நமோ ஆதித்யாய புத்திர் பலம்
தேஹிமா சதா"

என்று மூன்று முறை கூறவும். சூரியனை இருதயத்தில் கற்பனை செய்து கொள்ளவும். இப்படிச் செய்து வந்தால் சோம்பேறித்தனம் விலகி சுறுசுறுப்பும் உற்சாகமும் ஏற்படும்.





# இந்து மக்களுக்கு ஒரு கையேடு

## கிரியைகளில் பங்கு

### விநாயக குரு வழிபாடு

உலகங்கள் யாவற்றிற்கும் முதற் காரணமாகிய பொருள் பிரணவம் எனப்படும். அதற்குத் தலைமையாயிருக்கும் சிவசக்திக்கு விநாயகர் என்று பெயர். (வி = இல்லாத, நாயகர் = தலைவர், அஃதாவது தமக்குத் தலைவரில்லாதவர், மேலான தலைவர் எனப் பொருள்படும்.) எனவே முதற் செய்யப்படும் கிரியை விநாயக வணக்கம். கிரியை இனிது நடந்து முடிவுற முதல்வனை வணங்குதல் இது. குரு சமய கிரியைகளுக்கெல்லாம் தலைவராதலாலும் அவரிலே சிவபெருமானுடைய திருவருள் சிறந்து நிற்றலாலும் குருவையும் வழிபடுவர்.

(கு = மலம், ரு = நீக்குபவர்) சந்தனம், மஞ்சள் அல்லது கோமயம் (பசுச்சாணம்) இவற்றில் ஒன்றில் பிள்ளையாரை உருவாக்கி அருகம்புல் மேலே சாத்தி வணங்குவது வழக்கம்.

### பவித்திரமணிதல்

பவித்திரமாவது மோதிரம் போலத் தர்ப்பையினால் செய்யப்பட்டு அணிவிரலில் அணியப்படுவது. இதன் நோக்கம் கிரியை செய்யும் போது மனம் வாக்குக் காயங்களால் வரத்தக்க பாவங்களினின்றுங் காத்தல்.

(பவித்திரம் - பதனாத் த்ராயதே பாவத்திலே விழுதலினின்றும் காப்பது - காமிகம்)

### சங்கற்பம்

சங்கற்பமாவது செய்யப்போகும் கிரியையிலே மனத்தைப் பதித்து அதிலே நிறுத்துவது. இன்ன காலத்திலே, இன்ன இடத்திலே, இன்ன நோக்கமாக இது செய்யப்போகிறேன் என்பது சங்கற்ப வாக்கியத்தின் சுருக்கமான கருத்து. நிகழுஞ் சிருட்டித் தொடக்கத்திலிருந்து அன்று வரையும் உள்ள காலம் இதில் குறிக்கப்படுவதலாலே காலத்தின் பெருமையும் தற்கால வாழ்வின் சிறுமையும் ஆன்ம ஈடேற்றத்தில் மகிமையும் உணரத்தக்கன.

### சங்கற்ப முறை

ஆண்கள் வலது கையில் தருப்பைப் பூ, அரிசி அல்லது எள்ளு முதலியவற்றை வைத்துக்கொண்டு வலது கையை மேலாகவும், இடது கையைக் கீழாகவும் வைத்து இடது பெருவிரலை வலது பெருவிரலால் அமர்த்தி முழந்தாளில் வைக்க வேண்டும். (பெண்கள் இடது கையையும் இடது முழந்தாளையும் பாவிக்க வேண்டும்.)

### சங்கற்ப வாக்கியத்தின் கருத்து

சிவபெருமானது சங்கற்பத்தாலே தொழிற்படும் ஆதிப்பிரமாவின் இரண்டாவது பரார்த்தத்தில் சுவேதவராக கற்பத்தில் வைவஸ்வதமந்வரத்தில் இருபத்தெட்டாவது சதுர்யுகத்திற் கலியுகத்தில் முற்பகுதியில் சம்புத்துவீபத்தில் பாரத வருஷத்தில் பரத கண்டத்தில் மேருவுக்குத் தெற்கே (இடத்தின் பெயர்) பிரபவ முதலான அறுபது வருஷங்களுள் (இன்ன) வருடத்தில் (இன்ன) சமயத்தில்– (இன்ன) பருவத்தில் – (இன்ன) மாதத்தில் – (இன்ன) பட்சத்தில் – (இன்ன) திதியில் வாரத்தில் நட்சத்திரத்தில் – (இன்ன) நன்மையான யோகம் (இன்ன) நன்மையான கரணமுள்ளதாய் விசேட குணத்தோடு சேர்ந்த இந்தப் புண்ணிய தினத்தில் மம (என்னுடைய) – (இன்ன) நோக்கமாக (இன்ன) கிரியை செய்யப் போகிறேன்.

### கும்பம் வைத்தல்

கடவுளைக் கும்பத்தில் வழிபடும் போது, கும்பம் உடம்பின் பாவனையாகக் கருதப்படுகிறது. வாழையிலையை அதன் தலைப் பகுதியை வடக்கு அல்லது கிழக்குப் பக்கமாக வைத்து அதில் நெல் அல்லது பச்சை அரிசி இட்டு, தண்ணீர் நிறைந்த குடம் வைத்து மூன்று அல்லது ஐந்து அல்லது ஏழு அல்லது ஒன்பது மாவிலைகளுக்குக் கீழ் தேங்காயைக் குடத்தின் மேல் வைத்து கும்பம் வைக்கலாம். கும்பத்திற்கு நூல் சுற்றி ஒரு பட்டுப் போர்த்தல் வேண்டும். தேங்காய் தலையாகவும், மாவிலைகள் தலை மயிராகவும், குடம் தசையாகவும், நூல் நாடிகளாகவும், பட்டு தோலாகவும், தண்ணீர் இரத்தமாகவும் கருதப்படுகிறது. கும்பத்திற்குள் இரத்தினம் போடப்பட்டால் அது எலும்பாகப் பாவனை செய்யப்படும்.



# இந்து சமயத்தில் அன்றாடக் கிரியைகளில் நடக்கும் சில முறைகளும் அதன் தத்துவங்களும்

### மாவிலை (மாமரத்து இலை)

இது முக்கியமாக மங்களப் பொருளாகவும் தோரணமாகவும் கட்டப்படுகிறது. ஆலயங்கள் மற்றும் விழாக்கள் இல்லங்கள் திருமண வைபவங்களிலும் இம்மங்களப் பொருள் பயன்படுத்தப்படும். சகல வைபவங்களுக்கும் கும்பம் வைக்கும் பொழுது மாவிலை சடையாகப் பாவிக்கப்படுகின்றது. தேங்காய் தலையாகவும் கும்பத்துக்குச் சுற்றும் நூல் நாடியாகவும், அதற்குள் இடும் நீர் இரத்தமாகவும், கட்டப்படும் பட்டு உடையாகவும் பயன்படுத்தப்படும். மாவிலை தோரணம் அமைக்கும்போது மூன்று முறையாகப் பயன்படுத்தப்படும்.

1. *நற்காரியங்கள் :* ஆலயங்களில் நடைபெறும் உற்சவம் விழாக்களிலும், திருமண மண்டபங்களிலும், வீடுகளில் சுபகாரியங்கள் நடைபெறும் போது மாவிலைத் தோரணம் இலையின் முன்பக்கம் வாசலின் முன்பக்கமாகவும் காம்பு பின்பக்கமாகவும் முன்புறமாக வளைத்து இலையின் நடுப்பகுதியில் குற்றிக் காம்பு பின்பக்கம் தெரியும் வண்ணம் தொங்கவிடுதல். இது சுபகாரியத்திற்குரிய அறிகுறியைக் காட்டும் தன்மையாகும்.

   *கும்பம் வைக்கும் போது :* தேங்காயின் கீழ் அமைத்தல் ஐந்து அல்லது மூன்று அல்லது ஏழு அல்லது ஒன்பது இலைகளை அமைத்தல் சிறப்பாகும்.

2. *அபரக்கிரியைக் காலங்கள்:* இது வீட்டில் மரணச் சடங்கு நிகழும்போது அமைக்கப்பட வேண்டிய முறை. மாவிலையின் நடுப்பகுதியை இலையின் காம்பு பின் பக்கமாக மடித்து தொங்கவிடல் முறையாகும். இது இம்முறைக்கு மட்டும்.

### *வாழைமரம் :*

இது ஆலயங்களிலும், விழாக்களிலும், வீடுகளில் திருமண வைபவங்களுக்கும் மற்றும் சுபகாரியங்களுக்கும் கட்டுதல். இதன் நோக்கம் வாழையின் பெறுமதி மனிதனுக்குப் பெரும் பயனைத்

தரவல்லது. இதன் இலையில் உணவு அருந்துதல், இதன் தண்டு, காய், பழம், பூ, கனி உணவாகவும் நார் பூக்கட்டுவதற்கும் பயன்படுகின்றது. இதன் பயன் எப்படியோ அதேபோல் எல்லோரிடமும் இப்படியான பயனைப் பெறக்கூடிய நிலை வரவேண்டும். இதனை அழிக்கமுடியாது. இது வாழையடி வாழையாக வாழவேண்டும் என்பதை எடுத்துக் காட்டும் முகமாக வாழைமரம் கட்டப்படுகின்றது. வாழைமரம் பழுத்த பழமாக மஞ்சள் கனியாக மங்களமாக அமைத்தால் அது மிகவும் சிறப்பாக அமையும். மரணச் சடங்குகளில் வாழைமரம் கட்டுதல், சாம்பல் வாழைக்காய் மரத்துடன் கட்டுவது அன்றாட மரபாக அமைகிறது. இதன் பயன் துக்கத்தைத் தெரிவிப்பதன் பயனாக எடுத்துக் காட்டாக அமைகிறது. வாழை மர இலையில் பயன்படுத்தும் முறை : கும்பம் வைக்கும் போது தலைநுனிப் பக்கம் எப்பொழுதும் கிழக்குத் திசை அல்லது வடக்குத் திசையாக அமைத்து கும்பம் வைக்க வேண்டும். இதுமட்டுமல்ல சாப்பிடும்போது கூட இப்படியாக அமைத்தல் சிறப்பாகும்.

### நித்திய கருமங்கள்

ஆசார அனுட்டானங்கள் ஒரு மனிதனின் வாழ்வில் நிறைந்த பூரணத்துவம் கொடுப்பதாகும். சூரிய உதயத்தின் முன் நித்திரை விட்டெழுந்து காலைக்கடன்கள் முடித்து, தண்ணீரைச் சிவதீர்த்தமாகப் பாவித்து, ஸ்நானம் செய்து, தோய்த்துலர்ந்த ஆடை தரித்து, ஜெபம், தியானம் போன்றவை குறைந்தது ஐந்து நிமிடமேயாயினும் செய்து, இயலுமாயின் ஆலய தரிசனம் செய்து, சுத்தமான வாழையிலையில் உணவு உட்கொள்வது உத்தமமாகும். பிரதி நாட்கள் தோறும் இம்முறையைக் கைக்கொள்வது உளரீதியாகவும், உடல்ரீதியாகவும் ஆன்மபலம் தரும். மனம் தூய்மை பெறும்.

### நித்திய அனுட்டானம்

இது காலை, மதியம், மாலை என மூன்று வேளைகளிலும் செய்வது மிகவும் உத்தமமாகும். காலையில் சூரிய உதயத்தின் போதும், மதியம் நடுப் பொழுதின் போதும், மாலையில் சூரிய அஸ்தமனத்தின் போதும், நித்திய அனுட்டானம் செய்து சிவனைத் தியானிப்பது மிகவும் நன்மை பயக்கும். தனியான சுத்தமான இடத்தில் அமர்ந்து "திருநீற்றை" தீட்சையின் போது கூறிக் கொடுத்த மந்திர உச்சாடனத்துடன் குழைத்து, நெற்றி, மார்பு, நாபி, கை, கால், புஜம், இடுப்புப் போன்ற இடங்களில் பூசி அதற்குரிய தியான மந்திரங்களை ஜெபிப்பது அனுட்டான முறை.



## குடும்பச் சடங்குகள்

### அன்னப் பிராசனம்

பிறந்து ஆறாம் மாதம் முதல் இரட்டை மாதங்களில் ஒன்றில் ஆண் குழந்தைக்கும், ஐந்தாம் மாதம் முதல் ஒற்றை மாதங்களில் ஒன்றில் பெண் குழந்தைக்கும் அன்னப் பிராசனம் செய்யலாம். பிள்ளையார் பூசை செய்து சிவாக்கினி காரியங்களுடன் நவக்கிரக பூசையும் இக்கிரியைகளில் இடம் பெறுவது சிறப்பு. அக்கினி முன் கிழக்கு முகமாக குழந்தையை இருத்தி, நெய் கலந்த பாயாசத்தைச் சிவாக்கினியில் ஓமஞ் செய்து சிவபீஜ மந்திரத்தால் அப்பாயாசத்தையே குழந்தைக்கு ஊட்டுவது முறை. பெண் குழந்தைகளாயின் அக்கினி காரியம் வேண்டியதில்லை என்றும் சொல்வர்.

இதற்கு பால் பருக்கல், சோறு தீற்றுதல் எனப் பேச்சுவழக்கில் கூறப்படுவதுண்டு. ஆண்களுக்கு 6ம், 8ம், 10ம், 12ம் மாதமும், பெண்களுக்கு 5ம், 7ம், 9ம், 11ம் மாதமும் சுபமுகூர்த்தம் பார்த்து, உப்பு நீக்கிய, சர்க்கரை அமுது அல்லது கற்கண்டு அமுது பொங்கி, ஆலயங்களில் அல்லது வீட்டில் வைத்து பூஜை செய்து தந்தை மூன்று தடவை எடுத்து ஊட்டி மற்றோரும் எடுத்து ஊட்டி ஆயுள் ஆரோக்கியத்துடன் வாழக் குழந்தையை ஆசீர்வதிப்பர்.

### வித்தியாரம்பம்

கல்வி பயிலத் தொடங்குதல். இது ஐந்தாம் வயதில் நடைபெறலாம். சுபவேளையில் பிள்ளையார் பூசை, சரஸ்வதி பூசை செய்து வித்தியாரம்பம் செய்தல் வேண்டும். குழந்தைக்கு முதன்முதலில் கல்வி கற்க ஆரம்பித்தல். பெரும்பாலும் எம்மவர்கள் விஜயதசமி எனப்படும் நவராத்திரி விழாவின் பூர்த்தியன்றே வித்தியாரம்பத்தை மேற்கொள்வார்கள். இருப்பினும் தைப்பூசத்தன்று மற்றும் உத்தராயணத்திலே ஜாதகரின் நட்சத்திரத்திற்கு ஏற்ப அமைந்த சுபநாளிலும் இதைச் செய்யலாம். தந்தை அல்லது ஆலயகுரு அல்லது ஆசிரியர் யாரேனும் ஒருவர் இந்த வித்தியாரம்பத்தைச் செய்யலாம். கல்வியில் மேன்மை அடையவே, முதற்கல்வியைச் சுபநாளில் சுபநேரத்தில் செய்வது எம்மவர் மரபு.

### கோயில் வழிபாடு

மூன்று தரம் அல்லது ஐந்து தரம் அல்லது ஒரு தரம் அல்லது ஒன்பது தரம் கோயிலை வலம் வந்து வழிபாடு செய்யலாம். ஒரு தரம் அல்லது இரு தரம் கோயிலை வலம் வருதல் குற்றமாகும்.

## அத்திவாரமிடல்

நாம் வீடு கட்டத் தேர்ந்தெடுக்கும் நிலத்திற்குள் முதன்முதலில் செய்யும் பூஜையானது அத்திவாரமிடல், அதற்கு நாம் முறையாகப் புரோகிதரை (பிராமண குருவை) அணுகி அவருடைய அறிவுரை ஆசியுடன் புண்ணியஷேத்திரங்களாய் விளங்கும் ஆலயங்களின் வீதிமண், மலைமண், ஆற்றுமண், புற்றுமண், ஆணைக்கோட்டு மண் (ஆனைபாதம் பட்ட மண்), எருதுக்கோட்டு மண் (எருது பாதம் பட்ட மண்), குளத்து மண் போன்றவற்றை ஒரே அளவில் எடுத்துக் குழைத்து பெட்டி செய்து, அடிப்பேழையில் பள்ளஞ் செய்து அவற்றில் நவரத்தினக் கற்களைப் போட்டுத் தங்கத் தகட்டில் "வாஸ்து யந்திரம்" போட்டு ஈசான மூலையில் (வடகிழக்கு மூலையில்) வைத்துப் பூஜை செய்ய வேண்டும். வீட்டின் பெரியார் கையால் அதைக் குழியில் இட்டு அத்திவாரமிடல் வேண்டும்.

இதற்குரிய விளக்கம் யாதெனில் காலங்காலமாக எம் சந்ததியினரை வாழவைக்கும் "கிரகலக்சுமி" எனப்படும் வீட்டையும் எம்மையும் தாங்கி நிற்கும் பூமாதேவியே எம்மால் இயன்ற நவரத்தின, பொன், பொருள், தானங்கள் உமக்கு அர்ப்பணிக்கிறோம். அதை காலை வேளையில் சூரிய பகவான் சாட்சியோடு மக்களுக்காகவே தம்மை அர்ப்பணித்து அவர்களுக்காகவே என்றும் இறைவனைப் பிரார்த்திக்கும் சிவாசாரியர்களின் துணையோடு முறையாக உமக்கு அர்ப்பணிக்கின்றோம். எமது வீட்டு நிலத்தில், நீர்வளம், நிலவளம், பயிர்வளம் நிறைந்து நிற்க அருளவேண்டும் எனப் பிரார்த்திக்கும் பூஜையாகும்.

அதேபோன்று வீட்டு வேலைகள் நடைபெறும் காலம் வீட்டிற்கு முதல் நிலை, வளை என்பன வைக்கும்போது அதற்குரியவர்கட்கு தச்சுவேலையாளிக்கு வஸ்திரம், தட்சணை, தாம்பூலம் கொடுத்து உபசரித்து, அவர் மனம் மகிழ எமை வாழ்த்திட வழிசெய்யும் உபசாரமாக இது அமையும்.

வீட்டிலே வழிபாட்டறை அமைக்கும்போது கிழக்கு முகமாக அல்லது வடக்கு முகமாக அமைப்பது உத்தமமாகும். பொதுவாகவே வழிபாட்டறை தனிமையானதாகவும், பரிசுத்த இடமானதாகவும் அமைவது வீட்டிற்குச் செல்வ போகங்களைக் கொடுக்கும். தீட்டுகள் (ஆசௌசம்) வரும் காலங்களில் வழிபாட்டறையை யாரும் அணுகாது மூடிவிடுதல் உத்தமம்.



## கிரஹப் பிரவேசம்

கிரஹப் பிரவேசம் எனப்படுவது, ஒரு புதிய வீட்டைக் கட்டி முடித்து முதல் முதலாய் வீட்டினுள் பிரவேசிப்பதாகும். இதற்கு முதல்நாள் இரவில் வாஸ்த்து சாந்தி, நவக்கிரஹ ஹோமம், பூஜை என்பன செய்து அடுத்த நாள் காலையில் கணபதி ஹோமம், லக்ஷ்மி ஹோமம் செய்து வீட்டில் பால் காய்ச்சி, அமுது பொங்கிப் பட அறையில் விஷேட பூஜைகள் செய்து, குரு பெரியார் ஆசி பெற வேண்டும்.

முதல் நாள் இரவில் செய்யப்படும் பூஜையானது "வாஸ்து சாந்தி பூஜை" வாஸ்து எனப்படும். தேவதை வீட்டின் காவல் தெய்வமாய் போற்றப்படுவர். அந்த வாஸ்த்துவைக் கும்பத்தில் "ஆவாகனம் செய்து" (மந்திர கிரியா நெறியால் வரவழைத்து) பிரியமாய் பூஜையும் ஹோமத்தில் ஆகுதியும் கொடுத்து, வைக்கோலிலே பொம்மை கட்டி, அப்பொம்மைக்கு தீமூட்டி வீட்டைச் சுற்றியும் வீட்டின் உள்ளும் சுற்றி இழுத்து, துஷ்ட தேவதைகள், கண்ணூறுகள் எல்லாம் அந்த நெருப்பில் ஈர்த்து, மீண்டும் அணுகாவண்ணம், வாஸ்த்து கும்பஜலம் எங்கும் தெளித்து, அந்த வைக்கோல் பொம்மையை முற்சந்தியில் போட்டு எரித்து அந்த துஷ்ட தேவதைகளுக்கு உயிர்ப்பலி கொடுக்கும் முகமாய் நீற்றுப் பூசனி வெட்டி அர்ப்பணித்து விடுதல் வேண்டும்.

அடுத்தநாள் காலையில் மங்களமாய், கணபதி, மஹாலஷ்சுமி ஹோம பூஜைகள் செய்து அந்தணர்கள், சுமங்கலிகள் முதலியோர்க்கு தட்சணை, வஸ்திரம் முதலிய தானம் கொடுத்து அவர்கள் திருப்தி அடைந்து மனப்பூர்வமாய் ஆசி வழங்க வேண்டும்.

கிரஹப் பிரவேசத்தில் செய்யப்படும் கிரியை, புண்ணியாக வாசனம், வாஸ்து சாந்தி, நவக்கிரக ஹோமம், மிருத்தியஞ்ச ஹோமம் மற்றும் கணபதி, லக்சுமி ஹோமங்கள் என்பனவாம். மற்றும் வீட்டின் சொந்தக்காரர் அவரவர் வசதிக்கேற்ப விரிவாய், சுருங்கச் செய்யலாம். கும்பங்களிலே அவ்வவ் தெய்வங்களை வரித்துப் பிராமணோத்தமர்களால் வேதமந்திரங்கள் பாராயணம் செய்தும் மருந்து வகை நிறைந்த சமித்துக்கள் ஹோமாக்கினியில் இட்டு, வீட்டிலே தெய்வ சானித்தியம் நிறைந்த ஹோம புகைமண்டலம், மந்திரசக்தி கொண்ட கும்பஜலம் போன்றவற்றினால் வீடு பரிசுத்தமாகின்றது. தெய்வீக அருள் நிறையப் பெருகுகின்றது.

# கிரஹப் பிரவேச விதிகள்

1. வாசல்கால் வைக்காமலும், தரை பூசாமலும், சுவரில் சுண்ணாம்பு அடிக்காமலும், மனைவி கர்ப்பமாக இருக்கும் காலத்திலும், இயற்கை உபவாதம் நடக்கையிலும், வேதம் சொல்லாமலும், வாஸ்து ஹோமம் செய்யாமலும் புதிய வீட்டில் கிரஹப் பிரவேசம் செய்யக் கூடாது.

2. இயற்கை உத்பாதம் என்பது இடியுடன் கூடிய மழை காலம் மற்றும் புயல்காற்று நில நடுக்கம் உண்டாகும் காலம் வானத்தில் வால்நட்சத்திரம் தோன்றும் காலம் போன்றவை. இவை விலக்க வேண்டும்.

3. கிழமைகளில் செவ்வாய், சனி, விலக்கத்தக்கவை. கிரஹப் பிரவேசம் செய்யும் வீட்டுத் தலைவனின் ராசிக்கு எட்டில் சந்திரன் இருக்கும் காலமும் விலக்கத்தக்கவை. மேலும் நல்ல நாளும் கோளும் அறியாமல் பிரவேசிக்கக் கூடாது.

4. முதலில் பசு செல்வதால் லட்சுமி தேவி சந்தோஷம் அடைகிறாள்.

5. அடுத்து தம்பதிகள் குல தெய்வ, இஷ்ட தெய்வப் படங்களுடன் பிரவேசிப்பதால் முன்னோர்களும் கிரக தேவதைகளும் பிரியமடைகின்றன.

6. சுமங்கலிப் பெண் இல்லத்தில் உள்ளே செல்வதால் மஹா லஷ்மி வாசம் உண்டாகிறது. (ஸ்வஸ்தி வசனம் வேத கோஷம்) இவை இரண்டாலும் அசுப சகுணங்கள் விலகிறது.

7. நண்பர்கள் அன்று விருந்து உண்பதால் அக்னி அருளும் வாஸ்து தோஷமும் நீங்குகிறது.

8. கூடுமானவரை பூஜை அறையும் கழிவறையும் பக்கத்தில் இல்லாமலும், சமையலறை கடந்து கழிவறை அடையாமலும் வாசலுக்கு நேர் கிணறு வைக்காமலும் முதலில் கட்டிய பிரதான வாயிலை மூடாமல் இருப்பதுவும் நல்லது.



# திருமணம்

**விவாகம்**

மானிடப் பிறப்பு எடுத்ததிற்கு அர்த்தபுஷ்டியாய், அறம், பொருள், இன்பம், வீடு என்கின்ற நற்பயன்களை அடைவதற்கு, ஒரு வாழ்க்கைத் துணையைத் தேடிக் கொள்வது "திருமணம்" என்கின்ற இருமனம் இணையும் இனிய நாளாகும்.

## *திருமணத்துக்கு முன் நிகழ வேண்டிய கருமங்கள்*

பருவம் அடைந்த ஆண், பெண் ஆகிய இருவரின் ஜாதகப்படி விவாகப் பொருத்தம் உரிய ஜோதிடர் மூலம் முறைப்படி பார்த்து பொருத்தம் நிச்சயம் பண்ணின பிற்பாடு பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டாருக்கு நன்னாளில் சென்று தாம்பூலம் பரிமாற்றம் செய்தல் அதாவது மங்களப் பொருட்களாகிய மஞ்சள், குங்குமம், வெற்றிலை, பாக்கு, பழவகைகள், இனிப்புப் பலகாரத்துடன் சென்று திருமணத்தை நிச்சயித்தல். அதன்பின் திருமண நாளை நிச்சயித்து விட்டு, பின் பெண் வீட்டுக்கு மாப்பிள்ளை வீட்டாரும் சென்று மேற்கூறியபடி தாம்பூலம் மாற்றிப் பின் பொன்னுருக்கல் வைபோகம் செய்தல். அதாவது மாங்கல்யம் தாலி செய்வதற்கு நல்ல நாள் பார்த்து மாப்பிள்ளை வீட்டில், அல்லது ஆசாரி வீட்டில் பொன்னுருக்கல் செய்தல் வேண்டும். பின்புதான் பெண்ணுக்குரிய கூறைப் புடைவை போன்றவற்றையும் கடையில் நல்ல நாளாகப் பார்த்து வாங்க வேண்டும். பின் திருமண நாளுக்கு மூன்று நாட்களுக்கு முன் முகூர்த்தக்கால் (அதாவது பந்தல்கால்) ஊன்றுதல் நடைபெற வேண்டும். இது முள்முருங்கை மரத்தைப் பயன்படுத்தி சுமங்கலிப் பெண்களால் வீட்டு வளைவில் ஈசான மூலையில் ஊன்றி நவதானியம் இடுதல். இதேமாதிரிப் பெண் வீட்டிலும் இடுதல் வேண்டும். இதன் பின்புதான் திருமணக் கிரியைகள்.

முற்கிரியையாய் மணமகன் மணவறைக்கு (திருமண மண்டபத்திற்கு) அழைத்து வருதல். வலதுபக்கமாக அழைத்து வரவேண்டும். (அதாவது சிவாசாரியார் இருக்கும் பக்கமாக) முதலில் சங்கற்பம், பிள்ளையார் பூஜை, புண்ணியாகம், பஞ்சகவ்விய சுத்தி போன்ற கிரியைகள் நடைபெற்று அதன்பின் அங்குரார்ப்பணம் நடைபெறும்.

அங்குரார்ப்பணம் : எனப்படுவது முளைப்பாலிகை இடுதல். இது படைத்தலைக் குறிப்பதாகும். இதில் சக்தியம்சம் பெற்ற சந்திரன் பூஜிக்கப்படுவது மரபு. குறிப்பாக, பயிர்கள் எனப்படும் தாவரங்களுக்கு அதிபதி சந்திரன். எனவே சந்திர கும்பத்தைச் சுற்றி ஐந்து அல்லது மூன்று என்ற கணக்கில் மண் போட்ட சட்டிகள் சுற்றி வைத்து, மேற்கூறிய கணக்கில் 5 அல்லது 3 சுமங்கலிப் பெண்களை வரவழைத்து அவர்கள் கையால் முளைப்பாலிகையைச் சட்டியில் இடுவதே அங்குரார்ப்பணம். மங்களக் கிரியா வைபவங்கள் அனைத்திலும் இந்தக் கிரியை உண்டு. திருமணத்தில் இதைச் செய்வதன் பொருள், சந்ததி பெருகும் பொருட்டும், நவதானியம் எனப்படும் முளைப்பாலிகைகள் மனிதனால் விதைக்கப்பட்டு மனிதன் தேவைக்கே பயன்படுவது போல, இல்வாழ்க்கையில் கணவன், மனைவி, மற்றோருக்கும் தம்மால் இயன்ற உதவி புரிந்து அறத்தோடும், என்றும் பாலிகை இடும் சுமங்கலிகள் போல் மங்களமாய் வாழ வேண்டும் என்பதற்காகவே. மணமகன், மணமகள் என இருவருக்கும் தனித்தனியாக அங்குரார்ப்பணக் கிரியை செய்வது மரபு. (மணமகள் மணமகனுக்கு வலப்பக்கத்தில் இருப்பாள்).

## ரட்சாபந்தனம்

இதைக் காப்புக் கட்டுதல் எனக் கூறுவதுண்டு. மணமகன், மணமகள் இருவருக்கும் தனித்தனியாக இந்தக் காப்புக் கட்டப்படும். அதாவது எடுத்த கருமம் இடையூறின்றி இனிது நிறைவேறவும், வேறு செயல் சிந்தனை இன்றிக் குறித்த கரும சிந்தனையில் மூழ்கி இருக்கவும், எல்லாப் பாவங்களையும் நீக்கிப் புனிதமயமாக்க (ர ஸ்ரீ எல்லா, ட்சா ஸ்ரீ பாபநாசம்) இந்த ரட்சாபந்தனம் செய்யப்படுகின்றது.

மணமகனுக்கு ரட்சாபந்தனம் (காப்புக்கட்டி) முடித்து, பிறிதொரு இடத்தில் இருத்திப் பெண்ணை அழைத்து வருவார்கள். சில இடங்களில் மணமகன் அப்படியே இருக்கப் பெண்ணை அழைத்து வருவதும் உண்டு. இதற்குரிய காரணம், பெண்ணுக்குக் காப்புக் கட்டாமல் மணமகனைப் பார்க்கக் கூடாது என்கின்ற ஒரு நியதியில் மணமகனைப் பிறிதொரு இடத்தில் அமரச் செய்கின்றனர். ஆனால் பெண் அழைத்து வரப்படும்போது முகத்திரை போட்டே அழைத்து வருவதால் மணமகன், மணவறையில் இருக்கவே பெண்ணையும் வைத்துக் காப்புக் கட்டலாம் என்கின்ற மரபிலும் இருவிதமாய் இக்கிரியை செய்வதுண்டு. மாங்கல்யம் பெண்ணின் கழுத்தில் கட்டப்படும் வரை லட்சுமி, நாராயணராக மணமகனையும், பெண்ணையும் பாவனை செய்து கிரியை நிகழ்ச்சி, தாலி கட்டியபின் சிவசக்தி ரூபமாக அமர்த்திக் கிரியை நிகழ்த்துவர். அதற்காகவே



முதலில் பெண் வலது பக்கமும், ஆண் இடது பக்கமும், தாலி கட்டிய பின் ஆண் வலமாகவும், பெண் இடமாகவும் மாற்றி இருத்துவார்கள். விஷ்ணு தனது வலது மார்பிலேயே லட்சுமியைக் கொண்டுள்ளார். சிவன் தனது உடம்பின் இடது பாகத்தைச் சக்திக்கே கொடுத்துள்ளார் என்கின்ற தத்துவம் இதனைப் புலப்படுத்தும்.

## கன்னிகாதானம்

பெண்ணை முறையாகப் பெற்றோர்களால் ''தாரதத்தம்'' ஒரு பொருளை இறுதியாகக் கொடுப்பதற்குத் தண்ணீர் விடுதல் முன்னாள் மரபு. இதற்குரிய கிரியையானது மணமகன், மணமகள் இருபகுதிப் பெற்றோரையும் அழைத்துச் சங்கல்பம் செய்து அவர்களுடைய சந்ததி, வம்சாவழிப் பிதுர்களை நினைவு கூர்ந்து திருப்தியுறும் வகையில் நாந்திதானம் (அரிசி, மரக்கறி உட்பட பணம் வைத்து) நவக்கிரஹ பிரீதி தானம் ( வஸ்திரம், பணம்) போன்றவற்றைக் குருக்களுக்கும் உதவிக் குருமாருக்கும் தானமாகக் கொடுத்தல்.

அதன்பின் சம்பந்திகள், ஒருவருக்கொருவர் உபசாரம் செய்தல் (இது கிரியை முறையில் சொல்லப்படவில்லை. சபைச் சிறப்பிற்காகச் செய்யப்படும் ஒரு சிறப்பாகும்) அதன்பின் கிழக்கு முகமாய் (மணவறையிலிருந்து சபையோரைப் பார்க்கும் வண்ணம்) மணமகள் தந்தை அமர்ந்து, ஒரு தட்டில் வெற்றிலை, பாக்கு, பழம், எலுமிச்சம்பழம், தேங்காய், மஞ்சள்துண்டு, சில்லறைக் காசு, பொன், மலர் போன்ற பொருட்கள் தட்டில் வைத்து, பெண்ணின் கையைத் தட்டிலே வைத்து, தந்தை தட்டையும், மகள் கையையும் சேர்த்துப் பிடிக்க, சிவாசாரியார் மணமக்களின் வம்சாவழியைச் சபையோர் அறிய எடுத்துக் கூறி, மங்கள ஸ்லோகம் கூறித் தாயார் மூன்று முறை தண்ணீர்விட மங்கள வாத்தியங்கள் முழங்க, கன்னிகையைத் தானமாய் மணமகன் கையில் கொடுப்பார். (கையிலே தண்ணீர் விடுதல் என்பது ஒரு பொருளை இறுதியாகக் கொடுப்பதற்கு முற்காலத்தில் அறிகுறியாயிருந்தது. நிலம் முதலியவற்றை விற்கும் போதும் இவ்வாறே நடந்தது. தண்ணீர்த் தாரையோடு கொடுத்தலால் இதற்குத் தாராதத்தம் என்பர். தத்தம் – கொடுத்தல்).

## தாலி கட்டல்

தாலியிலே சிவலிங்கம், விநாயகர் அல்லது லட்சுமியினுடைய திருவுருவம் அமைத்தல் சிறந்தது. அதன்பின் ஒரு தட்டிலே மாங்கல்யம், கூறை, மாலை, கால்மிஞ்சி மற்றும் மங்கலப் பொருட்கள் வைத்து,

மணமகனின் தந்தை, தாய், சபையோரிடம் ஆசி பெறுதல். பின் மணமகன் தனது கையால் மணமகளிடம் கொடுத்து கூறை மாற்றி வரச்செய்தல். கூறை மாற்றி வந்ததும், மாங்கல்ய பூஜை செய்து, மணமகன் எழுந்து வலது பக்கத்திற்கு வந்து சிவாசாரியார்கள், அவையோர் ஆசீர்வதிக்க, கெட்டி மேளம் முழங்க, கழுத்தில் தாலி கட்டுதல் நடைபெறும். மங்கல நாண் பூட்டுதல் என்றும் இதைக் கூறுவார். அதன் பின் மணமகள் மணமகனுக்கு இடப்பக்கம் அமர்வாள். ஆதிகாலம் மஞ்சட் கயிற்றிலேதான் தாலி கட்டப்பட்டு வந்தது. தற்போது தங்கத்திலேயே கட்டுகின்றனர். இருப்பினும் பிராமண குலத்தைச் சார்ந்தோர், மற்றும் இசைவேளாளர் போன்றோர் இன்றும் ''மஞ்சட்கயிறு'' மாங்கல்யத்திற்குப் பாவிப்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவிலும் பெரும்பாலும் மஞ்சட் கயிற்றுத் தாலியே கட்டுகின்றனர். மாங்கல்யம் என்பது ஓர் இழைகளை உடையது.

1. வாழ்க்கையை உள்ளபடி புரிந்து கொள்ளுதல்.
2. மேன்மை
3. ஆற்றல்
4. தூய்மை
5. தெய்வீக நோக்கம்
6. உத்தம குணங்கள்
7. விடுவேகம்
8. தன்னடக்கம்
9. தொண்டு

இவற்றை ஒரு பெண் ஏற்றுக் கோள்ள வேண்டும் என்ற கருத்தில் மாங்கல்யம் அமைக்கப்பட்டதாக காயத்திரி மந்திரம் குறிப்பிடுகின்றது.

## மாலை மாற்றுதல்

தாலிகட்டி முடிந்தபின் மாலை மாற்றுதல் வாழ்க்கையில் உடலாலும் உள்ளத்தாலும் நாம் இருவரும் ஒருவரே என்ற தத்துவத்திற்கு ஏற்ப பெண்ணின் கழுத்தில் இருக்கும் மாலை ஆணுக்கும், ஆணின் கழுத்தில் இருக்கு மாலை பெண்ணிற்குமாக மூன்று முறை கழற்றி மாற்றுவார்கள். அதன்பின் பெண் இடப்பக்கமாவும் ஆண் வலப்பக்கமாகவும் மாறி இருந்து உமாமகேஸ்வரப் பாவனையாக கிரியை நிகழ்த்தப்படும்.



## பால் பழம் பருகுதல்

வாழ்க்கைத் துணை ஒருவருக்கொருவர் அமைந்த வேளை வாழ்க்கை என்றும் இனிப்பாக வாழ்வு அமைய முதல் பானமாய் பாலும் பழமும் பருகுதல். அதன்பின் மங்கள தரிசனமாக "கா" எனப்படும் கன்னிப் பசுக்கன்று காண்பிப்பார்கள். (பசுக்கன்று வசதியற்ற இடங்களில் "திருவிளக்கு" தரிசனம் செய்யலாம் என்பது மரபு).

## ஏழடி நடத்தல் (ஸ்ப்தபதி)

மணவறை முன் இருக்கும் கும்பங்களையும் அக்னியையும் சுற்றி வருவதற்காகவும் முதல் ஏழடி நடத்தல். அக்னி எரியும் ஹோம குண்டத்தில் இருந்து அம்மி வரை ஏழு இடங்களில் நெல் போட்டு அந்த இடங்களில் மணமகன் தன் கையால் பெண் வலக்காலைத் தூக்கி வைத்து நடத்தி வருதல் "ஸப்தம்" எனக் கூறப்படுவது ஏழு எனப்படும். ஸப்தஸ்வரங்கள் (7) ஸப்த ரிஷிகள் (7), ஸப்த ஸாகரங்கள் (7) ஸப்த லோகங்கள் (7), ஸப்த நாடிகள் (7), ஸப்த கன்னிகைகள் (7), ஸப்த வாரங்கள் (7) எனக் குறிப்பிடப்பட்ட அனைத்தும் ஞானிகளால் வகுக்கப்பட்டன. இவை வாழ்க்கையின் நடைமுறைக்கு முன்னுதாரணமாகவும் செயற்படவும் கேட்கவும் ரசிக்கவும் உதவுவன.

கணவனானவன் தனது இஷ்டங்களுக்குப் பிரியமானவனாய்த் தன்னைச் சார்ந்தவனாய் இந்த ஏழடி மூலம் தன்னோடு சேர்த்துக் கொள்வதே இதன் பொருள்.

1. இஷ ஏக பதீபவ
2. ஊர் ஜே த்விபதீபவ
3. ராயஸ்பேஷாய த்ரிபதீபவ
4. மாயோபவ்யாய சதுஷ்பதீபவ
5. ப்ரஜாப்ய பஞ்சபதீபவ
6. ருதுப்ய ஷட்பதீபவ
7. சகா சப்தபதீபவ

## அம்மி மிதித்தல்

நான்கு மூலையில் விட்டமுள்ள ஒரு கல்லை (அம்மி) வைத்து அதன்மேல் பெண்ணின் காலை தூக்கி வைத்து தனது கையால் கணவன் மிஞ்சியைப் பெருவிரலுக்கு அடுத்துள்ள விரலில் அணிவது முறை. கல்லிலே உள்ள நான்கு விட்டங்களும் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்கின்ற

நால்வகைக் குணஇயல்பைக் குறிக்கும். அதன் நடுப்பகுதியில் கணவன் பெண்ணின் காலைத் தூக்கி வைக்கும் போது இந்தக் கல்லைப் போல் உறுதியாய் தன் நிலையில் நின்று பிரியாது இளகாது தனது கணவன் மேல் உள்ள பற்றும் நீங்காது கற்பு நெறியில் நின்று விலகாது தன்னை உறுதியாய் நிலைப்படுத்த வேண்டும் என்பது பொருளாகும். அதன் ஞாபகம் வாழ்க்கையில் என்றும் இருக்கவே தினமும் நடக்கும் போதும் கால்மிஞ்சி ஞாபகமூட்டும் என்பதாகும்.

## அருந்ததி பார்த்தல்

கற்பு நெறியில் மிகச் சிறந்தவளாய் விளங்கியவள் அருந்ததி எனும் மங்கை. அவளின் சிறப்பினால் வானிலே நட்சத்திரமாக இன்றும் ஜொலித்துக் கொண்டிருக்கின்றாள். பெண்ணின் கற்பு நெறி பெருமையை உணர்த்தவே அருந்ததி இருக்கும் திசை பார்த்து நமஸ்காரம் செய்வது மரபு. சில இடங்களில் அருந்ததிக்கெனக் கும்பம் வைத்து கும்பத்திலே பூ போட்டு வணங்குவதும் உண்டு.

## மோதிரம் போட்டு எடுத்தல்

இது கிரியையிலே கூறப்படவில்லை. மணமக்களுக்கு கூச்சம் தெளியவும், சபை சிறப்புக்காகவும் மோதிரத்தை மஞ்சள் கலந்த நீரில் போட்டு இருவரும் ஒரே சமயத்தில் கை விட்டு எடுக்க வேண்டும். மணமக்கள் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழ வேண்டும் என்ற தத்துவத்தையும் இது குறிக்கும்.

## அரசாணி

இது பத்ததியிற் கூறப்படவில்லை. இது தேசவழக்கம் போலும். அரசிலே சிவபிரானையும் வேம்பிலே உமாதேவியாரையும் வழிபடும் வழக்கம் இன்றும் உண்டு. ஒரே இடத்தில் அரசும் வேம்பும் நட்டுப் பூசிப்பதுமுண்டு. ஆதலால் அரசு சிவனைக் குறித்தல் பெறப்படும். ஆல் விஷ்ணுவைக் குறிப்பதென்பர். அரசும் ஆலும் சிவனையும் சக்தியாகிய விஷ்ணுவையும் பூசிப்பதற்காக நடப்பட்டு அரசால் என்ற பேருண்டாகி அரசாணி என்று மாறியிருக்கலாம். இப்போது இவைகளுக்குப் பதிலாக முருக்கு நடப்படுகின்றது. முருக்கு அரசு போலவே சிவ வழிபாட்டுக்குரிய மரமென்பர். அரசு, ஆல், முருக்கு ஆகிய மூன்றும் பிரமா, விஷ்ணு, ருத்திரனாகிய மும்மூர்த்திகளையும் பூசிப்பதற்குரிய மரங்கள் என்றும், இவை மூன்றையும் நடும் வழக்கமும் உள்ளதென்றும் கூறுவர்.



## அறுகு அரிசி போடுதல்

இந்த நிகழ்வு மணமக்கள் பல்லாண்டு காலம் நீடூழி வாழ வேண்டும் எனப் பெரியோர்கள் மனமுவந்து ஆசீர்வதிப்பதாகும். அறுகானது நன்றாகப் பரவும் தன்மையும், இலகுவில் அழியாத தன்மையும் உடையதால், மணமக்கள் இருவரும் அதே தன்மையோடு சிறப்புற்று வாழவேண்டும் என்ற நோக்கில் அறுகைச் சேர்த்து அரிசி போடுதல் அறுகரிசியாக வாழ்த்துவது மரபாகும். இவ்வறுகு அரிசி போடுவதில் மாறுபட்ட தன்மையைக் காணமுடியும். சிலர் கீழ் இருந்து மேல் நோக்கியும், சிலர் மேல் இருந்து கீழ் நோக்கியும் ஆசீர்வதிப்பதுண்டு. இதில் சரியான முறை முழந்தாளிலும், புஜத்திலும், சிரசிலும், அறுகரிசி இட்டு ஆசீர்வதிப்பதே சரியான முறையாகும். மனிதனுடைய உடல் பஞ்ச பூத அமைப்பை உடையது. முழந்தாளுக்குக் கீழே "பிருதுவி தத்துவம்" பூமியோடு சம்பந்தமுடையது. "அப்பு தத்துவம்" மனிதனின் இகபர சுக வாழ்வின் ஆரம்பம். எனவே தான் முழந்தாளில் இருந்து ஆசீர்வாதம் தொடக்க வேண்டும். அத்தோடு, மேல் இருந்து கீழே போடுவது தோஷ பரிகாரம் நீங்க, வியாதிகள் நீங்க செய்யப்படும்.

"சீக்கழிப்பே" மேல் இருந்து கீழ்ப்போடுதல். ஆசீர்வாதம், முழந்தாள், புஜம் சிரசு என மூன்று இடங்களில் இடுவதே சரியான முறையாகும்.

## ஆராத்தி எடுத்தல்

திருமணச் சடங்கின் முடிவில் இது செய்யப்படுவதாகும். மணமக்களுக்கு "கண்ணூறு" (கண் திருஷ்டி) கழியும் பொருட்டு ஒரு தட்டிலே குங்குமம் தூவி அதன்மேல் கற்பூரம் ஏற்றி இரு சுமங்கலிகள் வலது பக்கத்திலிருந்து இடது பக்கமாக மூன்று முறை சுற்றிக் கற்பூரத்தை அணைத்து மணமக்களுக்கு அக்குங்குமத்தை நெற்றியில் திலகமிட்டு விடுதல்.

## நாமகரணம்

பூமியிலே பிறக்கும் மனிதனுக்கு முதன்முதல் நடாத்தப்படும் கிரியை "நாமகரணம்" எனப்படும். பெயர் சூட்டுதல் எனவும் கூறலாம். இது குழந்தை பிறந்த ஆசௌச கழிவன்று நடாத்தப்படும் கிரியையாகும். குழந்தை பிறந்த நட்சத்திரத்தின் எழுத்தொலிக்கேற்பவும், தெய்வாம்சம் பொருந்திய பெயராகவும், சந்ததி வழித்தோன்றல் பெயராகவும் அமைதல் நன்று. குழந்தையின் பெயரை வலது காதிலே மூன்று முறை ஓதி, கற்கண்டு, தண்ணீர் பருக்க வேண்டும். குழுமியிருப்போருக்கும் இனிப்பு பானம் வழங்கவேண்டும். இதன் பொருள் எமது வம்சத்தில் தோன்றியுள்ள இக்குழந்தையை எமது

வம்சாவழி செயல், தொழில், கொள்ள, கண்கண்ட தெய்வமும், சைத்திரிய வம்சமும் நிறைந்த சூரிய பகவானை வணங்கி சூரியன் போல் பெயரும் வாழ்வும் பிரகாசிக்க வேண்டும் என்ற மரபு முறையில் நடாத்தப்படுவதாகும்.

## காது குத்துதல் (கர்ணவேதனம்)

குழந்தை பிறந்த ஆசௌசக் கழிவன்று அல்லது 6ம், 7ம், 8ம், 10ம் மாதங்களிலும் "காது குத்துதல்" வைபவம் நடாத்தப்படும். இதற்கு பூஜை கிரியை எனச் செய்ய வேண்டியதில்லை. பிள்ளையார் வைத்து, நிறைகுடம் வைத்து, வணங்கிச் செய்தல் வேண்டும். இது குழந்தைகட்கு ஏற்படும் அரிட்டதோஷ நிவர்த்திக்காகவும் தமிழர் பாரம்பரிய கலாச்சாரங்களில் ''கடுக்கன்'' முக்கியமானதாக இருப்பதாலும் குழந்தைகட்கு அழகு சேர்க்கும் வகையிலும் இக் "கர்ணவேதனம்" என்ற விழா எடுக்கப்படுவது மரபு.

## தீட்சை

தீ கொடுத்தல், சை கெடுத்தல், அதாவது ஞானத்தைக் கொடுத்து, மலத்தைக் கெடுத்தல். தீச்சுடர்போல் பிரகாசமான ஞான அறிவைப் புகட்டி, மந்தமாய் மனதில் படிந்திருக்கும் மலங்களை நீக்கி விடுதலே தீட்சை எனப்படும். இதில் சமய தீட்சை, விஷேட தீட்சை, நிர்வாண தீட்சை என மூவகைப்படும். இதில் ஏழு வகையான முறைகளை சாஸ்திரங்கள் கூறுகின்றன. அவை நயன தீட்சை, பரிசதீட்சை, வாசக தீட்சை, மான தீட்சை, யோக தீட்சை, சாத்திர தீட்சை, ஔத்திரி தீட்சை எனப்படும். முறையே கண்களால் அருட்பார்வையினாலும், பரிசம் தொடுவதனாலும், உபதேசத்தினாலும், அருள்நோக்கினாலும், யோகபலத்தாலும், மறை உபதேசத்தினாலும் ஹோமத்தினாலும் ஒரு மாணாக்கனைப் பரிசுத்த ஆத்மீக ஞானவாதியாக குருவால் ஆக்குவதே இத்தீட்சைகளாகும். இதில் முதலாவது தீட்சையான சமயதீட்சை பெறாதவன் சைவசமயி எனக் கூறுவதற்குத் தகுதி அற்றவன் என்பது ஆகமங்களின் கூற்று.

## ருதுசாந்தி

ஒரு பெண் குழந்தை பிறந்து வளர்ந்து, பருவமடைந்து இல்வாழ்க்கைக்கும், தாய்மைக்கும் தகுதி உடையவளாய் மாறும் நாளே பூப்படைதல் எனப்படும். பெண் பூப்படைந்து ஆசௌசம் கழியும் நாளில் சுத்தி புண்ணியாகம் செய்து, கும்பஜலத்தால் "ஸ்நானம்" செய்வித்து, கண்ணூறு கழியும் பொருட்டு, நிறைகுடம், நிறைநாழி, புட்டுக்கூம்பு, திருஷ்டி உருண்டை, குத்து விளக்கு போன்றவற்றால் ஆராத்தி எடுத்து திருஷ்டி கழிப்பது மரபு.



## சஷ்டி பூர்த்தி

மனித வாழ்வில் எல்லோருக்கும் எளிதில் கிடைக்க கூடிய நிகழ்வு அல்ல இது. எமது தமிழ் வருஷங்கள் 60 ஆகும். தான் பிறந்த வருஷத்தை மீண்டும் காணும் வாய்ப்பு 60வயது வயதில் தான் ஏற்படும். அது மட்டுமன்றி இந்த ஷஷ்டி பூர்த்தியில் மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள் என அனைவரும் சூழ பிள்ளைகளாலே செய்யப்படும் கிரியையே ஷஷ்டி பூர்த்தியாகும். மிருத்திஞ்ச தேவரே கிரியையில் முதன்மை பெறுகின்றது. ஆயுள் நீடித்து நிலைக்க மிருத்திஞ்ச ஹோமமும், மற்றும் அறுபது வருஷங்கள், 27 நட்சத்திரங்கள், ஷப்த ரிஷிகள் (7), அறுபதாவது வயதிலே "அபிஞித" எனும் 28வது நட்சத்திர தேஜஸ் ஏற்படும். ஆக "அபஞித" பிரம்மா, ருத்திரனையும், மேற்கு கிழக்கில், விஷ்ணு மார்க்கண்டேயர் மற்றும் இந்திரன் முதலானோர் நவக்கிரகங்கள், ஷப்த சிரஞ்சீவிகள் (7), போன்ற தேவதைகட்கு, பூஜை ஹோமம் செய்து, ஷஷ்டி விழா பெருமகனுக்கு கும்பஜலம் அபிடேகித்து ஆயுள் நீடிக்க பிரார்த்திப்பதாகும். ஜனன ஜாதகங்களில் ஒரு புருஷாயுசுபஹாத்ர என்பதாகும். அதாவது 120 வருடமாகும். அதில் பாதியே 60வது வயது. இதைப் பூரணப்படுத்துவமாய், சகல செல்வ போகங்களுடனும் உறவினர்களுடனும் நிறைந்த மனிதராய்க் காண்பதே சிறப்பாகும்.

# அபரக் கிரியைகள்

## தகனக் கிரியை

ஒருவர் இறந்தால் பின் அவருடைய நன்மைக்காகச் செய்யப்படுவது அபரக் கிரியை (அபரம் பிந்திய) ஒவ்வொரு மனிதனின் ஆன்மாவும் நிலையானது. உடல் நிலையற்றது. உயிரான ஆன்மா பிரிந்ததும், உடல் வெறும் கூடாகி விடுகின்றது. பிறப்பிலிருந்து இறப்பு வரை அந்த ஆன்மா வாழ்ந்த உடலை மந்திரங்களோடு சேர்ந்த தகுந்த உபசாரங்கள் செய்து, அந்த ஆன்மாவின் புத்திரர்களால் அல்லது இரத்த உறவு கொண்ட உறவினரால் தகனம் செய்யப்படும் போது, அந்த ஆன்மாவுக்கு அங்கலாய்ப்பு அல்லது தொடர்ந்து செய்யவிருக்கும் கிரியைகளின் பலன் கிடைக்க வேற்று உடல், யமன், வருணன், அக்னி போன்ற தேவர்களால் கொடுக்கப்படுகின்றது என்பது ஐதீகம். இதற்காகவே இங்கு தகனக்கிரியை செய்து, அங்கு தக்க கூடு பெறும் ஆத்மாவாகின்றது.

## காடாற்றல் (அஸ்தி சஞ்சயனம்)

இது மரணச்சடங்கு நடந்த 5ம், 7ம், 9ம் நாட்களில் ஏதேனும் ஒரு நாளில் செய்யத்தக்கது. இதற்கு எலும்பைச் சேர்த்தல் என்று பொருள்படும். ஒரு பாத்திரத்தில் பாலை விட்டு அதற்குள் கால்பகுதி, நெஞ்சுப்பகுதி, முகம், தலை போன்ற இடங்களில் இருந்து எலும்பை எடுத்து (அந்தந்த இடங்களுக்குரிய மந்திர உச்சாடனங்களோடு எடுத்து) அப் பாத்திரத்தில் போட்டுப் பின்பு புண்ணிய தீர்த்தங்களில் நதிகளில் விட வேண்டும். இறந்த ஆன்மாவின் பாவ கர்ம வினைகள் சென்று மோட்சம் பெறவேண்டி இக்கிரியை செய்வது மரபு.

## ஆசௌசம்

இதைத் துடக்கு என்றும் கூறுவதுண்டு. இறந்த ஆத்மாவின் இரத்த உறவு தொடர்புடையோர் அந்த ஆன்மா சாந்தி பெறவேண்டிக் கிரியை செய்து பிரார்த்திக்கும் நாட்கள் ஆசௌசம் எனப்படும். இந்நாட்களில் வேறு சிந்தனைகளின்றி மங்கள நிகழ்வுகள் தவிர்த்து, தனியாய் அவர் சார்ந்த குடும்பத்தினர் ஆ–ஆன்மா, சௌ–சௌக்கியம், சேஷம் பெற ஒடுங்கி இருக்கும் நாட்கள் (இது, ஜனனம், மரணம், தகனம்) என மூவகைக்கும் பொருந்தும். பூமியில் புதிதாய் ஜனனிக்கும் ஒரு ஆன்மாவின் பூமிவாழ் சௌக்கியத்திற்காகவும், ஆசௌசம் கடைப்பிடிக்கப் படுகின்றது. இது பிராமணர்களுக்கு 11 நாட்களும் இசை வேளாளர்களுக்கு 16 நாட்களும் முறைப்படி சமய தீட்சை பெற்றோருக்கு 16 நாட்களும் மற்றையோருக்கு 31 நாட்களுமாய்க் கடைப்பிடிக்க வேண்டியதாகும்.

## அந்தியேட்டி

இறந்த ஆன்மாவை நினைத்து ஒரு கல்லிலே பூஜை செய்தல். இதை பாசண பூஜை என்றும் கூறுவர். 12 அங்குல நீளம் 6 அங்குல அகலமுடைய ஒரு கருங்கல், அல்லது செங்கல் எடுத்து அதில் மனித உரு வரைந்து இறந்த ஆத்மாவை ஆவாகித்து தகுந்த உபசாரம் மந்திரங்களோடு கொடுத்து, அபிஷேகம் செய்து, வஸ்திரம் அணிந்து, பூஜை தர்ப்பணம் செய்து கும்பத்திலே சிவனை ஆவாகித்து பூஜை செய்து கல்லிலே ஆவாகித்து ஆன்மாவிற்கு "பிரபூதபலி" அதாவது பெரிய அளவிலான சாதம், கறி, தயிர், நெய், பாயாசம் முதலியவைகளைப் படைத்து, பூஜை செய்து கல்லையும், சிவகும்பத்தையும் படையல் (பலி உருண்டை) இவற்றைக் கடலில் அல்லது நதியில் இடுதல். ஆன்மா சிவமோட்ச பதவி அடைய வேண்டி அந்தியேட்டி செய்யப்படும்.



## சபிண்டீகரணம் (ஏகோதிட்டம்)

இது அந்தியேட்டி செய்த அடுத்த நாளில் செய்வதாகும். இறந்த ஆத்மாவிற்கு "திருப்தி உண்டாகும் வண்ணம்" சிவபூசை செய்யும் சிவாசாரியர்களைக் கொண்டு, அந்த ஆன்மாவைச் சேரும் பொருட்டு ஏகோதிட்டம் ஏக ஒருவரை, உத்தஸ்டம் கருதல். அதாவது இறந்த ஒருவரைக் கருத்தில் கொண்டு செய்யப்படுவது ஏகோதிட்டம். வரிக்கும் அந்தணரைத் தமது இறந்த ஆத்மாவாகக் கருதி கொடுக்கப்படுவது. சாப்பாட்டுப் பொருட்கள், உடை, செபமாலை, காலணி, குடை, பொன் பொருள் என அவர் நித்திய கருமங்களுக்கு உபயோகிக்கக் கூடியதாயும், நித்தம் அவர் பூஜை செய்யும் போதும், அந்த நினைவில் அவர் ஆன்மசாந்திக்கும் ஒரு பிரார்த்தனை செய்யக்கடவர். அதனாலேயே "ஏகோதிஸ்டம்" கொடுப்பவரும் திருப்தியாய்க் கொடுக்க வேண்டும். வாங்குபவரும் அந்த ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்க வேண்டும். இருவரும் ஏக ஒருவரை உத்திஸ்டம் கருதிச் செய்வது எனப்படும்.

இந்நாளிலேயே நான்கு தேவர் எனக் கூறப்படும் விசுவதேவர், அப்பியாகதர், பிதுர்தேவர், நிமித்தர் என நால்வகைப்படும். தேவருக்கும், கொடுக்கும் பூஜை உபசார தானங்களே சபிண்டீகரணம் எனப்படும். இதற்கு அவரவர் வசதிக்கேற்ப இரண்டு அல்லது நான்கு பிராமண சிவாசாரியார்களுக்கு முறையான உபசாரங்களோடு உபசரித்து அவர்களின் மந்திர உச்சாடனங்களோடு திருப்திகரமான தானாதிகள் செய்து, பிண்டங்களை ஒரு வடிவமாக்கித் தண்ணீரில் விடுதல் அல்லது கரைத்து பசு மாட்டிற்கு வைத்தல் உத்தமமாகும். ஒவ்வொரு வர்க்கமாய் பிதுர்வர்க்கம் 3, மாத்துரு வர்க்கம் 3, நிமித்தர் 1, தகப்பன் வழி, தாய் வழி, இறந்தவர் என 7 பிண்டம் பிடித்து வைத்து பூஜித்து எல்லாவற்றையும் சேர்த்து பிதுர் தேவர் ஆக்கிவிடுதல் சபிண்டீகரணமாகும்.

## மாசிய சிரார்த்தம்

இறந்த ஆன்மாவானது ஓர் ஆண்டு ஆட்டத் திவசம் எனப்படும். ஆண்டுத்திவசம் முடியும் வரை, அந்த இறந்த திதியில் தனது இல்லம் நாடும் என்கிற மரபுக்கேற்ப ஒவ்வொரு மாதமும், அந்த ஆன்மா இறந்த திதியில் அந்தணர்களுக்குத் தானம் கொடுத்து வீட்டிலே ஆன்மாவிற்குப் படையல் வைத்துப் பூஜிப்பது மாசியம் எனப்படும்.

## ஆட்டத் திவசம்

வருட சிரார்த்தம் இந்தச் சிரார்த்தமே ஆன்மாவிற்கு ஓரிட ஒய்வு தருவது. அங்குமிங்கும் இடை நடுவாய் அல்லாது, அந்தியேட்டி, ஏகோதிட்டம், சபிண்டீகரணம், மாசியம் என முறையாக ஆன்மாவிற்கு மகிழ்ச்சி தரும் கிரியைகள் செய்து, ஆண்டுத் திவசத்தில் ஆன்மா மோட்சம் பெறும் என்பது ஐதீகம். எனவே, இத்திவசமும் முற்கூறியவை போல் திருப்திகரமாய் செய்யப்பட வேண்டியது மிக முக்கியமாகும்.

## வருடச் சிரார்த்தம்

ஒவ்வொரு வருடமும் இறந்த ஆத்மாவின் திதி செய்யப்படுவது இதுவாகும். இதற்குக் கணக்கு இல்லை. எம் உயிருள்ள வரை எம்மால் இயன்றவரை இதைத் தொடர்ந்து செய்வதால் எம்வம்சம் தழைத்தோங்கவும், எமக்கு எமது பிள்ளைகள் கிரியைகள் செய்யாவிடினும், அந்தப் பலாபலன் எமக்குக் கிடைக்கின்றது.

## மஹாளயம்

புரட்டாதி மாதத் தேய்பிறை பிரதமை முதல் அமாவாசை வரையிலான பதினைந்து அல்லது பதினாறு நாட்கள் பிதுர்களுக்குரிய பிரியமான பண்டதானம், தர்ப்பணம் முதலியன செய்யும் காலமே ''மஹாளயம்'' எனப்படுகின்றது.

தட்சணயத்திலே சூரியன் தெற்கு நோக்கிச் சஞ்சரிக்கும் காலம் அதன் நடுப்பாகம் புரட்டாதி மாதம். அதாவது பூமிக்கு நேரே நிற்கும் காலமும் சந்திரன் தென்பகுதிக்கு நேராகவும் நிற்கும் காலமாக அமைவதாலும், இக்காலம் பிதுர்களுக்குப் பிரியமான, விஷேடமான காலமாக அமைகின்றது. சில வேளைகளில் வருஷ சிரார்த்தம் நாம் செய்யத் தவறியிருப்பின், செய்ய முடியாத நிலைமைகள் அமைந்து விடினும், அந்த இந்த மஹாளய பட்ச நாளில் செய்து கொள்ளலாம்.

## அமாவாசை விரதம்

இது ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி திதி முடிந்த 15ம் நாளில் வருவது. இந்த நாளில் "தாமகு" தந்தை, பாட்டன் வழியினருக்கும் தர்ப்பணம் செய்து விரத அனுட்டானம் செய்வது மரபு. இந்த அமாவாசை விரதங்களிலே ஆடி மாதத்தில் வரும் அமாவாசை மிகவும் சிறப்பு வாய்ந்தது. இந்நாளில் தந்தை வழியினர் சிரார்த்தங்கள் செய்யத் தவறியோர் இந்நாளில் செய்யலாம்.



பிதுர்களுக்குரிய திசையாகிய தெற்குத் திசைப் பக்கமாய் சூரியபகவான் உதயமாகும் காலமும், சந்திரனின் ஆட்சி வீடான கடகராசியில் சூரியன் சஞ்சரிக்கும் காலமும், கொண்ட இந்நாள் பிதுர்களின் பிரிய நாள். எனவே இந்த ஆடி அமாவாசை புனிதத்துவம், மகிமையும் நிறைந்த நாளாய் மிளிர்கின்றது.

## பூரணை விரதம்

இவ் விரதம் ஒவ்வொரு மாதமும், அமாவாசைத் திதி முடிந்த 15ம் நாளில் வருவது. இந்நாளில் தாயாருக்கும் தாய் வழி உறவினர்களுக்கும் விரதமிருந்து தர்ப்பணம் செய்து, அன்னதானம் செய்வது உத்தமம். பௌர்ணமி விரதங்களிலே மிகவும் சிறப்பு வாய்ந்த "சித்ரா பௌர்ணமி" சூரியன் தனது உச்சம் பெற்ற வீடாகிய மேஷ ராசியில் சஞ்சரிக்கும் காலம், அதே நேரம் மாத்துருகாரகன் சந்திரன் 7ம் இடம் சஞ்சரிக்கும் காலம். சூரியன் பிதா கிரஹம், சந்திரன் மாதா கிரஹம் என்பது ஜோதிட நூல்கள் கூறும் விதி. இந்த இரு கிரஹங்களின் சேர்க்கைப் பார்வை பெறும் நாட்கள், பிதுர்களின் பிரிய நாளாகின்றன. எனவே தான் ஆடி அமாவாசை, சித்ரா பௌர்ணமி சிறப்புப் பொருந்திய சிரார்த்த தினங்களாகப் பேணப்படுகின்றன.

## ஆசார முறைகள்

எமது இந்து சமயத்திலே முதன்மை பெறுவது "ஆசாரம்" அதை நல்ல முறையில் பேணிக் காப்பது முக்கிய கடமையாகும். தினமும் சூரிய உதயத்தின் முன் கண்விழித்துக் காலைக் கடன்கள் முடித்து ஸ்நானம் செய்து தோய்த்துலர்ந்த ஆடை தரித்து, விபூதி தரித்து, சுகந்த சந்தனம் பூசி, இறை வழிபாடு செய்து புலால் தவிர்ந்த உணவு உட்கொண்டு உடற்சுத்தி, உளச்சுத்தியோடு இருப்பதே முறையான ஆசாரம். முக்கியமாக ஆலய வழிபாடு செய்யுங் காலங்களிலாவது இவற்றை முறையாக மேற்கொள்ள வேண்டும். நாம் வாழும் இல்லத்தைக் கோயில் போல் ஆசாரமாக வைத்திருக்க வேண்டும். நாம் தீட்டுக்களுடன் வீட்டுக்குள் பிரவேசிப்பதைத் தவிர்க்க வேண்டும். உதாரணமாக ஒரு மரணச் சடங்கு வீட்டுக்குச் சென்றால், திரும்பி இல்லம் வந்ததும் முறைப்படி "ஸ்நானம்" செய்தே வீட்டிற்குள் பிரவேசிக்க வேண்டும். காரணம் மரணச் சடங்கில் கண்ட துயரங்களும், அழுகை, துன்ப ஒலிகளும் மனம், வாக்கு, காயங்களில் பதிந்து நிற்கையில் "ஸ்நானம்" செய்து நித்திய அனுஷ்டானம் மூலம் மனம், வாக்கு, காயங்களைச் சுத்தமாக்கி செல்லுதல். அத்தோடு இறந்த பிரேத கிருமிகள் தொற்றா வண்ணம் உடற்சுத்தம் முறையாகச் செய்ய வேண்டும்.

# முக்கிய தினங்கள்

## சித்திரை

### வருடப் பிறப்பு

### புது வருடப் பிறப்பு

இது சித்திரை மாதம் முதலாம் திகதி, அதாவது சூரியபகவான் மேஷராசிக்கு சஞ்சரிக்கும் காலம் கொண்டாடப்படுவதாகும். எமது தமிழ் வருஷங்கள் அறுபது (60) உண்டு. அவை–பிரபவ–முதல் அக்ஷய வரை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பெயர் (நாமம்) கொண்டு மழை, காற்று, பயிர்வளம் போன்ற இயற்கை கால பலாபலன்களை மாற்றி அமைப்பன. இவ்வருடங்களின் ஆரம்ப (பிறந்த நாள் அதாவது பிரம்மா உலக சிருஷ்டி ஆரம்பித்தநாள் என்பது புராண ஐதீகம்) இதையே புதுவருஷப் பிறப்பாகக் கொண்டாடுகின்றோம். இந்நாளில் எம்மவர்கள் தமது பாவங்கள், தோஷங்கள் நீங்க வேண்டி ஆலயங்களில் அர்ச்சகர் இல்லங்களில் மருந்து வகை, பூ வகை, வாசனைத் திரவியம் போன்றவை போட்டுக் காய்ச்சிய மருத்து நீரைத் தலையிலே தேய்த்து, ஸ்நானம் செய்து, உலகின் கண் கண்ட தெய்வமாய் மிளிரும் சூரியபகவானுக்கு, வீடுகளில் பொங்கலிட்டு பூஜை செய்து புத்தாடை அணிந்து ஆபரணங்கள் அணிந்து, ஆலய வழிபாடு செய்து, குரு , பெரியார் ஆசிகள் பெற்று, அறுசுவை உணவு உண்டு, மங்களகரமாய் நித்திரை செல்ல வேண்டும். இது எம்மவர் பாரம்பரிய மரபாகும். மங்களகரமான இந்நாட்களில் மனத்தில் சந்தோஷ மகிழ்ச்சி ஏற்படும் வண்ணம் நடந்து கொள்வது அந்த வருடம் முழுநாளும் எம்மவர் மனங்கள் மகிழ்வு பெறும் என்பதும் எம்மவரின் ஐதீகமாகும்.

வருடத்திலுள்ள 12 மாதங்களும் சுழற்சியில் மேடம் முதல் மீனம் ஈறான 12 ராசிகளிலும் சஞ்சரிக்கும் கிரகங்களின் நடுநாயகமான சூரியபகவான் ஒவ்வொரு வருடமும் சித்திரை முதலாந் திகதி கடைசியாகிய மீன ராசியிலிருந்து முதல் வீடாகிய மேடராசிக்குள் பிரவேசிக்கிறார். இத்தினத்தையே எமது மூதாதையர் எமது வருடப்பிறப்பாகக் கணித்துக் கொண்டாடுகிறார்கள். மேலும் உலகில் உள்ள சகல நிகழ்வுகளுக்கும் சூரியனே காரணமாக இருப்பதால் அவர் முதலாவது வீடான மேடராசியில் பிரவேசிக்கும் பொழுது பூரண கும்பங்கள் வைத்துப் பால் பொங்கல் பொங்கிப் படைத்து வரவேற்கப்படுகின்றார்.



### சித்திரா பூரணை

வருடம் பிறந்து முதலாவதாக வரும் பூரணை என்பதோடு எமது தலை விதியை நிர்ணயிக்கும் எமது வாழ் நாள் கணக்குகளை எழுதிப் பேணும் யமதர்மராஜனின் கணக்குப் பிள்ளையாகிய சித்திரகுப்தர் திருவவதாரம் செய்த நாளுமாகும்.

தமது தாயை இழந்தவர்கள் இத்தினத்தில் தாயை நினைத்து விரதமனுட்டித்துப் பிரார்த்தனை செய்வதால் அன்னாரின் ஆன்மா சாந்தி பெறுகின்றது.

### சித்திரைத் திருவோணம்

ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு வருடத்தில் செய்யப்படும் ஆறு அபிஷேகங்களில் வருடம் பிறந்து முதல் வருகின்ற அபிஷேகம் சித்திரைத் திருவோணத்தில் நிகழ்கின்ற படியால் இத்தினம் வழிபாட்டிற்குரிய முக்கிய தினமாகும்.

## வைகாசி

### விசாகம்

அசுரர்களை அழித்தொழித்துத் தேவர்களைக் காத்தருளியதன் மூலம் அதர்மத்தை ஒழித்துத் தர்மத்தை நிலை நாட்டியது மட்டுமன்றி முழு உலகமுமே உய்வடையும் பொருட்டுச் சரவணப் பொய்கையில் முருகப் பெருமான் திருவவதாரம் செய்த தினமாகையால் முருக வழிபாட்டிற்குச் சிறந்த தினமாகும்.

## ஆனி

### உத்தரம்

எமது இறைவனாகி சிவபெருமான் நடராஜர் என்ற நாமத்தில் தனது அடியார்களுக்காகத் தில்லையில் திரு நடனம் புரிந்தது இத்தினத்திலாகும். தனது திரு நடனத்தின் மூலம் எம்பெருமான் பஞ்சகிருத்தியங்களையும் புரிகிறார். இத்தினம் நடராஜர் தரிசனத்திற்குச் சிறந்த நாளாகும்.

## ஆடி

### ஆடிப்பிறப்பு

ஆடி பிறக்கும் பொழுது மாரியும் பிறக்கிறது என எமது மூதாதையர் நம்பினார்கள். எமது சீவியத்திற்குத் தேவையான விளைபொருட்களை விளைவிப்பதற்கு மாரி இன்றியமையாததாகையால் ஆடிப்பிறப்பைக் கொண்டாடி மாரி காலம் வரவேற்கப்படுகின்றது. ஆடி மாதத்தில்தான் எமக்கு தேவையான விளை பொருட்களுக்கும் வித்திடப்படுகின்றது. இவை காரணமாக ஆடிப்பிறப்பு முக்கியத்துவம் பெறுகின்றது.

### ஆடிச் செவ்வாய்

இத்தினம் அம்பாள் தரிசனத்திற்குச் சிறந்த நாளாகும். விவாகமாகாத கன்னிப் பெண்கள் இத்தினத்தில் விரதமிருந்து அம்பாள் தரிசனத்தில் ஈடுபடுவதன் மூலம் மாங்கலியப் பாக்கியம் கிடைக்கப் பெறுவர்.

### ஆடி அமாவாசை

இத்தினம் பிதிர்க்கடன் செய்வதற்குச் சிறந்த நாளாகும். தந்தையை இழந்தவர்கள் இத்தினத்தில் விரதமிருந்து வழிபாட்டிலீடுபட்டுத் தானங்கள் செய்வதால் பிரிந்த ஆன்மாக்கள் ஈடேற்றம் அடைகின்றன.

### ஆடிப்பூரம்

உலக மாதாவாகிய உமாதேவியார் ருதுவாகிய தினமான இத்தினம் அம்பாள் விரதத்திற்கும் தரிசனத்திற்கும் உகந்த நாளாகும்.

## ஆவணி

### சதுர்த்தி

ஆவணி மாதத்துப் பூர்வ பக்கச் சதுர்த்தி விநாயகப் பெருமான் திருவவதாரம் செய்த தினமாகையால் விநாயக விரதத்திற்கும் வழிபாட்டிற்கும் சிறந்த நாளாகும்.

விநாயக விரதங்களில் முதன்மை பெற்றது விநாயக சதுர்த்தியாகும். இது ஆவணி அமாவாசை கழிந்த 4ம் நாள் அமையும் விரதமாகும். இத்தினத்தில் விரதம் அனுட்டித்து உள்ளன்போடு வழிபடுவோர்க்கு விநாயகர் திருவருள் கடாட்சம் கிடைக்கும் என்பது உறுதி.



### ஆவணிச் சதுர்த்தசி

ஸ்ரீ நடராஜப் பெருமானின் ஆறு அபிஷேகங்களில் இத்தினத்தில் நடைபெறும் அபிஷேகமும் ஒன்றாகையால் இத்தினம் நடேசர் தரிசனத்திற்குச் சிறந்ததாகும்.

### ஆவணி மூலம்

மாணிக்க வாசக சுவாமிகளைப் பாண்டிய மன்னன் சிறையிலிட்டுத் தண்டனை விதித்த சமயம் சுவாமியவர்களை விடுவிப்பதற்காகச் சிவபெருமான் காட்டிலுள்ள நரிகளைப் பரிகளாக்கிக் கொண்டு வந்து அவரைச் சிறையினின்றும் மீட்டது ஆவணி மாதம் மூல நட்சத்திரத் தினமாகும். இதன் காரணமாக இத்தினம் விழாவெடுத்துக் கொண்டாடப்படுகின்றது.

### ஆவணி ஞாயிறு

எல்லா மாதங்களிலும் ஞாயிறு வருகின்ற போதிலும் ஆவணி மாதத்தில் வரும் ஞாயிற்றுக்கிழமை சூரிய விரதத்திற்கும் வழிபாட்டிற்கும் சிறந்ததாகும்.

## புரட்டாதி

### புரட்டாதிச் சனி

பொதுவாகச் சனிக்கிழமை சனீஸ்வர வழிபாட்டிற்கான நாளாக இருந்தபோதிலும் புரட்டாதி மாதத்தில் வரும் சனிக்கிழமைகளில் அனுட்டிக்கப்படும் விரதமும் வழிபாடும் மேலான பலனைத் தர வல்லனவாகையால் இத்தினம் சனீஸ்வர வழிபாட்டிற்குச் சிறப்பான நாளாகும்.

### நவராத்திரி

புரட்டாதி மாதத்தில் பூர்வ பக்கப் பிரதமை தொடக்கம் நவமி வரையுள்ள ஒன்பது நாட்கள் நவராத்திரி காலமாகும். இக்காலம் சக்தி வழிபாட்டிற்குச் சிறந்த காலமாகையாலும் சக்தியில்லாது உலகில் எதுவுமியங்க முடியாதவகையாலும் இக்காலத்தில் முதல் மூன்று நாட்களும் வீரத்திற்குரிய துர்க்காதேவிக்கும் அடுத்த மூன்று நாட்களும் செல்வத்திற்குரிய இலக்குமி தேவிக்கும் கடைசி மூன்று நாட்களும் கல்விக்குரிய சரஸ்வதி தேவிக்கும் பூசை செய்து வழிபாடு நடத்தப்படுகின்றது.

இதில் பத்தாவது நாளாகிய விஜயதசமி நற்கருமங்கள் ஆரம்பிப்பதற்குச் சிறப்பாகச் சிறுவரின் வித்தியாரம்பத்திற்கு உகந்த நாளாகும்.

### கேதார கௌரி விரதம்

இவ்விரதம் விஜயதசமிக்கு அடுத்த நாள் ஆரம்பமாகி அடுத்த அமாவாசையில் நிறைவு பெறும். இது அம்பிகையின் விரதங்களுள் மிகச் சிறந்த விரதமாகும். திருமணமாகிய பெண்கள் தங்கள் மாங்கல்யம் தொடர்ந்து மங்கலமாக இருக்க வேண்டுமென்றும் திருமணமாகாத கன்னிப் பெண்கள் நல்ல மணமகனை வேண்டியும் அனுட்டிக்கும் விரதமாகும்.

### மகாளயம்

மகாளய பட்சம் புரட்டாதி அமாவாசையன்று முடிவடையும் அதற்கு முந்திய பதினைந்து நாட்களாகும். இது பிதிர்களை நினைத்து அவர்களுக்காகச் செய்யப்படும் தானமாகும். பிதிர்களை நினைத்து மாதந் தோறும் தானம் செய்ய முடியாதவர்கள் இந்தக் காலத்தில் தானங்களைச் செய்வதால் பன்னிரண்டு மாதங்களிலும் செய்த பலனைக் கொடுப்பதாகும்.

### பூர்வ பக்க சதுர்த்தசி

நடராஜப் பெருமானின் ஆறு அபிஷேகங்களில் இத்தினத்தில் நடைபெறும் அபிஷேகமும் ஒன்றாகும். இத்தினம் நடேசர் தரிசனத்திற்குச் சிறந்த நாளாகும்.

## ஐப்பசி

### ஐப்பசி வெள்ளி

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் விசேடமான தினங்களாக இருந்த போதிலும், ஐப்பசி மாதத்தில் வரும் வெள்ளிக்கிழமை வழிபாட்டிற்கும் விரதத்திற்கும் சிறப்பானவையாகும்.

### ஸ்கந்த சஷ்டி

இது ஐப்பசி மாதப் பூர்வ பக்க பிரதமை முதல் "சஷ்டி வரையுள்ள ஆறு நாட்கள் அடங்கிய காலமாகும். முருகப் பெருமானை நினைந்து அனுட்டிக்கப்படும் விரதங்களில் மிக மேலான விரதம் ஸ்கந்த சஷ்டிவிரதமாகும்.



இவ்விரதத்தை ஆகக் குறைந்தது ஆறு வருடங்களுக்கு முறைப்படி அனுட்டித்து வந்தால் நாம் இம்மையில் வேண்டியவற்றைப் பெற்று இன்புற்றிருந்து மறுமையில் பேரின்பப் பெருவாழ்வு பெற்று உய்வடைவோம்.

ஸ்கந்தசஷ்டி காலத்தில்தான் முருகப் பெருமான் சூரபத்மனை அழித்ததன் மூலம் அதர்மம் அழிக்கப்பட்டு தர்மம் நிலை நாட்டப்பட்டது.

### தீபாவளி

ஐப்பசி மாதத்தில் அமாவாசைக்கு முதல் நாளாகிய சதுர்த்தசி பொருந்திய விடியற்புற நேரம் தீபாவளிக் காலமாகும். வீடுவாசல் அக்கம் பக்கம் எல்லா இடங்களிலும் தீபங்கள் ஏற்றப்படுவதால் இந்நாளுக்குத் தீபாவளி என்று பெயர் வந்ததாகச் சைவப் பெரியார் சிவபாத சுந்தரனார் கூறுகிறார். அன்றைய தினம் காலையில் ஸ்நானம் செய்து கோவிலுக்குச் சென்று தரிசனம் செய்து புண்ணியச் செயல்கள் செய்ய வேண்டும். உபவாச விரதம் அனுட்டித்தல் உத்தமம். இந்த நாள் ஆன்மாக்கள் நரக வழியினின்றும் நீக்கப்படும் நற்பாக்கிய நிலையைக் குறிப்பதாகும். எனவே பாதகத் தொழில்களினின்றும் விலகியிருத்தல் சகலரதும் கடனாகும்.

இப்பெருநாள் ஐப்பசி மாதத்தின் அபரபட்ச சதுர்த்தசி திதியன்று, அனைவரும் புனிதமானவராய் இறைவனைப் பிரார்த்திக்கும் திருநாளாகும். இந்நாளில் நரகாசுரன் என்ற அசுரன் கொடுமைகளுக்கெல்லாம் தலைவணங்கி பஞ்சமா பாவங்களையும் செய்து வந்தான். இவனுடைய கொடுமை தாங்காது தேவர்கள் விஷ்ணு பகவானிடம் சரணடைந்து, தம்மைக் காக்க வேண்டி நிற்க, அதற்கிணங்கி எம்பிரான் அவனைச் சம்ஹாரம் செய்ய, இறக்கும் தருணத்தில் தன் தவறை உணர்ந்த அசுரன், தான் செய்த அனைத்துப் பாவங்களுக்கும் விமோசனம் கிடைக்கும் பொருட்டு, தான் இறக்கும் இந்நாளில் இறைவா நான் எனக்காக எதுவும் கேட்கவில்லை. நான் செய்த பாவங்களுக்குப் பரிகாரமாக இன்றைய நாளில் யார் ஆசாரமுள்ளவராய், பஞ்சமா பாவங்களையும் விடுத்து உன்னைத் தியானித்து பூஜிக்கின்றார்களோ அவர்களுக்கு நரகம் விடுத்துச் சொர்க்கம் கிடைக்க அருள வேண்டும் எனப் பிரார்த்திக்க இறைவனும், அவனுக்கு அருள் வழங்கி, மோட்சம் கொடுத்தார். இந்நாளில் உபவாசமிருந்து விஷ்ணு நாமங்கள் ஜெபித்து, விஷ்ணு தரிசனம் செய்வோருக்கு, வைகுண்டமோட்சம் கிடைக்கும் என்பது புராணங்களின் துணிபு. இதைப் புரியாத நம்மவர், தீபாவளி நாளில் உயிர்ப்பலி செய்து, புசித்து, மதுஅருந்தி, பல பாவங்களையும் மேற்கொள்வது அறியாமையாகும். இனிவரும் நாட்களிலாவது, எம்மவர்கள் இப்படியான பாவச் செயல் விடுத்து நற்செயலும் நற்கதியும் பெறுக.

# கார்த்திகை

### திருக்கார்த்திகை விளக்கீடு

முன்னொரு காலத்தில் தேவர்கள் சிவபிரானை வேண்டித் த்வம் செய்து பலவகையான வரங்களைப் பெற்றனர். பின் ஆணவ மலமமதையால் இறைவனை மதியாது மயக்குற்றனர். அப்பொழுது சிவபிரான் அவர்கள் முன் ஒரு கிழவனாகக் காட்சியளித்து ஒரு தும்பை ஓர் இடத்தில் நட்டுவிட்டு இதையாராவது பிடுங்குங்கள் என்று கூறினார். ஒருவராலும் அதைப்பிடுங்க முடியவில்லை. ஆணவமமதை அடங்கிக் கிழவனைப் பார்த்தனர். அப்பொழுது அவர் சோதிவடிவாய் நின்றனர். அன்றைய தினம் கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நட்சத்திரம் கூடிய பௌர்ணமி நாளாகும். இத்தினமே விளக்கீடு எனக் கொண்டாடப்படுகின்றது.

### விநாயக விரதம்

இவ்விரதம் கார்த்திகை மாதக் கார்த்திகை நட்சத்திரம் கழிந்த மறுநாள் ஆரம்பித்து 21வது நாளாகிய சதய நட்சத்திரமும் ஷஷ்டித்திதியும் கூடிய நாளில் நிறைவு பெறுவதாகும். விநாயக விரதங்களில் மிகச் சிறப்பான விரதமாகும். இந்நாள் தான் விநாயகப் பெருமான் கஜமுகதரனைச் சம்சாரம் செய்த நாளுமாகும்.

### சோமவாரம்

கார்த்திகை மாதத்தில் திங்கட்கிழமைகளில் பகல் முழுவதும் உபவாசமிருந்து சிவபெருமானைச் சிந்தித்து வழிபாட்டில் ஈடுபட்டு இரவு மடும் ஒரு வேளை உணவு உண்ணல்.

# மார்கழி

### மார்கழி மாதமும் திருவெம்பாவையும்

மாதங்களில் சிறந்தது மார்கழி. மாதங்களில் தான் மார்கழி என்று கிருஷ்ண பகவான் கீதா உபதேசத்தில் கூறுவதிலிருந்து இதன் மகிமையை அறியலாம்.

மேலும் மார்கழி தேவர்களுக்கு விடியற்காலம் எனவே இறைவனை நினைத்து திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவை ஆகியன பாடுவதற்கு மார்கழி உகந்த மாதமாகும்.



மேலும் மார்கழியில் நிகழும் விழா இறைவனின் ஐந்தொழில்களில் அனுக்கிரகத்தைக் குறிப்பதாகையால் இவ்விழா எல்லா விழாக்களிலும் சிறப்புடையதாகும். மார்கழி திருவாதிரையில் நடைபெறும் நடேசர் அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆருத்திரா தரிசனமும் ஆன்ம ஈடேற்றத்துக்கு இன்றியமையாதனவாகும்.

# தை

### தைப்பொங்கல்

உலகத்திலே மாரியுண்டாவது சூரியனினால். பயிர்கள் விளைவது மாரியினால். எனவே எமக்குத் தேவையான அனைத்தையும் கொடுப்பவர் சூரிய பகவான். ஆடியில் விதைக்கின்ற பயிர்கள் எல்லாம் மாரி காலத்தில் வளர்ந்து முற்றி தை மாதத்தில் அறுவடை செய்யப்படுகின்றன. எமது சீவியத்திற்குத் தேவையான உணவுப் பொருட்களை விளைவித்து கொடுத்த சூரியனுக்கு நன்றிக் கடன் செலுத்துவதற்காக தை முதல் நாள் பூரண கும்பம் வைத்து வரவேற்றுப் புதிதாக அறுவடை செய்த அரிசியில் பாற்பொங்கல் பொங்கிப் படைத்து நன்றிக் கடன் செலுத்தப்படுகின்றது.

### தைப்பூசம்

தை மாதம் பூரணையுடன் சேர்ந்து வரும் பூச நட்சத்திர தினம் முருக வழிபாட்டிற்குச் சிறந்த நாளாகும்.

### தை அமாவாசை

இத்தினத்தில் தான் அபிராமிப் பட்டரின் பிரார்த்தனையின் நிமிர்த்தம் அம்பிகையின் அருளால் பூரணை தினமாகக் காட்சியளித்தது.

# மாசி

### மகா சிவராத்திரி

சிவ விரதங்களுள் சிறந்தது சிவராத்திரி மகா சிவராத்திரி மாசிமாத கிருஷ்ண பட்ச திரியோதசி மருவிய சதுர்த்தித்திதி கூடிய தினத்தன்று வருகின்றது. சதுர்த்தசி சிவதோற்றமும் திரயோதசி சக்தி தோற்றமும் கொண்டவை.

சிவராத்திரியின் தோற்றம் பற்றிய வரலாறு கந்தபுராணத்தில் பின்வருமாறு கூறப்படுகின்றது.

ஒரு நாள் பிரமதேவரும் விஷ்ணுவும் தமக்குள் யார் பெரியவர் என்று வாதம் செய்து கொண்டிருந்த சமயம் சிவபெருமான் அவர்கள் இருவருக்கும் நடுவில் ஒரு சோதிப்பிளம்பாகத் தோன்றி அதன் அடியையும் முடியையும் யார் காண்கிறாரோ அவரே பெரியவர் என்று கூற பிரமன் முடியையும் விஷ்ணு அடியையும் தேடிக் காண முடியாது தங்களிலும் மேலான ஒன்று உண்டு என்பதை உணர்ந்து சோதியை துதித்து நின்றனர். அச்சமயம் சிவபெருமான் தனது உருவைக் காட்டி அவர்களுக்கு வேண்டிய வரங்களைக் கொடுத்து அன்றைய தினம் சிவராத்திரி என்று அழைக்கப்படுமென்றும் அத்தினத்தில் தன்னை உள்ளன்போடு வழிபட்டு விதிப்படி விரதம் அனுஷ்டிப்பவர்கள் யாராக இருந்தாலும் தன்னை அடைவர் என்று திருவாய் மலர்ந்தருளினார். சிவபெருமான் ஜோதியாகத் தோன்றிய இரவு சிவராத்திரி என்றும் ஜோதியுள் சிவலிங்கமாகக் காட்சியளித்த நேரம் இலிங்கோற்பவ காலம் என்றும் போற்றப்படுகின்றது.

### *மாசி மகம்*

மகமும் சதுர்த்தியும் கூடிய நாளான இத்தினம் நடராஜப் பெருமானின் ஆறு அபிஷேகத் தினங்களில் ஒன்றாகையால் நடேசர் தரிசனத்திற்குச் சிறந்த நாளாகும்.

## பங்குனி

### *உத்தரம்*

உலக மாதாவாகிய உமாதேவியார் மலையரசன் மகளாக திருவவதாரம் செய்து சிவபெருமானைத் திருமணம் செய்தது இத்தினமாகும். இத்தினம் விழா எடுப்பதற்கும் தரிசனத்துக்கும் சிறந்த நாளாகும்.

### *பங்குனித் திங்கள்*

பங்குனித் திங்கள் அம்பிகை வழிபாட்டிற்குச் சிறந்த நாளாகும்.



உ
சிவமயம்

# சைவசமயவியல்

(இப்பொருள் பற்றி சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரனார் சைவக்கிரியை விளக்கம் என்ற நூலில் எழுதிய ஓர் அத்தியாயத்தை இங்கே தருகின்றோம்)

*கடவுள் :* கடவுள் ஒருவரே, அவர் சிவம் எனப்படுவர். அவர் எங்களுடைய மனத்துக்கு எட்டாதவர். அவர் வடிவம் முதலியவற்றிற்கு அப்பாற்பட்டவர். அவரை அவருடைய திருவருட் செயல்களினால் ஒருவாறு அறியலாம்.

*திருப்பெயர்கள் :* திருவருட்சத்திக்கு உமாதேவி என்று பெயர். உமாதேவிக்கு இலக்குமி, சரஸ்வதி என்ற பெயர்களுமுண்டு. சிவபெருமான் சத்தியினாற் பல்வேறு தொழில்களைச் செய்வர். வெவ்வேறு தொழில் செய்தலினால் வெவ்வேறு பெயர் உண்டு. படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்றையும் செய்யும் போது பிரமா, விஷ்ணு, உருத்திரன் என்ற பெயர்கள் உண்டு. அவற்றைச் செய்யுஞ் சத்திகளுக்கு ஜனனி, ரோதயித்திரி, ஆரிணி என்று பெயர். உயிர்களுக்கு அறிவைக் கொடுக்குஞ் சத்திக்கு ஞானசத்தி என்று பெயர். முத்தொழிலுஞ் செய்யுஞ் சத்திக்குக் கிரியாசத்தி என்று பெயர். பிரபஞ்சத்தை ஆளும் சத்திக்கு இச்சாசத்தி என்று பெயர். பிரபஞ்சத்துக்கு மூலமாகிய மகாமாயைக்குத் தலைவராய் இருப்பதாற் சிவபெருமானுக்கு விநாயகர் என்று பெயர். குருவாயிருந்து மெய்யறிவை ஊட்டுதலால் தஷ்ணாமூர்த்தியென்றும், சுப்பிரமணிய மூர்த்தி என்றும் பெயர். உலகத்தைக் காக்குஞ் சத்தி பத்து மூர்த்திகளையுடையது. மேற்பக்கத்தைக் காக்கும்போது பிரமா என்றும், கீழ்ப்பக்கத்தைக் காக்கும்போது விஷ்ணு என்றும், கிழக்கு முதல் எட்டுத் திக்குகளையும் காக்கும் போது இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்றும் பெயர். இந்த மூர்த்தங்கள் உலக பாலகர் எனப்படுவர். இவர்களுக்கு ஆயுதமென்று சொல்லப்படுவனவும் அவருடைய சத்தியின் ரூபங்களே. அவையாவன: முறையே பதுமம், சக்கரம், வச்சிரம், சத்தி, தண்டம், வான், பாசம், துவசம், கதை, சூலம் என்பன. இவைகள் தசாயுதம். (தச ஸ்ரீ 10) வைரவர், வீரபத்திரர் முதலியனவும் சிவபெருமானுக்குள்ள பெயர்களே. பெயர்கள் பலவாயினும் கடவுள் ஒருவரே. ''ஒருவர் தாம்பலபேருளர் காண்மினே'' என்றார் திருநாவுக்கரசர்.

**சிவமூர்த்தங்கள் :** கடவுள் உருவம் இல்லாதவராயினும் அவரை நினைத்தற்காகவும் வணங்குவதற்காகவும் உருவஞ் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த உருவத்தின் பகுதிகள் அவருடைய தன்மைகளையே குறிப்பன. அவர் ஐந்து முகமுடையவராகத் தியானிக்கப்படும்போது அம் முகங்களுக்கு ஈசானம். தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்று பெயர். இவைகள் முறையே அருளல், மறைத்தல், அழித்தல், காத்தல், படைத்தல் ஆகியவற்றைச் செய்யும் திருவருளைக் குறிக்கும். இருதயம் மெய்ப்பொருளாதலையும், சிரசு நித்தியானந்தத்தையும், சிகை (முடி) ஆன்மாக்களை வசப்படுத்தும் சத்தியையும், கவசம் இரட்சிக்கும் சத்தியையும், நேத்திரம் (கண்) சகத்துக்குக் காரணமாயிருக்கும் சத்தியையும், அத்திரம் பொய்யறிவை நீக்கும் சத்தியையும் குறிப்பன. ஐந்து முகங்களும் பஞ்சப்பிரமம் என்றும், ஆறு அங்கங்களுக்கும் ட்டங்கமென்று பெயர்பெறும். (பஞ்ச ஸ்ரீ ஐந்து, ட் ஸ்ரீ ஆறு) ஆன்மாக்கள் சிவஞானத்தைப் பெற்று, சிவத்தன்மையடைந்து சிவபெருமானை அறியும் வரைக்கு அருள் வடிவங்களையே பூசிக்கவும் தியானிக்கவும் வேண்டும்.

**கடவுளின் மந்திரங்கள் :** எவற்றிலும் மேலானதாகிய மூல மந்திரம் ஐந்தெழுத்தெனப்படும். ஐந்து முகங்களினுடைய பெயர் சார்ந்த மந்திரங்கள் பிரம மந்திரங்கள். ஆறு அங்கங்கள் சார்ந்தவை அங்க மந்திரங்கள். இப்பதினொரு மந்திரங்களும் சங்கிதை மந்திரமெனப்படும். (சங்கிதை ஸ்ரீ தொடுத்துவருவன.) இவைகள் ஏழுவகை முடிபுகளையுடையன. நம ஸ்வதா, ஸ்வாஹா, பட், வட், வௌட், ஹீம்.

**ஆன்மாக்கள் :** ஆன்மாக்கள் பல. அவைகள் என்றுமுள்ளவை. அறியும் வல்மையுடையன. இயல்பாக மலத்தொடர்புடையவை. சிவபெருமானது திருவருளால் மலப்பற்றினின்றும் நீங்கிச் சிவத்தன்மை அடையத்தக்கவை. சிவத்தன்மையை அடைய முன் அளவில்லாத பிறவிகளை எடுப்பவை.

**மலங்கள் :** மலங்கள், ஆணவம், கர்மம், மாயை என்பவை. ஆணவம் பொய்யறிவைக் கொடுப்பது. கர்மம் ஆன்மாக்கள் செய்யும் வினை. மாயை உலக அறிவாகிய சிற்றறிவைக் கொடுப்பது. இதைக் கொண்டு உடம்புகளும் உலகங்களும் கடவுளால் தோற்றுவிக்கப்படும். ஆணவச் செயல்களின் பயனை அனுபவித்தலால் ஆணவம் வலி குறையும். கடவுளுடைய திருவருள் வழிநின்று செய்வனவற்றால் மெய்யறிவு பொலியும். மாயையிலே சுத்தமாயை, அசுத்தமாயையென இரு பகுதிகளுண்டு. சுத்த மாயையிலிருந்து தோன்றுஞ் சிவ தத்துவங்களனைத்தும் ஆன்மாவுக்கு அன்பையும் அறிவையும்



வல்லமையையும் கொடுப்பன. அசுத்தமாயையினின்று வித்தியாதத்துவங்கள் எழும். ஆத்ம தத்துவங்கள் இருபத்தினாலும் தோன்றும். வித்தியா தத்துவங்கள் ஆத்ம ததுவங்களை நடத்துவன. மாயையிலிருந்து தூலம், சூக்குமம், காரணம் ஆகிய மூவகையும் புகழும் உலகங்களும் ஆக்கப்படும்.

**தேவர் அசுரர் :** தேவர்களும் அசுரர்களும் மிக்க வல்லமையுள்ள பிறவிகள். ஆயினும் மெய்யறிவினாலுண்டாகும் குணத்தைத் தேவர்களென்றும் பொய்யறிவினால் உண்டாகும் குணத்தை அசுரர் என்றும் உருவகமாகக் கூறுவதுமுண்டு. ஒருவன் ஒரு காரியத்தைச் செய்யக் கருதும் போது மெய்யறிவு ஒரு பக்கத்தும் பொய்யறிவு எதிர்ப்பக்கத்தும் அவனை இழுக்கும். இதைத் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் இடையில் உண்டாகும் போர் என்று சொல்லுவர்.

**உருத்திரர் :** உருத்திரராவார் உருத்திரனென்னும் சிவமூர்த்தியினது சிறந்த அருளைப் பெற்றவர். அவர்களின் பெயர் மஹாதேவர், ஹரர், உருத்திரர், சங்கரர், நீலலோகிதர், ஈசானர், விஜயர், பீமர், தேவதேவர், பவோற்பவர், கபாலீசர் என்பன.

**வித்தியேசுவரர் :** வித்தியேசுவரராவார், மகேசுவரருடைய சிறந்த திருவருளைப் பெற்றோர், இவர்கள் மந்திரங்களுக்குத் தலைவராதலால் வித்தியேசுவரர் எனப்படுவர். (வித்தை ஸ்ரீ மந்திரம்) அவர்களின் பெயர் : அநந்தர், சூஷ்மர், சிவோத்தமர், ஏகநேத்ரர், ஏகருத்ரர், திரிமூர்த்தி, ஸ்ரீகண்டர், சிகண்டி.

## அனுட்டான விதி

### பூமி சுத்தி

அஸ்திராய படு என்று தானிருக்கும் பூமியைச் சலத்துளியினாலே தெளிக்க

கணபதி குரு வந்தனம்
கணபதயே நம என்று குட்டி
குருப்பியோ நம என்று கும்பிடுக.

### சல சுத்தி

அநுட்டான சலத்தை நமசிவாய என்று வலக்கைச் சுட்டுவிரல், நடுவிரல்களை உள்ளே மடக்கிப், பெருவிரலுக்கும் அணிவிரலுக்கும் நடுவாக நிர்ணமும், அஸ்திராய படு என்று பெருவிரனுதியையுஞ் சுட்டுவிரனுதியையும் சேர்த்து ஒலியெழுப்புதலினாலே திக்கு பந்தனமும், கவசாய வௌஷடு என்று நீட்டிய சுட்டி விரலினாலே அவகுண்டனமுஞ் செய்க.

கொழும்பு தமிழ்ச் சங்கம்

## ஆசமனம்

ஆத்தும தத்துவாய சுவதா
வித்தியா தத்துவாய சுவதா
சிவ தத்துவாய சுவதா

என்று பெருவிரலடியிற் சார்ந்த உழுந்தமிழ்ந்து சலத்தினால் ஆசமனஞ் செய்து, அஸ்திராய படு என்று அதரங்களிரண்டையும் பெருவிரலடி கொண்டு இடமாக இரண்டு தரமும் உள்ளங்கை கொண்டு கீழாக ஒரு தரமும் துடைத்துக் கை கழுவி, இருதயாய வௌஷடு என்று பெருவிரலோடு கூடிய அணிவிரலினால் முகம், வலமூக்கு, இடமூக்கு, வலக்கண், இடக்கண், வலக்காது , இடக்காது, கொப்பூழ், மார்பு, வலத்தோள், இடத்தோள், சிரசு என்னும் இப்பன்னிரண்டு இடங்களையும் தொட்டு விடுக.

## விபூதி சுத்தி

விபூதியை வலக்கைப் பெருவிரல் நடுவிரல் அணிவிரல்களால் எடுத்து இடக்கையில் வைத்துக் கொண்டு, அஸ்திராய படு என்று விபூதியிலே சலத்தைத் தெளித்து, அவ்விபூதியில் ஒரு சிறு பங்கைப் பெருவிரல் அணிவிரல்களினாலே தொட்டு, அஸ்திராய உம் படு என்று இராஷதர் பொருட்டு நிருதி மூலையிலே தெளித்து, விபூதியை நமசிவாய என்று நிரீஷணமும், அஸ்திராய படு என்று திக்குப தனமும், கவசாய வௌஷடு என்று அங்குண்டனமுஞ் செய்து வலக்கையால் மூடிக்கொண்டு, ஈசானாய நம என்பது முதலிய பதினொரு மந்திரத்தாலும் அபிமந்திரிக்க.

## விபூதி ஸ்நானம்

வலக்கையின் பெருவிரல் அணிவிரல்களால் விபூதித் துளியை எடுத்து, அஸ்திராய படு என்று தலை தொடங்கிக் காலளவும் புசி, இடக்கையில் உள்ள விபூதியைப் பெருவிரலோடு கூடிய நடு விரலினாலே இருதயாய நம என்று சலம் விட்டு கவசாய வௌஷடு என்று குழைத்து நடுவிரல் மூன்றினாலும் ஈசானாய நம என்று சிரசிலும், தத்புருஷாய நம என்று நெற்றியிலும், அகோராய நம என்று மார்பிலும் வாமதேவாய நம என்று தொப்பூழிலும், சத்தியோசாதாய என்று வலமுழந்தாள், இடமுழந்தாள் வலப்புயம், இடப்புயம், வலமுழங்கை, இடமுழங்கை, வலமணிக்கட்டு, இடமணிக்கட்டு, வலவிலா, இடவிலா, முதுகு, கழுத்து என்னும் மற்றையிடங்களிலுந் திரிபுண்டரமாகத் தரிக்க.



## மந்திர ஸ்நானம்

எஞ்சிய விபூதியோடு கைந்நிறையைச் சலம் விட்டுக் கும்பக முத்திரையாகப் பிடித்துக் கொண்டு., ஈசானாய நம என்பது முதலிய ஐந்து மந்திரத்தை உச்சரித்துச் சிரசிலே, புரோஷித்து விட்டுக் கைகழுவுக.

## ஆசமனம்

முன்போல ஆசமனஞ் செய்க.

## பிராணாயாமம்

வலக்கையிற் சுட்டு விரலையும், நடுவிரலையும் உள்ளே மடக்கிப் பெருவிரலினால் வலமூக்கைப் பிடித்துக் கொண்டு ஒரு தரமும். பெருவிரல் அணிவிரல்களினால் வல இட மூக்குகளைப் பிடித்துக் கொண்டு ஒரு தரமும், அணிவிரலினால் இடமூக்கைப் பிடித்துக் கொண்டு ஒரு தரமுமாக ஈசானாய நம என்பது முதலிய பதினொரு மந்திரத்தை மூன்று தரம் உச்சரித்து நமசிவாய என்று வலக்காதைப் பொத்துக.

## சிவதீர்த்த கரணம்

இருதயாய வௌஷடு என்று புருவ நடுவில் உள்ள அமிர்தத்தை நுதிவளைந்த சுட்டுவிரலினால் எடுத்துச் சலத்தினிடத்தே வைத்து, நமசிவாய என்று அபிமந்திரித்து அஸ்திராய படு என்று திக்கு பந்தனம் கவசாய வௌஷரு என்று வகுண்டனமுஞ் செய்க.

## மந்திராபிஷகம்

வலக்கையினாற் சலத்தை அள்ளி இடக்கையில் விட்டுக் கும்பக முத்திரையாகப் பிடித்துக் கொண்டு ஈசானாய நம என்பது முதலிய பதினொரு மந்திரத்தை உச்சரித்துச் சிரசிலே புரேரிக்க.

## மார்ச்சனம்

சலத்தை வலக்கையால் மூடி, ஈசானாய நம என்பது முதலிய பதினொரு மந்திரத்தினால் அபிமந்திரித்து, வலக்கையினாலே சலத்தை எடுத்து இடக்கையில் விட்டு வைத்துக் கொண்டு , அவ்விடக்கையினின்றுங் கீழே ஒழுகுகின்ற சலத்தை வலக்கையினாலே, ஈசானாய நம வௌஷடு என்பது முதலிய பதினொரு மந்திரத்தினாலே சிரசின் மேலே தெளித்து விடுக. எஞ்சிய சலத்தை இடக்கையினின்றும் வலக்கையில் விட்டு, மூக்குக்குச் சமீபத்திலே பிடித்துக் கொண்டு அந்தச் சலம் வெண்ணிறமுடைய தரும வடிவமாகி

இடமூக்கினாலே உள்ளே புகுந்து அங்குள்ள பாவத்தை அழித்ததாகவும், அந்தப் பாவம் மைக்குழம்பு போல வல மூக்கினாலே புறத்தே நீங்கிக் கையிலே வந்ததாகவும் பாவித்து வலக்காற் பெருவிரலிற் சுவாசிக்கும் அக்கினியிலே அஸ்திராய உம்படு என்று புருவ முரிப்புடனே விட்டு, அந்தப் பாவஞ் சாம்பரானதாகப் பாவித்து அஸ்திராயப்படு என்று கை கழுவுக.

## ஆசமனம்

முன்போல ஆசமனஞ் செய்க.

## கவச வேஷட்ணம்

கவசாய வெளஷடு என்று வலக் கையிற் சலத்தினாலே தன்னை வலப் பக்கமாகச் சுற்றுக.

## தருப்பணம்

இரண்டு கையும் நிறைந்த சலத்தினாலே நமசிவாய என்று மூன்று தரந் தருப்பணஞ் செய்து, நமசிவாய என்று பத்துத்தரம் செபித்து, நமசிவாய என்று மீண்டும் ஒரு தரம் தருப்பணஞ் செய்து, ஈசாநாய சுவாகா என்பது முதலிய பதினொரு மந்திரத்தினால் ஒரு தரம் தருப்பணஞ் செய்து, உமாதேவியை சுவாகா என்றும், கணபதயே சுவாகா என்றும், சரவணபவாய சுவாகா என்றும் ஒவ்வொரு தரம் தருப்பணம் செய்க.

## ஆசமனம்

முன்போல ஆசமனஞ் செய்க.

## தீர்த்தோப சங்காரம்

முன்னே சலத்திலே வைத்த அமிர்தத்தை இருதயாய வெளஷடு என்று நுதி வளைந்த சுட்டு விரலினால் எடுத்துப் புருவ நடுவிலே ஒடுக்கி விடுக.

## சூரியோபஸ்தானம்

இரண்டு கைந்நிறையைச் சலம் விட்டுப் பிடித்துக் கொண்டு, ஈசாநாய நம என்பது முதலிய பதினொரு மந்திரத்தை உச்சரித்து, சிவசூரியாய சுவாகா என்று ஒரு தரஞ் தருப்பணஞ் செய்க அஸ்திராய படு என்று தான் இருக்கும் பூமியைச் சலத்தினாலே புரேரித்து, வடக்கு முகமாக ஆசனத்திலிருந்து முன்போலக் குட்டிக் கும்பிட்டுப் பிராணாயாமஞ் செய்து சிவபெருமானுடைய உருவத் திருமேனியாகிய உருத்திர வடிவத்தைத் தியானிக்க.



## உருத்திரத் தியானம்

மைக்களமு மான் மழுவும்
வரதமுட னபயமுறும்
மெய்கரமு நாற்புயமும்
விளங்குபணிக் கொடும்பூணுஞ்
செக்கருறு மதிச்சடையுஞ்
சேயிழையோர் பாகமும்
முக்கணிறை யாங்காண
முன்னிற்றே யருள்புரிந்தான்.

இப்படித் தியானித்துக்கொண்டு, சில மூல மந்திரத்தை நூற்றெட்டுத் தரமும், தேவி மூலமந்திரம் கணபதி மூலமந்திரம், சுப்பிரமணிய மூல மந்திரம் என்னும் இவைகளைத் தனித்தனியே பத்துத்தரமும் செபித்துப் பின்பு முன்புபோலக் குட்டிக் கும்பிட்டுப் பிராணாயாமஞ் செய்து தோத்திரம் பண்ணுக.

## சிவ தோத்திரம்

முடிகொண்ட மத்தமு முக்கண்ணி
னோர்க்கு முறுவலிப்புந்
துடி கொண்ட கையுந் துதைத்தவெண்
ணீறுஞ் சுரிகுழலாள்
படிகொண்ட பாகமும் பாய்புலித்
தோலுமென் பாவிநெஞ்சிற்
குடிகொண்ட வாதில்லை யம்பலக்
கூத்தன் குரைகழலே.

கடையவ னேனைக் கருணையி
னாற்கலந் தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண்
டாய்விறல் வேங்கையின்றோல்
உடையவ னேமன்னும் உத்தர
கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேன் எம்பி
ரானென்னைத் தாங்கிக்கொள்ளே.

வேதநா யகனே போற்றி
விண்ணவர் தலைவா போற்றி
மாதொருபாகா போற்றி
மறுசம யங்கண் மாளப்
பேதகஞ் செய்வாய் போற்றி
பிஞ்ஞகா போற்றி யான்செய்
பாதக மனைத்துந் தீர்க்கும்
பராபரா போற்றி போற்றி.

சீராருஞ் சதுர்மறையுஞ்
தில்லைவாழ் அந்தணரும்
பாராரும் புலிமுனியுந்
பதஞ்சலியும் தொழுதேத்த
வாராருங் கடல்புடைசூழ்
வையமெலா மீடேற
ஏராரு மணிமன்று
ளெடுத்த திரு வடி போற்றி.

## தேவி தோத்திரம்

பரந்தெழுந்த சமண்முதலாம்
பரசமய விருணீங்கச்
சிரந்தழுவு சைவநெறித்
திருநீற்றி னொளிவிளங்க
அரந்தைகெடப் புகலியார்கோ
னமுது செயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம
சுந்தரி பூங் கழல் போற்றி.

## விநாயகர் தோத்திரம்

திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவு தீமையைக் காய்க்கவும்
பருவ மாய் நம துள்ளம் பழுக்கவும்
பெருகுமா முத்துப் பிள்ளையைப் பேணுவாம்.



## சுப்பிரமணியர் தோத்திரம்

மூவிரு முகங்கள் போற்றி
முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற
ஈராறு தோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள்
மலரடி போற்றி யன்னான்
சேவலு மயிலும் போற்றி
திருக்கை வேல் போற்றி போற்றி.

## சமய குரவர் நால்வர் தோத்திரம்

பூழியர்கோன் வெப்பொழித்த
புகலியர்கோன் கழல் போற்றி
ஆழிமிசைக் கன் மிதப்பி
லணைந்தபிரா னடிபோற்றி
வாழிதிரு நாவலூர்
வண்றொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாத
வூரர் திருத்தாள் போற்றி.

## அறுபத்து மூவர் தோத்திரம்

தத்து மூதெயின் மூன்றுந் தழலெழ
முத்து மூரன் முகிழ்த்த நிராமய
சித்து மூர்த்திதன் றாளினை சேரறு
பத்து மூவர் பதமலர் போற்றுவாம்.

இப்படித் தோத்திரம் பண்ணி, எழுந்து
இந்திராய நம என்று கிழக்கிலும்,
அக்நயே நம என்று தென் கிழக்கிலும்,
யமாய நம என்று தெற்கிலும்,
நிருதயே நம என்று தென்மேற்கிலும்,
வருணாய நம என்று மேற்கிலும்,
வாயுவே நம என்று வட மேற்கிலும்,
குபேராய நம என்று வடக்கிலும்,
ஈசாநாய நம என்று வடகிழக்கிலும் கும்பிட்டு,

பார்பதீ சமேத பரமேசுவராய நம என்று வடக்கு நோக்கி மூன்று தரஞ் சாட்டாங்கமாக நமஸ்கரித்து, எழுந்து, ஆசமனஞ் செய்க. அஸ்திராய படு என்று இருக்குமிடத்தைச் சலத்தினால் தெளித்து, அதனைத் தொட்டுக் கண்ணிலொற்றிக் கொண்டு சலத்தைத் தூரத்திலே கால்படாதவிடத்தில் விட்டுவிடுக.

# மரணத்தின் பின் மனிதர் நிலை

உலகில் பிறந்த எந்த உயிர்களும் இறப்பது உறுதி. "எப்போதாயினும் கூற்றுவன் வருவான்". 'இறப்பு' என்பது உறங்குவதை ஒக்குமெனவும், 'பிறப்பு' என்பது உறங்கி விழிப்பதைப் போன்றதெனவும் வள்ளுவர் கூறுகின்றார்.

*"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி*
*விழிப்பது போலும் பிறப்பு".*

நாம் காணும் இப்பரு உடலினுள் ஒரு நுண்ணுடல் உளது. அதனைச் சூக்குமசரீரம் என்பர். இதனை யாதனாசரீரம், ஆவி, நுண்ணுடல், உள்ளுடம்பு என்றும் கூறுவர். ஸ்தூலத்திலிருந்து சூக்குமம் பிரிந்து செல்வதைப் 'பாடரக்' என்னும் ஆங்கிலேயர் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார். ஸ்தூலசரீரத்தில் சூக்குமசரீரமும், சூக்குமசரீரத்தில் குணசரீரமும், குணசரீரத்தில் கஞ்சுகசரீரமும், கஞ்சுகசரீரத்தில் காரணசரீரமும் உள்ளன.

சூக்குமசரீரம் கனவு காணும் சரீரம். அதற்கு எவ்வித பாரமும் இல்லை. ஒரு நிழல்போல எங்கும் போக்குவரவு புரியும். காரண உடம்பு உயிரைப் போன்று காணமுடியாததாகும். ஸ்தூல, சூக்கும, உடம்பு வருவதற்குக் காரணம் காரண உடம்பேயாகும். சூக்கும உடல் ஸ்தூல உடலை இயக்குகின்றது. கனவில் ஸ்தூல உடலின் துணை சூக்கும உடலுக்கு வேண்டியதில்லை. ஜாக்கிர நிலையில் இரண்டு உடல்களும் ஒத்து இயங்குகின்றன. சூக்கும உடலின் துணையின்றி கனவு காண முடியாது. நமது ஐம்புலன்களும் உணர்வற்றுக் கிடக்கும் பொழுது சூக்கும உடல் தொழிற்படுகின்றது. உள்ளுடம்பை அழிக்கமுடியாது. அகால மரணம் அல்லது துர்மரணம் அடைந்தோர் சூக்கும சரீரத்தைக் கொண்டு ஆயுள் வரையறுக்கப்பட்ட காலம் வரும்வரை பலவித இன்னல்களை அடைந்து திரிவர்.

ஸ்தூல உடலைவிட்டு உயிர் பிரிவதை மரணம் என்கிறோம். சூக்கும சரீரத்தில் சப்த, ஸ்பர்ச, ரூப, இரஸ, கந்தம் என்ற தன் மாத்திரை ஐந்தும், மனம், புத்தி, அகங்காரம் என்ற மூன்றும் உள்ளன. ஆன்மா செய்த புண்ணிய பாவங்களுக்குத் தக்கவாறு அருள் உலகங்களுக்கோ அல்லது இருள் உலகங்களுக்கோ செல்கின்றது.



*"தான் அவனாகிய தற்பரந் தாங்கினோன்*
*ஆனவை மாற்றி பரமத்தி அடைந்திடும்*
*ஏனை உயிர்வினைக்கெய்தும் இடம் சென்றும்*
*வானும் நிலனும் புகுந்து வருந்துமே"*

(திருமந்திரம்)

அருளாளர்கள் இருள் உலகம் புகாரெனக் குறள் கூறுகின்றது.

*"அருள் சேர்ந்த நெஞ்சினார்கில்லை*
*இருள் சேர்ந்த இன்னா உலகம் புகல்"*

பாம்பு தோலாகிய சட்டையை விட்டுப் போவதைப் போலவும், பறவைகள் முட்டைத் தோட்டினை விட்டுத் செல்வதைப் போலவும், கூடு விட்டுக் கூடு பாய்பவர் அல்லது பரகாயப் பிரவேசிகள் முன் உடம்பினை விட்டு வேறு சரீரத்தில் புகுவது போலவும் உயிர் ஸ்தூல உடம்பினை விட்டுப் பிரிகின்றது.

*"பன்னகம் அண்டசங்கள் பரகாயந் தன்னில் பாய்வோர்*
*துன்னுதோல் முட்டையாக்கை துறந்து செல்வதுவே போல*
*உன்னிய உயிர்கள் தூல உடல்விட்டு வானினூடு*
*மன்னிடும் நனவு மாறிக் கனவினை மருவுமாபோல்".*

(சித்தியார்)

*"குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே*
*உடம்போடு உயிரிடை நட்பு".*

(குறள்)

முட்டையைப் பிரிந்த பறவையும், சட்டையை விட்டு போன பாம்பும் எப்படித் திரும்பவும் முட்டையிலும் சட்டையிலும் நுழையாவோ அது போல ஸ்தூலத்தை விட்டுப் பிரிந்த சூக்கும உடலும் திரும்ப ஸ்தூலத்தில் பிரவேசிக்காது. நனவு மாறிக் கனவு நிலை அடைவதைப் போல ஸ்தூல உடல்விட்டு சூக்கும உடலானது வானினூடு செல்கின்றது. சூக்கும சரீரத்தோடு இருக்கும் ஆன்மாக்களுக்கு ஸ்தூல சரீரத்தோடு இருப்பவர்களிடத்தில் பேசவும், விஷயங்களை அறிவிக்கவும், தொடர்பு வைத்துக் கொள்ளவும் முடியும். மரணத்தின் பின் இருள் உலகம் சார்ந்தவர்களுக்கு எவ்வித விடுதலையும் இல்லை. விருப்பம் போல் போக்குவரவு செய்ய இயலாது. புண்ணியப் பகுதியில் சென்றவர்களுக்குச்

சுதந்திரம் உண்டு. எமலோகம், பிரமலோகம் விஷ்ணுலோகம், சிவலோகம் முதலிய இடங்களுக்குப் போய்வரவும் வழிபடவும் முடியும். சூக்கும உடல்பற்றிச் சென்ற உயிர்கள் புண்ணிய பாவங்களுக்குத் தக்கபடி இன்ப துன்பங்களை நுகர்ந்த பின்னர் ஐசுவரியம் நிரம்பியவர்கள் மனையிலோ தரித்திரமிக்கோர் மனையிலோ வந்து பிறக்கும்.

*"உண்டு நரக சுவர்க்கத்தில் உள்ளன*
*கண்டு விடும் சூக்கம் காரணமாச் செல்ல*
*பண்டு தொடரப் பரகாய யோகிபோல்*
*பிண்டம் எடுக்கும் பிறப்பு இறப்பெய்தியே"*

(திருமந்திரம்)

*"பூதனா சரீரம்போனால் புரியட்ட ரூபந்தானே*
*யாதனா சரீரமாகி இன்பத் துன்பங்களெல்லாம்*
*நாதனார் ஆணையுய்க்சு நரகொடு சுவர்க்கந்துய்த்துத்*
*தீதிலா அணுவாயோநி சேர்ந்திடுஞ் சீவனெல்லாம்".*

(சித்தியார்)

*"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்*
*தெய்வத்துள் வைக்கப் படும்".*

(குறள்)

என்ற குறளுக்கு உரையெழுதிய பரிமேலழகர் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவன் பின் தேவனாய் அவ்வறப் பயன் நுகர்தல் ஒரு தலையாகலின் தெய்வத்துள் வைக்கப்படும் என்றார். இதனால் உத்தம மனிதன் தேவனாவான் என்றும், அறப்பயன் நுகர்தற்குத் தேவர்களின் இடமாகிய தேவலோகம் ஒன்று உளதென்றும் நன்கறியலாம்.

"யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்".

(குறள்)

யான் எனதென்னும் அகங்காரம் இல்லாதவன் வானோர்க்கும் உயர்ந்த உலகத்தை அடைவான் என்பது இக்குறளின் கருத்தாகும். வானோர்க்கும் உயர்ந்த உலகம் என்பதற்கு, வானோர்க்கும் எட்டுதற்கரிய வீட்டுலகம் எனப்



பரிமேலழகரும், தேவர்தம் மேலாகிய உலகத்தின் கண்ணே செல்லும் என மணக்குடவரும், வானோர்க்கு உயர்ந்த சிவலோகம் புகும் எனப் பரிதியாரும், வானோராகிய கடவுளர்க்கெல்லாம் மேற்பட்ட முழுப் பேரின்பமாகிய முத்தியைப் பெறுவான் எனக் காளிங்கரும் உரை கூறுகின்றார்.

*"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்*
*மற்றீண்டு வாரா நெறி".*

(குறள்)

'ஈண்டு வாரா நெறி' என்றது பிறப்பற்று வீடு பேறெய்தலாம். உயிர்கள் தந்தம் தகுதிக்கேற்ப அந்தந்த உலகங்களுக்குச் சென்று திரும்பவும் பிறப்பெடுக்கும் என்றும், மெய்ப்பொருள் கண்டவர் பிறப்பினை நீத்து வீடுபேறெய்திப் பெருவாழ்வு பெறுவர் எனவும் விளங்குகின்றது.

இவற்றிலிருந்து புண்ணிய உலகங்களும், இருள் உலகங்களும், அதற்குமேல் தேவலோகமும் அதற்கப்பால் பல உலகங்களும் உள்ளன என்பதும், மரணத்தின் பின் உயிர்கள் அங்குச் சென்று இன்ப துன்பங்களை அனுபவித்து மீண்டும் வந்து பிறக்கின்றன என்பதும், பரிபக்குவமுள்ள ஆன்மா மீண்டுவாரா நெறியாகிய பரமுத்தியை அடைந்து இறைவனோடு ஒன்றி வாழும் என்பதும் விளங்குகின்றது.

## முத்தி மார்க்கங்கள்

ஒவ்வொரு மதத்தினரும் முத்தியைப் பற்றிப் பற்பல விதமாகக் கூறுகின்றனர். உலகாயத மதத்தினர் அழகிய பெண்களை மணந்து இன்புறுதலே முத்தியெனவும், மீமாம்ஸகர் யாகாதி கருமங்களைச் செய்து அம்மைக் கண்ணே ஸ்வர்க்காதிலோக போகங்களை நுகர்தலே முத்தியெனவும், பௌத்தர்கள் ஐந்து கந்தம் அறக்கெடுதலே முத்தியெனவும், ஜைனர்கள் எண்குணமடைதலே முத்தியெனவும், வைசேடிகர் கல்போல் கிடத்தலே முக்தியெனவும், சாங்கியர் தத்துவங்களைப் பகுத்துணரும் விவேக ஞானமே முத்தியென்றும், அத்வைதிகன் வேதாந்த விசாரத்தால் தோன்றிய ஞானத்தால் மாயைக்கு வேறாகிய பிரமரூபமே நான் என்றறிவதே முத்தியெனவும், சிவசமயாதிகள் சிவசாரூப முதலிய பதவிகளைச் செல்விதாகப் பெறுதலே முத்தியெனவும், சித்தாந்த சைவர் சிவனடியைச் சேர்வதே முத்தியெனவும் கூறுகின்றனர்.

*உள்ள மலம் நீங்கி ஓங்கு சிவானந்த*
*வெள்ளந் திளைத்துவாய் மேவுதலே கள்ளவிழ்பூங்*
*கொத்தார் விரிசடையார் கூறு சிவாகமத்தில்*
*சித்தாந்த முத்தியெனத் தேறு.*

(முத்தி நிச்சியம்)

ஆன்மா ஆணவமல முதலானவற்றை நீக்கி, ஒருகாலமும் குறைவுபடாத சிவானந்தப் பெருங்கடலில் திளைத்து அச்சிவனும் ஆன்மாவும், ஒன்றுமன்றி இரண்டுமன்றி நின்ற அத்துவித நிலையைப் பெறுதலே சித்தாந்த முத்தியென முத்தி நிச்சயம் கூறுகின்றது.

'பரமபதம்' என்பது எல்லாவற்றிலும் உயர்ந்த கதியாய், காண்பானும், காட்டுவதும், காண்பதுவும் தோன்றாது அனுபவித்து அறிவது எனவும், 'சிவசாயஜ்ஜியம்' என்பது சிவனோடு இரண்டறக் கலந்து பிரியாது, அவனைப் பெறுவதாகும் எனவும் கூறுவர். காந்தம் இரும்பை இழுப்பதுபோல் உயிர்களை இறைவன் தன்பக்கம் இழுத்துக் கொள்கின்றான். நெருப்பிலிட்ட இரும்பை நெருப்பானது தன்மயமாக்குவதைப்போல் உயிர்களைச் சிவன் தன்மயமாக்குகின்றான். நெருப்பு தன்னில் இட்ட இரும்பின் கறையை நீக்கிச் சுத்திசெய்வது போல ஆண்டவன் தனது அருட்சக்தியால் உயிர்களின் ஆணவத்தை அழித்து முத்தியைக் கொடுக்கிறான். உப்பானது நீரில் கலந்து நீருக்கும் தன் தன்மையை அளிப்பதுபோல இறைவன் உயிர்களில் இலயித்து தனது குணங்களை எல்லாம் கொடுக்கிறான். இரசகுளிகை செம்பிலுள்ள களிம்பை நீக்கிப் பொன்னாகச் செய்வதைப்போல இறைவனும் ஆன்மாவின் ஆணவத்தை நீக்கி சிவமயமாக்குகின்றான். கருப்பஞ்சாறு, தேன், பால், கனி, இரதம், கற்கண்டு முதலியவைகளைக் கலந்து உண்டால் உண்டாகும் இன்பத்தைப் போல ஆன்மா முத்தி இன்பத்தை அனுபவித்து சிவனோடு அத்துவித நிலையில் நின்று சிவானந்தத்தில் திளைக்கிறது.

இவற்றிலிருந்து பற்பல சமயிகள் முத்தியைப் பற்பல விதமாகக் கூறுகின்றனர் என்பதை நன்கறியலாம். முத்திப் பேற்றைப் பலர் பற்பல விதமாகக் கூறுகின்றனர். எனினும், ஆன்மா இறைவனை எவ்வகையிலும் சார்ந்து இன்புறுதலையே முத்தியெனக் கூறலாம். அவ்வாறு முத்தி அடைவதற்கு நமது ஆன்றோர் வகுத்த வழிகளைச் சிறிது ஆராய்வோம்.



முத்தி அடைவதற்கு உரிய மார்க்கங்களை நான்காகப் பகுத்துள்ளனர். அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என நால் வகைப்படும். இவற்றை முறையே தாஸமார்க்கம், சற்பத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் எனவும் கூறுவர். இவற்றைக் கர்மம், பத்தி, யோகம், ஞானம் எனக் கூறுவாரும் உளர். இந்நெறிகளை மேற்கொண்டொழுகிய ஆன்மாக்கள் முறையே சாலோக, சாமீப, சாரூப, சாயஜ்ஜிய பதவிகளை அடைவர். முற்கூறிய மூன்று பதவிகளும் பதமுத்தியாகும். நான்காவதாகிய ஞானத்தால் அடையும் முத்தி பரமுத்தியாம்.

இதனை, சிவஞானசித்தியாரில் –

*"சன்மார்க்கஞ் சகமார்க்கஞ் சற்புத்திர மார்க்கந்*
*தாதமார்க்கம் என்றும் சங்கரனை அடையும்*
*நன்மார்க்கம் நாலவைதாம் ஞானயோக*
*நற்கிரியா சரியையென நவிற்றுவதும் செய்வர்*
*சன்மார்க்க முத்திகள் சாலோக்கிய சாமீப்பிய*
*சாருப்பிய சாயுச்சியம் என்று சதுர்விதமாம்*
*முன்மார்க்க ஞானத்தால் எய்து முத்தி*
*முடிவென்பர் மூன்றினுக்கு முத்தி பதமென்பர்"*

என்று கூறப்பட்டுள்ளது.

தாயுமானவர் இந்நால்வகை மார்க்கங்களையும் அரும்பு, மலர், காய், கனி இவற்றிற்கு ஒப்பிட்டுள்ளார்.

*"விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும்*
*அரும்பு மலர்காய்கனி போல் அன்றோ பராபரமே"*

அரும்பின்றி மலரும், மலரின்றிக் காயும், காயின்றிக் கனியும் உண்டாகாதவாறு சரியையின்றிக் கிரியையும், கிரியையின்றி யோகமும், யோகமின்றி ஞானமும் உண்டாகாவாம். ஒரு மாணவன் ஆரம்பப் பள்ளியில் படித்து, பின்னர் மத்தியதரப் பள்ளிக்குச் சென்று, அதன் பின் உயர்தரப் பள்ளியில் படித்து, பின் கல்லூரிக்குச் சென்று உயர்தரப் பட்டங்கள் பெறுவதைப்போல முறையே சரியை, கிரியை, யோக, ஞானங்களை ஆன்மாவானது மேற்கொண்டொழுகி முத்தியைப் பெறுகின்றது.

# முத்தி மார்க்கங்கள்

| நாலு மார்க்கங்கள் | | பதவி | அடையும் நிலை | உவமை |
|---|---|---|---|---|
| தாஸ மார்க்கம் | சரியை | சாலோகம் | பதமுத்தி | அரும்பு |
| சற்புத்திர மார்க்கம் | கிரியை | சாமீபம் | " | மலர் |
| சக மார்க்கம் | யோகம் | சாரூபம் | " | காய் |
| சன்மார்க்கம் | ஞானம் | சாயுஜ்ஜியம் | பரமுத்தி | கனி |

*சாலோக்ய முத்தி :* ஈசுவரன் திருமேனி கொண்டிருக்கும் உலகத்தை அடைந்து இன்புறுதலாம். *சாமீப்பிய முத்தி:* முற்கூறிய இன்பத்தோடு ஒரு புதல்வனைப் போல இறைவன் அருகில் அமர்ந்து இன்புறுதலாம். *சாரூப்ப முத்தி:* இறைவனின் திருவுருவம் போன்ற ஓர் உருவந்தாங்கி இறை இன்பம் நுகர்தலாம். *சாயுஜ்ஜி முத்தி:* இறைவனோடு நித்தியானந்தம் அனுபவித்துப் பிறவியை அறுத்து நீடுவாழ்தலாம்.

## 1. சரியை அல்லது தாஸமார்க்கம்

உலகியலில் மண், பெண், பொன்னாசைகளில் சிக்கிக் கடவுளை மறந்து வாழும் மனிதர்களை முத்திப்பேற்றுக்குத் தகுதி ஆக்குதற் பொருட்டு வகுத்த மார்க்கங்களின் முதல் மார்க்கம் சரியையாகும். சரியை என்பதற்கு ஒழுங்கான வழியில் நடத்தல் என்பது பொருள். ஒரு எஜமானனிடம் ஒரு வேலைக்காரன் பயபக்தி, விசுவாசத்துடன் ஊழியம் செய்து எஜமானனுடைய அன்புக்குப் பாத்திரமாகி அதனால் அடையக்கூடிய பேறுகளைப் பெறுவதைப் போல, ஆண்டவனாகிய எஜமானனிடம் நாம் தொண்டாற்றி அவனால் அளிக்கப்படும் பேற்றினைப் பெறுவதற்கு உரியதாதலின் இதனைத் தாஸாமார்க்கம் எனக் கூறுவர்.

வேலைக்காரன் எஜமானனிடம் நம்பிக்கை, விசுவாசம், கீழ்ப்படிதல், [illegible]மானனுக்கு விருப்பமான செயல்களைச் செய்தல், எஜமானனை எந்த [illegible]த்தும் புகழ்ந்து பாராட்டுதல் முதலிய நற்குணங்களைக் கைக்கொண்டு [illegible]துவதைப் போல, நாமும், நமது எஜமானனாகிய கடவுளிடத்தில் [illegible]பிக்கையும் பக்தியும் கொண்டு அதிகாலையில் எழுந்து தூய நீராடி, தூய உடைதரித்து, இறைவன் விரும்புகிற விபூதி, உருத்திராக்கம், சந்தனம், குங்குமம், திருமண் முதலியவற்றை விதிப்படி தரித்துக்கொள்ள வேண்டும். பின் ஆலயத்திற்குச் சென்று ஆலயத்தைத் தூய்மை செய்து ஆண்டவனுக்குரிய மலர்,



பத்திரம், நிவேதனப் பொருள்கள் முதலியவற்றைக் கொடுத்து சந்நிதியில் நின்று இறைவன் பெருமைகளைப் புகழ்ந்து பாடி, விதிப்படி ஆலய தரிசனம் செய்து தலையாரக் கும்பிட்டு வழிபடல் வேண்டும்.

ஆலயத்தில் செய்யக்கூடிய தொண்டுகள் சிலவற்றைக் கூறலாம். அவை, திருவலகிடல், (பெருக்குதல்) மெழுகிடல், நந்தவனம் வைத்தல், மலர் பறித்தல் மாலை கட்டுதல், தூபதீபம் இடுதல், பசுமடம் கட்டல், பூஜைக்கு வேண்டிய பொருள்களைக் கொடுத்தல், அடியார்களுக்கு அன்னமிடுதல், அடியார்கள் பொருட்டுச் சத்திரம் சாவடி கட்டல், தண்ணீர்ப் பந்தல் வைத்தல், வேதாமக தேவார பாடசாலைகள் வைத்து நடத்தல், சமயப்பிரசார நிலையங்கள் அமைத்தல், அநாதைகளுக்கு அன்னசாலை அமைத்தல், இலவசக் கல்வி நிலையங்களும் கலாசாலைகளும் அமைத்தல் முதலியவைகளாம்.

சரியை மார்க்கத்திற்கான திருத்தொண்டுகளை அப்பர் சுவாமிகள் ஆரூர்த்தாண்டகத்தில் விளக்கியுள்ளார்.

*"நிலைபெறுமாறு என்னுதியேல் நெஞ்சே நீவா*
*நீத்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப்*
*புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்*
*பூமாலை புனைந்தேதீதிப் புகழ்ந்து பாடித்*
*தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச் சங்கரா*
*சய போற்றி போற்றி என்றும்*
*அலைபுனல் சேர்செஞ்சடை எம் ஆதி என்றும்*
*ஆரூரா என்றென்றே அலறா நில்லே"*

தாஸமார்க்கம் பற்றி சிவஞானசித்தியாரில்

*"தாதமார்க்கஞ் சாற்றில் சங்கரன்றன் கோயில்*
*தலம் அலகிட்டு இலகு திருமெழுக்குஞ் சாத்திப்*
*போதுகளுங் கொய்து பூந்தார் மாலை கண்ணி*
*புனிதற்குப் பல சமைத்துப் புகழ்ந்துபாடி*
*தீதில்திரு விளக்கிட்டுத் திருநந்த வனமும்*
*செய்து திருவேடங் கண்டால் அடியேன் செய்வ*
*தியாது பணியீரென்று பணிந்தவர் தம் பணியும்*
*இயற்றுவது இச்சரியை செய்வோர் ஈசனுலகிருப்பர்".*

இவற்றுள் கூறியவாறு பணியாற்றி வந்தால் பழம் உண்டாவதற்கு மூல காரணமாகிய அரும்பு அரும்புவது போல சரியையாகிய அரும்பு உண்டாகும். அதுவே கிரியையாகிய மலராக மலரும்.

## 2. கிரியை அல்லது சற்புத்திரமார்க்கம்

கிரியையாவது தனது வழிபடு கடவுளை அகத்தும் புறத்தும் பூசித்து வழிபடும் செயலாகும். அப்பூஜை ஆன்மார்த்தம், பரார்த்தம் என இருவகைப்படும். ஆன்மார்த்தம் தன்பொருட்டு தனது ஆத்மார்த்த மூர்த்தியை வழிபடும் வழிபாடாகும். பரார்த்தம் பிறர் பொருட்டு அவர் விரும்பும் மூர்த்தியை முறைப்படி பூசிப்பது ஆகும். அப்பரார்த்த பூஜை நித்தியம், நைமித்தகம், காமியம், என மூன்று வகைப்படும். மூர்த்திகளை வழிபடுவதற்கு மந்திரம், யந்திரம், தந்திரம் என்ற மூன்றும் வேண்டற்பாலன. சிவாகமங்கள் சிவபூஜை முறையைக் கூறுகின்றன. நறுமலர்கள், தூபதீபங்கள், சுத்தநீர் முதலிய பூஜைக்குரிய பொருள்களைக் கொண்டு ஆத்ம சுத்தி, ஸ்தான சுத்தி, திரவிய சுத்தி, மந்திர சுத்தி, இலிங்க சுத்தி முதலானவை செய்து அந்த மூர்த்திக்குரிய மூலமந்திரம் ஜபித்து பீடம் இடவேண்டும்.

இந்த ஐந்து சுத்திகளையும் செய்வது ஆணவம், கன்மம், மாயை, திரோதாயி, மாயேயம் என்ற ஐவகைப் பாசங்களைக் களைதற்காகும் இதனை,

*"பஞ்சவித சுத்தியினைப் பண்ணிடுக பாங்காகப்*
*பஞ்சவித பாசமறுப் பார்"..*

என்னும் சைவசமயநெறிச் செய்யுளாலறியலாம். அபிடேகப் பொருள்கள் வடித்தெடுத்த நீர், வாசனைத் திரவியங்கள் கலந்த நீர், இளநீர், பன்னீர், எண்ணெய், பால், பஞ்சாமிருதம், விபூதி, சந்தனம், களபம், புஷ்பம் முதலியவைகளாகும். அபிடேகம் செய்வதற்குக் காரணம் "அருளென்னும் புறவினையாட்டி" என்று காசி காண்டத்தில் கூறியபடி திருவருள் ஞானமே நீரெனப் பாவித்து அபிடேகம் செய்யின் மலநிவாரணம் ஏற்படும் என்பதாம்.

*"தம்மிற் சிவலிங்கங் கண்டதனைத் தாம் வணங்கி*
*தம் அன்பால் மஞ்சன நீர் தாமாட்டி"*

என்றபடி மருட்போதமே மலமாதலால் அம்மல அசுத்தத்தை அருள்நீர் கொண்டு சுத்தி செய்தல் எனும் பாவனையாம். திருவுருவங்களுக்கு வஸ்திரந்தரித்தல் திரோதான சக்தி நீங்குதல் பாவனையாம். பூஜையில் செய்யப்படும் உபசாரங்கள் பதினாறாகும்.



*அவையாவன:* ஆவாஹனம், தாபனம், சந்நிதானம், ஸந்திரோதனம், அவகுண்டனம், தேனுமுத்திரை, பாத்தியம், ஆசமணீயம், அருக்கியம், புஸ்பதானம், தூபம், தீபம், நைவேத்யம், பாநீயம், ஜபசமர்ப்பணம், ஆராத்திரியம் (தீபாராதனை) என்பனவாகும்.

பூஜையின் பொருட்டுக் கடவுளை மூலமந்திரத்தைச் சொல்லி வரவழைத்து அமரச் செய்தல் ஆவாஹனமாகும்.

"தயாநிதியே! அடியேனை அனுக்கிரகிப்பதற்காக விக்கிரகத்தில் எழுந்தருளி இருக்க வேண்டும்" என்ற அன்புடன் யாசிப்பது தாபனமாம்.

பூஜிக்கப்படுபவனாகிய கடவுள், அனுக்கிரகிக்கும் தன்மையையும், பூஜிக்கின்றவனாகிய தான் அனுக்கிரகிக்கப்படும் தன்மையையும் உண்டுபண்ணுவதே சந்நிதானமாகும். "பகவானே! எப்போதும் என்னிடத்தில் அனுக்கிரகத்தோடு இருக்க வேண்டும்". என்று பிரார்த்திப்பதே ஸ்ந்திரோதனமாகும். சிவலிங்கத்தைச் சுற்றிக் கவச மந்திரத்தினால் மூன்றகழ் உண்டானதாகப் பாவித்தல் அவகுண்டனமாம். கடவுளுக்கு முன்பாகப் பசுவின்படி போன்றதொரு முத்திரை காட்டுதலே தேனுமுத்திரையாகும்.

மூலமந்திரத்தை 'நம' என்னும் இறுதியை உடையதாக உச்சரித்து ஜலத்தைத் திருவடிகளில் சமர்ப்பித்தல் பாத்தியமாம். மூலமந்திரத்தை 'ஸ்வதா' என்னும் இறுதியையுடையதாக உச்சரித்து மும்மூன்றுதரம் ஜலத்தை சமர்ப்பித்தல் ஆசமணீயமாகும். மூலமந்திரத்தை உச்சரித்துக் கடவுளுடைய சிரஸில் ஜலத்தை சமர்ப்பித்தல் அருக்கியம் எனப்படும். மூலமந்திரத்தை உச்சரித்துப் புஷ்பங்களைச் சாத்துதல் புஷ்பதானம் ஆகும். கிரியா சக்திரூபமாகிய தூபத்தைச் சிவ சந்நிதானத்திலிடுவது ஆணவ மலமாகிய அறியாமையைக் கிரியா சக்தியைக் கொண்டு நீக்குதல் எனும் குறிப்பினை உணர்த்துவதற்காகும். சிவபெருமானுக்குத் தீபம் சமர்ப்பித்தலின் கருத்து, சித்சக்தியாகிய தீபம் ஆன்மாவினது மலத்தைப் போக்கி ஞானத்தை விளக்குதல் என்பதாம். நைவேத்யமானது ஆன்ம குணமாகிய அகங்காரம், சங்கற்பம், குரோதம், மோகம் என்பனவற்றையே அமுதாகச் சமர்ப்பித்தல் எனும் பாவனையாம். வாசனை பொருந்திய தீர்த்தத்தைக் கடவுளுடைய திருப்திக்காகச் சமர்ப்பிப்பது பாநீயமாகும். மூலமந்திரத்தை நூற்றெட்டு உரு ஜபித்து அதைக் கடவுளிடத்திலேயே ஒப்புவித்தல் ஜபசமர்ப்பணமாம்.

அராத்திரிகம் என்பது பலவகையான தீபங்களைக் கடவுள் முன்பாகக் காட்டுதலாகும். ஒவ்வொரு தீபத்திற்கும் ஒவ்வொரு கருத்துண்டு. அவற்றுள் முக்கியமானவை ஐந்து தட்டுக்களும் குடமுமாகும். இவற்றின் கருத்தாவது ஐந்து தட்டுக்கள் ஈசான முதலியவற்றையும், குடம், சாதாக்கிய தத்துவத்தையும் குறிக்கின்றது. ஈசானம் முதலியன சாதாக்கியத்தில் ஒடுங்குகின்றன. அச்சாதாக்கியமும் சிவத்திடத்தே ஒடுங்குகின்றது என்பதாகும். கர்ப்பூரம் காட்டுவதன் உட்பொருள் கர்ப்பூரம் வெண்மை நிறத்தைப் பொருந்தி, அக்னி பற்றியவிடத்தே அருள் வடிவமாக விளங்கி, ஒரு பற்றும் இல்லாமல் முற்றும் கரையப் பெற்று ஆகாயத்துடன் கலந்து விடுவது போல், ஆன்மாவானது சத்துவகுணத்தை அடைந்து, ஞானமாகிய அக்கினியுடன் சம்பந்தம் பெற்று, மூவகைச் சரீரங்களும் எல்லாப் பற்றுக்களும் நீங்கப்பெற்று, பரமுத்தி அடையும் என்பதாம். அட்டபுஷ்பம் சாத்துவதன் கருத்து கொல்லாமை, ஐம்பொறியடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்பவையே கடவுளுக்குகந்த மலர்கள் என்பதைக் குறிக்கின்றது.

இப்புத்திரமார்க்கத்தை சிவஞானசித்தியார்,

*"புத்திரமார்க்கம் புகலிற் புதியவிரைப் போது*
*புகையொளி மஞ்சனமமுது முதல் கொண்டு ஐந்து*
*சுத்திசெய்து ஆசனம் மூர்த்தி மூர்த்தி மானாஞ்*
*சோதியையும் பாவித்து ஆவாகித்துச் சுத்த*
*பத்தியினா லருச்சித்துப் பரவிப் போற்றிப்*
*பரவினொடு எரியில்வரு காரியமும் பண்ணி*
*நித்தலும் இக்கிரியையினை இயற்றுவோர்கள்*
*நின்மலன்றன் அருகிருப்பர் நினையுங்காலே"*

என்று புகலுகின்றது.

கிரியையாகிய மலர் வெளித்தோற்றங்களாகிய இதழ், தேன், மகரந்தம் முதலிய அனைத்தையும் உதிர்த்து பிஞ்சாகி முதிர்ந்து யோகமாகிற காயாகும்.

## 3. யோகம் அல்லது சகமார்க்கம்

பக்தன் தனது வெளித்தோற்றங்களைத் துறந்து உள்ளடங்கி இறைவனோடு ஒன்றி இறையின்பம் நுகர்தல் யோகமெனப்படும். யோகம் என்பதற்குச் சேர்க்கையென்பது பொருள். ஜீவாத்மா பரமாத்மாவோடு உள்ளத்தால் சேர்ந்துறைதலாம். கீழும் மேலுமாகப் போகும் உச்வாஸ நிச்வாஸங்களாகிய வாயுக்களை அடக்கி சுஷிம்னையில் பிராணவாயு புகும் வண்ணம் நிறுத்தி, மனத்தை புறவிஷயங்களில் போகவிடாது செலுத்த வேண்டும். பின் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞையெனும் ஆறாதாரங்களை அறிந்து அவ்வாதாரங்களில் உறையும்



விநாயகர் முதலிய அதிதேவதைகளைத் தியானித்து, அசபாசக்தி இறைவடிவாய் நிற்கும் நிலையறிந்து மேலேறி பிரமரந்திரம் வரை சென்று, அங்குள்ள தாமரை முகையில் அமரச் செய்து அம்மூல மண்டலத்தை மூலாக்கினியால் இளக்கி அவ்வழியாக ஒழுகும் அமுதத்தை தேகம் முழுவதும் நிரப்பி முழுச் சோதியை தியானிக்க வேண்டும்.

யோக மார்க்கம் இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என எட்டு வகைப்படும். இதனை அட்டாங்க யோகமெனக் கூறுவர். இந்த யோகத்தைத் திருமூலர் –

*"இமய நியமமே எண்ணிலா ஆதனம்*
*நயமுறு பிராணாயமம் பிரத்தி யாகாரம்*
*சயமிகு தாரணை தியானஞ் சமாதி*
*அயமுறும் அட்டாங்க மாவது மாமே"*

என விளக்குகின்றார்.

**இயமம்:** (தன்னை அடக்குதல் இயமம்) அகிம்சை, உண்மை, கள்ளாமை, பிறர் பொருள் விரும்பாமை, பிர்மசரியம் என ஐந்தாம்.

நியமம்: ( தன்னை நிச்சயித்துக்கொள்ளுதல் நியமம்) தவம், சுத்தி, திருப்தி, ஞான நூலாராய்ச்சி, ஈசுவர ஆராதனம் என ஐந்தாம்.

**ஆசனம்:** ஆசனம் என்பது மேற்கூறிய யோகத்தை ஒழுங்காய் நடத்தத்தக்க முறையில் உடம்பை அமரச் செய்தலாம். இது மயூராசனம், குக்குடாசனம் எனப் பலவகைப்படும். எந்த ஆசனம் தியானத்துக்கு தனக்கு அனுகூலமாகவுள்ளதோ அந்த ஆசனத்தை அவன் மேற்கொள்ளலாம். பிராணாயாமம் என்பது பிராண வாயுவினை அடக்குதலாகும். அது மந்த்ரஜபத்தோடு அடக்குவதும், ஒன்றுமின்றி அடக்குவதும் என இரு வகைப்படும். பிரத்தியாகாரமாவது மனதை ஐம்புலவழிச் செல்லவிடாமல் தடுத்து ஒருவழிப்படுத்தலாம். இயற்கையில் சலன புத்தியுடைய குரங்குக்கு ஒருவன் மதுவைக் கொடுத்தான். உடன் ஒரு தேள் அதனைக் கொட்டியது. அத்துடன் ஒரு பேயும் அக்குரங்கைப் பற்றிக் கொண்டது. குரங்கின் நிலையைக் கூறுவானேன். அதைப்போல இயற்கையிலேயே சபல புத்தி வாய்ந்து மனக்குரங்கு, இச்சையெனும் மதுவையருந்தி, பொறாமையெனும் தேளாற் கொட்டப்பட்டு, தற்பெருமை எனும் பிசாசினால் பிடிக்கப்பட்டு ஆடிக்கொண்டிருக்கிறது. இத்தகைய மனத்தை ஒருவழிப்படுத்துதல் என்பது எத்துணை அரிய செயலாகும். இது பற்றியே தாயுமானவரும் "சிந்தையை

அடக்கியே சும்மா இருக்கின்ற திறனிது" எனக் கூறியுள்ளார். இயம, நியம, ஆசன, பிராணாயாமதிப் பெற்றவர்களுக்குகே இம்மனத்தை அடக்கும் ஆற்றல் உண்டாகும்.

**தாரணை:** முத்துச்சிப்பி கடலில் மேற்பாகத்திற்கு வந்து அகமதி நட்சத்திரத்தின் உதயத்தில் விழும் ஒரு மழைத் துளிக்காகக் காத்திருக்கின்றது. (சுவாதி நட்சத்திரம் என்றும் கூறுவர்). அத்துளி தன்னுள் விழுந்ததும் விரைவில் சிப்பியை மூடிக்கொண்டு கடலினடியில் சென்று பொறுமையோடு அதனைப் போற்றி வளர்த்து விலையுயர்ந்த முத்தாக்குகிறது. அதைப்போல முதலில் உபதேசம் பெற வேண்டும். அதன் பின் நமது மனத்தை வெளி விஷயங்களில் போகாமல் தடுக்க வேண்டும். அதன்பின் நிம்மதியான தியானத்தில் இருக்க வேண்டும். இதுவே தாரணையாகும்.

**தியானம்:** மனதை இறைவனிடத்தில் சலனமின்றி நிலைநிறுத்தி வழிபடல் தியானம் எனப்படும். அப்பொழுது யான், எனது என்னும் அகங்கார யமகாரங்கள் அறவே கெடும். இதுவே தியான நிலையாம். சமாதி, மனம் சுயபோதத்தை இழந்து இறையருளிற் தோய்ந்து நிற்கும் நிலையே சமாதியாம். போதாதீத நிலையென இதனைக் கூறுவர், சமமார்க்கமாகிய இந்த அட்டாங்க யோகமுறையை சிவஞான சித்தியார் –

*" சகமார்க்கம் புலனொடுக்கித் தடுத்துவளி இரண்டும்*
*சலிப்பற்று முச்சதுர முதலா தாரங்கள்*
*அகமார்க்கம் அறிந்து அவற்றின் அரும் பொருள்கள் உணர்ந்து அங்கு*
*அணைந்துபோய் மேலேறி அலர்மதி மண்டலத்தின்*
*முகமார்க்க அமுத உடல முட்டத் தேக்கி*
*முழுச்சோதி நினைந்திருத்தல் முதலாக வினைகள்*
*உகமார்க்க அட்டாங்க யோக முற்றும்*
*உழத்தல் உழந்தவர் சிவன்றன் உருவத்தைப் பெறுவர்''*

என விவரிக்கின்றது. யோகமாகிய காயே முதிர்ந்து, நற்சுவையும் நன்மணமும் உடையதாகி, ஞானமாகிய கனியாகின்றது.

## 4. ஞானம் அல்லது சன்மார்க்கம்

சன்மார்க்கம் என்பது கலைகள், புராணங்கள், வேதாகமங்கள் முதலிய சாத்திரங்கள் அனைத்தையும் ஆராய்ந்து, அவற்றிலுள்ள சாரத்தை குருவினிடம் கேட்டு, கேட்டவற்றைச் சிந்தித்து சிந்தித்தவற்றைத் தெளிந்து தெளிந்தவற்றை மேற்கொண்டு ஞானம் (அறிவு), ஞாதிரு (அறிபவன்), ஞேயம் (அறியப்படு பொருள்) இவற்றைக் கடந்து இம்மூன்றும் அல்லாத அத்வீதியமாய்,



அகண்டாகாரமாய், சச்சிதாநந்த சொரூபியாய் விளங்கும் பரம்பொருளில் நிர்விகற்ப ஞானத்தால் செய்யும் ஆராதனையாகும். இதனைச் செய்தவர் பரமுர்த்தியாகிய சாயுஜ்ஜியத்தைப் பெறுவர்.

சிரத்தையுள்ளவனுக்கு ஞானம் கிடைக்கிறது. அதனால் சாந்தி அடைகிறான். ஞானம் பதிஞானம், பசுஞானம், பாசஞானம் என மூவகைப்படும். பதிஞானம் தற்பிரகாசம், பரப்பிரகாசம் என இரு வகைப்படும். தற்பிரகாசம் ஒளிஞானம், பரப்பிரகாசம் ஆன்மாவைக் காட்டுதல் ஆகும்.

பசுஞானம் தற்சொரூபத்தை அறியாது பலவகையில் சந்தேகப்பட்டு நிற்பதாகும். பாசஞானம் உலகப் பொருள்களைப் பற்றி ஒருவாறு அறியும் அறிவு ஆகும். பாசஞானமும், பசுஞானமும் ஞானமல்ல; பதிஞானமே ஞானம். அதுவே பிரமஞானம். ஞானமின்றி மேற்கொள்ளும் யோகத்தால் முத்தி பெற இயலாது. அதனால் மோட்ச விருப்பமுள்ளவர் யோகத்தையும் ஞானத்தையும் மேற்கொள்ள வேண்டும். ஞானமாவது கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல், என நான்கு வகைப்படும். கேட்க வேண்டுவனாகிய ஜீவாத்ம பரமாத்ம ஐக்கிய விசயங்களை நல்லாசிரியனிடம் நன்கு கேட்க வேண்டும். அதனைப் பற்றி நன்றாய் சிந்திக்க வேண்டும். சிந்தித்து நிச்சயித்து பொருளை நன்கு தியானிக்க வேண்டும். இவ்வித தியானத்திலிருந்து இமைப்பொழுதும் நீங்காத பரமஞானிகள் பராபரமுதல்வனின் சாயுஜ்ஜிய பதவியாகிய பரமுத்தியைப் பெறுவர். சன்மார்க்க நெறியின் இலட்சணத்தைச் சித்தியாரில் –

*"சன்மார்க்கஞ் சகலகலை புராண வேத*
*சாத்திரங்கள் சமயங்கள் தாம்பலவு முணர்ந்து*
*பன்மார்க்கப் பொருள்பலவுங் கீழாக மேலாம்*
*பதிபசு பாசந்தெரித்துப் பரசிவனைக் காட்டு*
*நன்மார்க்க ஞானத்தை நாடி ஞான*
*ஞேயமொடு ஞாதிருவு நாடா வண்ணம்*
*பின் மார்க்கச் சிவனுடனாம் பெற்றி ஞானப்*
*பெருமையுடையோர் சிவனைப் பெறுவர் காணே"*

எனக் கூறப்பட்டுள்ளது.

மேற்கூறியவற்றில் மானிடப் பிறப்பின் நோக்கம் முத்தி அடைதல் எனவும், அதற்குச் சரியை, கிரியை, யோகம், ஞானம், எனும் நான்கு சிறந்த மார்க்கங்கள் உள எனவும், அவற்றை நன்கறிந்து கைக்கொண்டு படிப்படியாக அனுடித்து ஞானம் பெற்று இறையடி சேர்தலே அறிவுள்ள மக்களின் கடப்பாடாகும் என்பதும் விளங்குகின்றது.

# ஆஞ்சநேயர் அஷ்டோத்தர சத நாமாவளி

ஓம் ஆஞ்சநேயாய நம:
ஓம் மஹாவீராய நம:
ஓம் ஹநூமதே நம:
ஓம் மாருதாத்மஜாய நம:
ஓம் தத்வஜ்ஞாநப்ரதாய நம:
ஓம் ஸீதாதேவீ முத்ரா ப்ரதாயகாய நம:
ஓம் அஸோகவநிகாச் சேத்ரே நம:
ஓம் ஸர்வமாயா விபஞ்ஜநாய நம:
ஓம் ஸர்வபந்தவிமோக்த்ரே நம:
ஓம் ரக்ஷோவித்வம்ஸகாரகாய நம: 10
ஓம் பரவித்யா பரிஹாராய நம:
ஓம் பரசௌ'ர்யவிநாச'நாய நம:
ஓம் பரமந்த்ர நிராகர்த்ரே நம:
ஓம் பராயந்த்ரப்ரபேதகாய நம:
ஓம் ஸர்வக்ரஹ விநாஸிநே நம:
ஓம் பீமஸேநஸஹாயக்ருதே நம:
ஓம் ஸர்வதுக்கஹராய நம:
ஓம் ஸர்வலோகசாரிணே நம:
ஓம் மநோஜவாய நம:
ஓம் பாரிஜாத தருமூலஸ்தாய நம: 20
ஓம் ஸர்வமந்த்ர ஸ்வரூபவதே நம:
ஓம் ஸர்வ தந்த்ரஸ்வரூபிணே நம:
ஓம் ஸர்வமந்த்ராத்மகாய நம:
ஓம் கபீச'வராய நம:
ஓம் மஹாகாயாய நம:
ஓம் ஸர்வரோகஹராய நம:
ஓம் ப்ரபவே நம:
ஓம் பலஸித்திகராய நம:
ஓம் ஸர்வவித்யா ஸம்பத் ப்ரதாயகாய நம:
ஓம் கபிஸேநா நாயகாய நம: 30



ஓம் பவிஷ்யச் சதுராநநாய நம:
ஓம் குமாரப்ரஹ்மசாரிணே நம:
ஓம் ரத்நகுண்டல தீப்திமதே நம:
ஓம் ஸஞ்சலத்வால ஸந்நத்த லம்பமாந
ஸி'கோஜ்வலாய நம:
ஓம் கந்தர்வவித்யா தத்வஜ்ஞாய நம:
ஓம் மஹாபல பராக்ரமாய நம:
ஓம் காராக்ருஹவிமோக்த்ரே நம:
ஓம் ஸ்ருங்கலாபந்தமோசகாய நம:
ஓம் ஸாகரோத்தாரகாய நம:
ஓம் ப்ராக்ஞாய நம: 40
ஓம் ராமதூதாய நம:
ஓம் ப்ரதாபவதே நம:
ஓம் வாநராய நம:
ஓம் கேஸரீஸுதாய நம:
ஓம் ஸீதாசோ'க நிவாரணாய நம:
ஓம் அஞ்ஜநாகர்ப ஸம் பூதாய நம:
ஓம் பாலார்க்க ஸத்ருசா'நநாய நம:
ஓம் விபீஷண ப்ரியகராய நம:
ஓம் தச'க்ரீவ குலாந்தகாய நம:
ஓம் லஷ்மண ப்ராணதாத்ரே நம: 50
ஓம் வஜ்ரகாயாய நம:
ஓம் மஹாத்யுதயே நம:
ஓம் சிரஞ்ஜீவிநே நம:
ஓம் ராமபக்தாய நம:
ஓம் தைத்யகார்ய விகாதகாய நம:
ஓம் அக்ஷஹந்த்ரே நம:
ஓம் காலநாபாயநம நம:
ஓம் காஞ்சநாபாய நம:
ஓம் பஞ்சவக்த்ராய நம:
ஓம் மஹாதபஸே நம: 60
ஓம் லங்கிணீ பஞ்ஜநாய நம:
ஓம் ஸ்ரீமதே நம:

| | | | |
|---|---|---|---|
| ஓம் | ஸிம்ஸிகா ப்ராணபஞ்ஜநாய | நம: | |
| ஓம் | கந்த்தமாத நசை'லஸ்தாய | நம: | |
| ஓம் | ஸுக்ரீவஸசிவாய | நம: | |
| ஓம் | பீமாய | நம: | |
| ஓம் | ஸூராய | நம: | |
| ஓம் | தைத்யகுலாந்தகாய | நம: | |
| ஓம் | ஸுரார்ச்சிதாயை | நம: | 70 |
| ஓம் | மஹாதேஜஸே | நம: | |
| ஓம் | ராமசூடாமணி ப்ரதாய | நம: | |
| ஓம் | காமரூபிணே | நம: | |
| ஓம் | பிங்களாக்ஷாய | நம: | |
| ஓம் | வார்த்திமைநாக பூஜிதாய | நம: | |
| ஓம் | கபளீக்ருத மார்தாண்ட மண்டலாய | நம: | |
| ஓம் | விஜிதேந்த்ரியாய | நம: | |
| ஓம் | ராமஸுக்ரீவஸந்தாத்ரே | நம: | |
| ஓம் | மஹாராவண மர்தநாய | நம: | |
| ஓம் | ஸ்படிகாபாய | நம: | 80 |
| ஓம் | வாகதீசா'ய | நம: | |
| ஓம் | நவவ்யாக்ருதி பண்டிதாய | நம: | |
| ஓம் | சதுர்பாஹவே | நம: | |
| ஓம் | தீநபந்தவே | நம: | |
| ஓம் | மஹாத்மநே | நம: | |
| ஓம் | பக்தவத்ஸலாய | நம: | |
| ஓம் | ஸஞ்ஜீவ நகாஹர்த்ரே | நம: | |
| ஓம் | சு'சயே | நம: | |
| ஓம் | வாக்மிநே | நம: | |
| ஓம் | த்ருடவ்ரதாய | நம: | 90 |
| ஓம் | காலநேமி ப்ரமதநாய | நம: | |
| ஓம் | ஹரிமர்கடமர்கடாய | நம: | |
| ஓம் | தாந்தாய | நம: | |
| ஓம் | சா'ந்தாய | நம: | |
| ஓம் | ப்ரஸந்நாத்மநே | நம: | |
| ஓம் | ச'த கண்டமதாஹ்ருதே | நம: | |



| | | | |
|---|---|---|---|
| ஓம் | யோகிநே | நம: | |
| ஓம் | ராமகதா லோலாய | நம: | |
| ஓம் | ஸீதாந்வேஷண பண்டிதாய | நம: | |
| ஓம் | வஜ்ரதம்ஷ்ட்ராய | நம: | 100 |
| ஓம் | ருத்ரவீர்ய ஸமுத்பவாய | நம: | |
| ஓம் | இந்த்ரஜித் ப்ரஹிதாமோக ப்ரஹ்மாஸ்த்ர | நம: | |
| | விநி வாரகாய | நம: | |
| ஓம் | பார்த்த த்வஜாக்ர ஸம்வாஸிநே | நம: | |
| ஓம் | ச'ரபஞ்ஜரபேதகாய | நம: | |
| ஓம் | தச'பாஹவே | நம: | |
| ஓம் | லோக பூஜ்யாய | நம: | |
| ஓம் | ஜாம்பவத் ப்ரீதிவர்த்தநாய | நம: | |
| ஓம் | ஸீதாஸமேத ஸ்ரீராமபாதஸேவா துரந்தராய | நம: | 108 |

ஆஞ்சநேயர் அஷ்டோத்தரச'த நாமாவளி ஸம்பூர்ணம்.



உ

ஸ்ரீராம ஜெயம்

# ஸ்ரீ மாருதி க்ருபை உண்டாக

1. ஸர்வ கல்யாண தாதாரம் !
ஸர்வ ஆ.:பத்கன - வாரகம் !!
அபார கருணாமூர்த்திம்
ஆஜ்ஜநேயம் நாமம் யஹம்

## துஷ்ட கிரகங்கள் விலக

2. அஞ்ஜநா கர்ப்ப ஸம்பூதம்
குமாரம் ப்ரும்ஹசாரினம்
துஷ்ட க்ரஹ வினா ஸாய
ஹனுமந்த முபாஸ் மஹே

## காரியங்களில் வெற்றி பெற

3. ஸ்ரீராம தூத மஹாதீர
ருத்ரவீர்ய ஸமத்பவ !
அஞ்ஜநா கர்ப்ப ஸம்பூத
வாயுபுத்ர நமோஸ் துதே !!

## காரியசித்தி உண்டாக

4. அஸாத்ய ஸாதக ஸ்வாமிந் !
அஸாத்யம் தவ கிம் வத !!
ராமதூத க்ருபாஸிந்தோ !
மத்கார்யம் ஸாதய ப்ரபோ

## ஸ்ரீ ஹனுமத் தியானம்

5. அஞ்ஜநா நந்தனம் வீரம்
ஜானகி ஸோக நாஸனம்
சுபீச மக்ஷ ஹந்தாரம்
வந்தே லங்கா பயங்கரம்

6. மனோஜவம் மாருத துல்யவேகம்
ஜிதேந்திரியம் புக்திமதாம் வரிஷ்டம்
வாதாத்மஜம் வானரயூத முக்யம்
ஸ்ரீ ராமதூதம் சிரஸா நமாமி

7. ஓம் புத்திர்பலம் யசோதைர்யம்
நிர் பயத்துவம் அரோகதா !
அஜாட்யம் வாக்படுத் வம்ச
ஹனுமத் ஸ்மரணாத் பவேத் !!



# ஆஞ்சநேயர் போற்றி அகவல்

ஓம்

ஸ்ரீ ராம ஆஞ்சநேய போற்றி
சீதாதேவி சிந்தைய போற்றி
அஞ்சனாதேவி அருமகன் போற்றி
அஞ்சுமூல வளியே போற்றி
ஐந்தில் ஒன்றால் பெற்றாய் போற்றி
ஐந்தில் ஒன்றைக் கடந்தாய் போற்றி
ஐந்தில் ஒன்றால் அழித்தாய் போற்றி
இராமதூது நடந்தாய் போற்றி
சீதையைத் தேடிக் கண்டாய் போற்றி
இலக்குவன் உயிரைக் காத்தாய் போற்றி

பரதன் இறப்பைத் தடுத்தாய் போற்றி
இராவணன் ஆற்றலைச் சிதைத்தாய் போற்றி
வானரப் படையை வளர்த்தாய் போற்றி
ஆணவப் பகையை அழித்தாய் போற்றி
ஏற்ற கொள்கையில் இருந்தாய் போற்றி
யோக நெறியில் சிறந்தாய் போற்றி
வேகப் பகையை வென்றாய் போற்றி
வெஞ்சமர் புரிந்து வென்றாய் போற்றி
சஞ்சீவி எடுத்து காத்தாய் போற்றி
ஆற்றல் வீர அன்பனே போற்றி

வல்லமை உடலால் வளர்ந்தாய் போற்றி
சொல்லின் ஆற்றல் செல்வா போற்றி
ஜானகி துன்பம் துடைத்தாய் போற்றி
வானரப் பண்பை வளர்த்தாய் போற்றி
ஐம்புலன் வென்ற அழகா போற்றி
பைம்பொழில் இடத்தில் வளர்ந்தாய் போற்றி
நட்பின் சிறப்பில் நடந்தாய் போற்றி
பெட்புறும் கேளினைப் பிரந்தாய் போற்றி
போற்றி தொண்டிலே இன்பங் கண்டாய்
மண்ணிலே நிலைத்த புகழோய் போற்றி

அன்னை இதயம் அறிந்தாய் போற்றி
முன்னை நிலையை முடிப்பாய் போற்றி
விண்ணை உடலால் அளந்தாய் போற்றி
கண்ணாய் கடமை கொண்டாய் போற்றி
வேத விழுப்பொருள் அறிந்தாய் போற்றி
நாத இசையை உணர்ந்தாய் போற்றி
பாதம் பணிந்தார் புரந்தாய் போற்றி
வழிபடுபலனில் வாழ்ந்தாய் போற்றி
வழிபடும் அடியார் வளர்த்தாய் போற்றி

காலம் வென்ற கருத்தாய் போற்றி
மூலமந்திர முதல்வா போற்றி
எள்நெய் வடையை ஏற்றாய் போற்றி
உள்ளுவார் குறையை ஒழித்தாய் போற்றி
சனியொடு இராகு செகுத்தாய் போற்றி
சனியது பார்வை கெடுத்தாய் போற்றி
திருத்துழாய் மாலை தரித்தாய் போற்றி
மருந்தாய் அதனை அளித்தாய் போற்றி
சொல்லின் ஆற்றலைத் தந்தாய் போற்றி

உள்ள சக்தியை ஊட்டினாய் போற்றி
உடலின் வலிமைக்கு உதவினாய் போற்றி
ஆன்ம பலத்தை அருளினாய் போற்றி
அச்சப்பேயை அகற்றினாய் போற்றி
இச்சைப் பொருளை ஈந்தாய் போற்றி
மக்கள் பேற்றைத் தந்தாய் போற்றி
தக்க நட்பைத் தந்தாய் போற்றி
நோய் நொடி துன்பம் போக்கினாய் போற்றி
நாய் எதிர் வறுமை துடைத்தாய் போற்றி
செல்வ வளத்தை கொடுத்தாய் போற்றி



நல்ல உள்ளத்தை நல்கினாய் போற்றி
கொடைமை மனத்தைக் கொடுத்தாய் போற்றி
உலகம் ஒருமையில் உய்வித்தாய் போற்றி
கலகம் தவிர்த்து காத்தாய் போற்றி
வீட்டு நலத்தை வளர்த்தாய் போற்றி
நாட்டு வளத்தைக் காப்பாய் போற்றி
பிறவிப்பிணியைப் போக்குவாய் போற்றி
துறவு நெறியில் நின்றாய் போற்றி
திறத்தில் வல்ல திறலோய் போற்றி
வேண்டுவ அருளிய விமலா போற்றி

காண்க வந்தோர் காத்தாய் போற்றி
அடியனாய் சிறந்த அழகனே போற்றி
அடியவர் சிறக்க அருளினாய் போற்றி
வைரம் பாய்ந்த உடலோய் போற்றி
பரகதி காட்டும் பண்பாய் போற்றி
செழுமலர் சோலை செல்வா போற்றி
பகுமரம் தேரும் பெருந்தோள் போற்றி
தொழுவார் துன்பம் துடைப்பாய் போற்றி
விழிமலர் கருணை பொழிவாய் போற்றி
அழிமனம் உய்ய அருள்வாய் போற்றி

பழிவரின் துடைக்கும் பலத்தோய் போற்றி
ஏழிவற நிறைந்து உயர்ந்தோய் போற்றி
காதல் கடந்த கடம்பாய் போற்றி
சாதல் கடக்க நடந்தாய் போற்றி
ஓதல் இன்றி உணர்ந்தாய் போற்றி
மந்திர மலையை எடுத்தாய் போற்றி
மந்திர மொழியில் முகிழ்த்தாய் போற்றி
சுந்தர காண்ட சுருதியே போற்றி
இந்திர உலகை இணைத்தாய் போற்றி
பந்த பாசம் மறந்தாய் போற்றி

சொந்த நலனை துறந்தாய் போற்றி
விந்தை செயலை விளைத்தாய் போற்றி
தந்தை தாயை தொழுதாய் போற்றி
எந்த நாளும் இருப்பாய் போற்றி
முந்தை வினைக்கு மருந்தே போற்றி
சிந்தை மகிழ வைத்தாய் போற்றி
செந்தழல் மூட்டி சிதைத்தாய் போற்றி
வெந்தழி இலங்கை வீழ்த்தினாய் போற்றி
கந்த மடுவில் குளித்தாய் போற்றி
சந்திர மண்டலம் அளந்தாய் போற்றி 100

செந்தமிழ்ப்பண்பில் சிறந்தாய் போற்றி
தொண்டு நெறியில் தொழுதாய் போற்றி
தொண்டர் உளத்தில் நிறைந்தாய் போற்றி
அண்டங் காக்கும் நிறைந்தாய் போற்றி
நமக்கல்லின் நாதா போற்றி
பூமிக்காவல் புரிந்தாய் போற்றி
சேமம் அருளும் சேவகா போற்றி
நாமப்பெருமை நவின்றாய் போற்றி
போற்றி அனும போற்றி போற்றி ! 108





ஸ்ரீராம ஜெயம்

# ஸ்ரீ வீர அனுமார் கவசம்

## காப்பு

**மன்னுயிர் காத்து மனம் நிறைந்த அனுமன்**
**தன்னிருதாள் போற்றித் தஞ்சக்கவசம் பொன்னாக**
**என்னாவிலுதிக்க ஏரம்பக் கணபதியே**
**உன்னருளால் உயர்த்து.**

## கவசம்

மூவுலகும் நலம் சூழ அருளிடும்
தேவகுமாரனே, தஞ்சம்! தஞ்சம்!
மூண்டிடும் வினைகளைத் தாற்றும் முன்னவா,
முழுவதுமா யெனை ஆண்டிட வேண்டினேன்!

மூலப்பரம்பொருள் என் மனம் காக்க,
முகத்தொடு முழுமெய் அருள்காக்க,
சூலத்தினாலெந்தன் செவி காக்க,
சூட்சுமமாகவே சுந்தரம் காக்க

வாயுபுத்திரன் எந்தன் வாய் காக்க
வானவனே எந்தன் வதனம் காக்க,
நேயனே எந்தன் நெற்றி காக்க,
நிம்மதியளித்தெந்தன் நாசி காக்க,
நீளவுயர்ந்தோனே நா காக்க,
பாசமறுப்பவனே பல் காக்க,
புகலளிப்போனே புருவம் காக்க,
போற்றுகின்றேன் கண்பாவை காக்க!

கூரிய நகங்கொண்டு கூந்தல் காக்க,
குணவானே என்றன் கழுத்தைக் காக்க,
மாசறுக்கும் மணியே மார்பு காக்க,
தேசுறு தோளினைத் தாங்கிய காக்க.

பக்திக்கருள்பவனே பிடரி காக்க,
பாற்பகடலோன் அடிமை உதடு காக்க,
ஈகைதிறத்தோனென்றன் இடை காக்க,
முழுமுதற்பொருளென்றன் முதுகு காக்க

வாதில் வல்லோனே வயிற்றைக் காக்க,
வடிவழகினன் என நாபி காக்க,
கதை எடுப்பவன் கைகளைக் காக்க,
கண்ணனின் அடியவன் கருத்தினைக்காக்க

வீம சகோதரன் விரல்களைக் காக்க,
நமனை அழித்தவன் நகங்களைக் காக்க,
நாராயண தூதன நரம்புகள் காக்க,
நம்பிடும் பாலனை நாயகன் காக்க.

பிரும்மகுலத்தவன் பிட்டம் காக்க,
குன்றினை எடுத்தவன் குணத்தைக் காக்க,
செந்துவர் வாயினன் செழிதொடை காக்க,
மூலவன் மூட்டினை முன்னின்று காக்க,

கருணாமூர்த்தி என் கால்களைக் காக்க,
உரமிகு தோளினன் உள்ளம் காக்க,
காரிருள் வண்ணன், தொண்டன் காக்க,
கருத்துடன் மனமும் கவர்ந்தவன் காக்க.

கதிரொளி வானரன் கணைக்கால் காக்க,
'பதி' யென் பாதம் இரண்டும் காக்க,
வானாரவேந்தன் கால் விரலினைக் காக்க,
வதனம் சிவந்தவன் வல்லமை காக்க.

குலநலம் காப்பவன் குருதியைக் காக்க,
குணமிகு சீலன் எம் குடியினைக் காக்க,
மேன்மை பெருகிட பாரதம் காக்க,
மேதினி செழித்திட மாறுதி காக்க,

மக்களைக் காத்து மனங்களில் உறைபவன்,
மகேசவடிவினன் வல்லமை காக்க,
சிக்கலறுத்துச் சீலம் அளித்தெமைச்
சிறப்புடன் காப்பவன் சீர்தாள் வாழ்க!

மன்னவன் மாருதி! மனங்கவர் சாரதி!
மாதா சீதை யாவர்க்கும் மங்களம்!
சித்தம் கட்டியென் சிரத்தை யாவுங்கொண்டு
முத்தி வேண்டுகிறேன்! அருள்வாய்!



# ஹனுமான் சாலீஸா

## (ஸ்ரீ ஹனுமன் புகழ்மாலை)



### பாராயண முறை

உடலைத் தூய்மைப்படுத்திக் கொண்டு, தூய ஆடை அணிந்து, தூய உள்ளத்துடன் ஸ்ரீ ஆஞ்சநேயரைத் தியானிக்க வேண்டும். நெய் விளக்கேற்றி, தூபம் காட்டியபின் பதினொரு முறை இந்த நாற்பது துதிகளையும் அன்புடன் ஓத வேண்டும். நூறு முறை ஓதுவது சிறப்பு. ஒவ்வொரு முறை ஓதி முடியும் போது ஸ்ரீ ஆஞ்சநேயரின் திருப்பாதங்களில் மலர்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

கோவிலிலோ, வீட்டிலிலோ தூய்மையான இடத்தில் ஆஞ்சநேயர் படத்தின் முன்னாலோ பாராயணம் செய்யலாம். செவ்வாய் அல்லது சனிக்கிழமைகளில் பாராயணம் செய்ய வேண்டும். பக்தியுடனும் அன்புடனும் 'ஹனுமான் சாலீஸா' பாராயணம் செய்யப்பட்டால் நினைத்தது நடக்கும் என்பது பெரியோர் கூற்று. அவரது அருளால் எதுவும் நடக்கும் என்பதில் ஐயமில்லை.

ஸ்ரீகுரு சரண ஸரோஜ ரஜ
நிஜ மன முகுரு ஸுதாரி /
பரணஉ ரகுவர விமல ஜசு
ஜோ தாயகு பலசாரி //

எனது மனம் என்னும் கண்ணாடியை ஸ்ரீ குருதேவரின் திருப்பாதத் தூசியால் தூய்மைப்படுத்திக் கொண்டு நான்கு கனிகளைத் தருகின்ற ரகுகுலதிலகமான ஸ்ரீ ராமனின் களங்கமற்ற புகழை விளங்கத் தொடங்குகிறேன்.

நான்கு கனிகள்
1. அறம் – நல்வழி
2. பொருள் – நல்வழியில் ஈட்டிய செல்வம்
3. இன்பம் – நல்வழியில் நிறைவேற்றுப் பெறும்
4. வீடு – சம்சார வாழ்விலிருந்து விடுதலை.

கொழும்பு தமிழ்ச்

புத்தி ஹீன தனுஜானி கே,
ஹுமிரௌ பவன குமார /
பல புத்தி வித்யா தேஹு மோஹி,
ஹரஹு கலேச விகார //

எனது அறிவோ குறுகியது; வாயு மைந்தனான ஆஞ்சநேயா, உன்னைத் தியானிக்கிறேன்; எனக்கு வலிமை, அறிவு, உண்மை ஞானம், எல்லாம் தருவாய், என்னைத் துன்பங்களிலிருந்தும் தவறுகளிலிருந்தும் விடுவிப்பாய்.

(1) ஜய ஹனுமான் ஞான குண ஸாகர /
ஜய கபீஸ திஹு லோக உஜாகர //

ஆஞ்சநேயா, நீ கடலைப் போலப் பரந்த அறிவும், நற்குணங்களும் பொருந்தியவன்; வானரர்களின் தலைவன்; மூன்று உலகங்களையும் உணர்வுற்றெழச் செய்பவன். உனக்கு வெற்றி உண்டாகட்டும் !

(2) ராம தூத அதுலித பலதாமா /
அஞ்ஜனி புத்ர பவன ஸுத நாமா //

நீ ஸ்ரீ ராம தூதன், எல்லையற்ற ஆற்றலின் உறைவிடம், அஞ்ஜனையின் மைந்தன், வாயு புத்திரன் என்னும் பெயர் பெற்றவன்.

(3) மஹாவீர விக்ரம பஜரங்கீ /
குமதி நிவார சுமதி கே ஸங்கீ //

மிகுந்த ஆற்றல் வாய்ந்த உடலுடன் இணையற்ற வலிமை பொருந்திய வீரன் நீ. தீய சிந்தனைகளை விரட்டுபவன் நீ; நற்சிந்தனைகளின் நண்பன் நீ.

(4) கஞ்சன பரண விராஜ ஸுபேசா /
கானன குண்டல குஞ்சித கேசா //

பொன்னிறம் பொருந்தியவன் நீ, சிறந்த ஆடைகளை உடுத்தியுள்ளவன் நீ. ஒளி வீசுகின்ற குண்டலங்களையும் காதில் அணிந்துள்ளாய். உனது முடியோ அலையலையாக அழகாக உள்ளது.

(5) ஹாத வஜ்ர ஔ த்வஜா விராஜை /
காந்தே மூஞ்ச ஜனேஉ ஸாஜை //

உனது கைகளை இடியும் கொடியும் அலங்கரிக்கின்றன. தோளையோ முஞ்ஜைப் புல்லாலான பூணூல் அணி செய்கிறது.



(6) சங்கர ஸுவன கேசரீ நந்தன /
தேஜ ப்ரதாப மஹா ஜக வந்தன //

நீ சிவபெருமானின் அவதாரம்: கேசரியின் மகன். உனது தேஜசையும் வீரத்தையும் கண்டு உலகமே உன்னை வணங்குகிறது.

(7) வித்யாவான குணி அதி சாதுர /
ராம காஜ கரிபே கோ ஆதுர //

நீ அறிவாளி, நற்குணங்கள் நிரம்பப் பெற்றவன், மிகவும் கூரிய புத்தியை உடையவன், ஸ்ரீராமனின் பணிக்காக எப்போதும் மகிழ்ச்சியுடன் காத்திருப்பவன்.

(8) ப்ரபு சரித்ர ஸுனிபே கோ ரஸியா /
ராம லகண ஸீதா மன பஸியா //

இறைவனின் திருப்புகழையும் பெருமையையும் கேட்பதில் நீ எப்போதும் பரவசம் கொள்கிறாய். ஸ்ரீராமனும் லட்சுமணனும் சீதையும் உனது மனத்தில் குடியிருக்கின்றனர்.

(9) சூக்ஷ்ம ரூப தரி ஸியஹி திகாவா /
விகட ரூப தரி லன்க ஜராவா //

நீ மிகவும் நுண்ணிய உருவில் சீதையின் முன் வெளிப்பட்டாய்;மிகவும் பயங்கர உருக்கொண்டு துஷ்டத்தனம் புரிந்த இராவணனின் மாளிகையைக் கொளுத்தினாய்.

(10) பீம ரூப தரி அஸுர ஹம்ஹார /
ராமசந்த்ர கே காஜ ஸம்வாரே //

மிகவும் பெரிய உருவம் கொண்டு அரக்கர்களை அழித்து ஸ்ரீராம காரியத்தை நிறைவேற்றினாய்.

(11) லாய ஸஜீவன லகண ஜியாயே /
ஸ்ரீ ரகுவீர ஹரஷி உர லாயே //

சஞ்சீவினி மூலிகையைக் கொண்டு வந்து லட்சுமணனின் உயிரைக் காத்த போது ஸ்ரீராமன் உன்னை எத்தனை ஆனந்தத்துடன் தழுவிக் கொண்டார் !

(12) ரகுபதி கீன்ஹி பஹு~ படாயீ /
தும மம ப்ரிய பரதஹி ஸம பாயீ //

ஸ்ரீராமன் உனது பெருமைகளை மிகவும் புகழ்ந்து, நீயும் பரதனைப் போலவே தமக்குப் பிரியமானவன் என்று கூறியருளினார்.

(13) ஸஹஸ வதன தும்ஹரோ யச காவை /
அஸ கஹி ஸ்ரீபதி கண்ட லகாவை //

ஆயிரம் தலைகள் கொண்ட ஆதிசேஷன் கூட உனது பெருமைகளைப் புகழ்வதாக ஸ்ரீராமன் உன்னை அணைத்தபடியே கூறினார்.

(14) ஸனகாதிக ப்ரஹ்மாதி முனீசா /
நாரத சாரத ஸஹித அஹீசா //

ஸனகர் முதலான முனிவர்கள், பிரம்மா போன்ற தேவர்கள் சிவபெருமான், நாரதர், கலைமகள், ஆதிசேஷன்...

(15) யம குபேர திகபால ஜஹாங் தே /
கப கோபித கஹி ஸகே கஹாங் தே //

எமன், குபேரன், திசைக் காவலர்கள், கவிஞர்கள், புலவர்கள், எல்லோரும் உனது பெருமைகளை விளக்க முயன்று தோல்வியே கண்டார்கள்.

(16) தும உபகார ஸு~க்ரீவஹி கீன்ஹா /
ராம மிலாய ராஜ பா தீன்ஹா //

ஸ்ரீராமனிடம் அறிமுகப்படுத்தி, சொந்த அரசை மீட்டுக் கொடுத்ததன் மூலம் நீ சுக்ரீவனுக்கு ஓர் இணையற்ற உதவியைச் செய்து விட்டாய்.

(17) தும்ஹரோ மந்த்ர விபீஷண மானா /
லங்கேஸ்வர பயே ஸப ஜக ஜானா //

உனது அறிவுரைகளின் படி நடந்ததாலேயே விபீஷணன் இலங்கை அரசனானான் என்பது உலகம் முழுவதும் தெரிந்த விஷயம்.

(18) யுக ஸஹஸ்த்ர யோஜன பர பானு /
லீல்யோ தாஹி மதுர பல ஜானு //

பதினாறாயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்த சூரியனை, கனியென எண்ணி நீ விழுங்கிவிட்டாய்.



(19) ப்ரபு முத்ரிகா மேலி முக மாஹீ /
ஜலதி லாந்தி கயே அசரஜ நாஹீ //

ஸ்ரீராமனின் முத்திரை மோதிரத்தை வாயில் தாங்கியபடியே நீ கடலைக் கடந்து விட்டாய். (உனது அளப்பரிய ஆற்றல்களைக் கணக்கிடும் போது) இது ஒன்றும் வியப்பிற்குரியதல்ல.

(20) துர்கம காஜ ஜகத கே ஜேதே /
ஸு~கம அனுக்ரஹ தும்ஹரே தேதே //

எத்தனைக் கடினமான செயலும் உனதருளால் எளிதில் நிறைவேறிவிடும்.

(21) ராம துஆரே தும ரகவாரே /
ஹோத ந ஆஜ்ஞா பினு பைஸாரே //

ஸ்ரீராம ராஜ்யத்தின் வாயிற் காவலன் நீ. உனது அனுமதியின்றி அங்கு யாரும் நுழைய முடியாது.

(22) ஸப ஸு~க லஹை தும்ஹாரீ ஸரணா /
தும ரக்ஷக காஹு~ கோ பரனா //

உன்னைச் சரணடைபவர்கள் எல்லா இன்பங்களையும் பெறுகிறார்கள். நீ பாதுகாவலனாக இருக்கும் போது எதற்காகப் பயப்பட வேண்டும்.

(23) ஆபன தேஜ ஸம்ஹாரோ ஆபை /
தீனோ லோக ஹாங்கதே காபை //

உனது ஆற்றலைக் கட்டுப்படுத்த உன்னால் மட்டுமே முடியும். உனது ஆற்றலின் முன் மூன்று உலகங்களும் நடுங்குகின்றன.

(24) பூத பிசாச நிகட நஹி ஆவை /
மஹாவீர ஜப நாம ஸு~னாவை //

மகாவீரன் என்னும் உனது திருநாமத்தைச் சொல்பவர்களின் அருகில் பூதங்களும் பேய்களும் வருவதில்லை.

(25) நாசை ரோக ஹரை ஸப பீரா /
ஜபத நிரந்தர ஹனுமத வீரா //

உனது ஆற்றல் மிக்க திருநாமத்தை இடைவிடாது கூறினால் நோய் அகல்கிறது; துன்பம் விலகுகிறது.

(26) ஸங்கட தே ஹனுமான சுடாவை /
மன க்ரம பசன த்யான ஜோ லாவை //

மனம், வாக்கு, செயலால் அனுமனைத் தியானிக்கும் ஒருவனை, அவர் எல்லாத் துன்பங்களிலிருந்தும் விடுவிக்கிறார்.

(27) ஸப பர ராம தபஸ்வீ ராஜா /
தின கே காஜ ஸகல தும ஸாஜா //

தவம் புரிகின்ற பக்தர்களின் மேலான ஆசைகளை நிறைவேற்றுகின்ற ஸ்ரீராமனின் பணிகளை நீ நிறைவேற்றினாய்.

(28) ஔர மனோரத ஜோ கோயி லாவை /
சோயி அமித ஜீவன பல பாவை //

மேலும், பக்தனின் ஆசைகள் நிறைவேறுவதுடன் அவன் அழியாக் கனியாகிய இறையனுபூதியையும் பெறுகிறான்.

(29) சாரோ யுக பரதாப தும்ஹாரா /
ஹை பரஸித்த ஜகத உஜியாரா //

சத்திய, திரேதா, துவாபர, கலி என்னும் நான்கு யுகங்களிலும் உனது பெருமை போற்றப்படுகிறது. உனது திருநாமம் உலகம் முழுவதும் சிறக்கிறது.

(30) ஸாது ஸந்த கே தும ரகவாரே /
அஸுர நிகந்தன ராம துலாரே //

நல்லோரையும் ஞானியரையும் நீயே காக்கிறாய். ஸ்ரீராமனின் மனத்துக்கு உகந்தவனான நீயே தீய சக்திகளை அழிக்கிறாய்.

(31) அஷ்ட ஸித்தி நவ நிதி கே தாதா /
அச பர தீன ஜானகி மாதா //

எட்டுவித சித்திகளையும் ஒன்பதுவிதச் செல்வங்களையும் கேட்பவர்க்கு அளிக்கும் ஆற்றலை சீதா தேவி உனக்கு அருளினாள்.

எட்டுவித சித்திகள் :

| | | |
|---|---|---|
| 1. | அணிமா | –அணுபோலாதல் |
| 2. | மஹிமா | – எல்லையற்று பரந்த உருவம் கொள்தல் |
| 3. | கரிமா | – எல்லையற்ற எடை உடையவராதல் |
| 4. | லகிமா | – எடையே இல்லாதது போலாதல் |
| 5. | ப்ராப்தி | – நினைத்த இடத்திற்குச் செல்ல முடிதல் |
| 6. | ப்ரகாம்யம் | – விரும்பியது கைகூடல் |
| 7. | ஈசித்வம் | – இறைவனைப் போலாதல் |
| 8. | வசித்வம் | – அனைவரையும் அடக்கி ஆளுதல் |



(32) ராம ரஸாயன தும்ஹரே பாஸா /
ஸதா ரஹோ ரகுபதி கே தாஸா //

ஸ்ரீராம பக்தி என்பதன் சாரமே உன்னிடம் உள்ளது. எப்போதும் நீ அவரது சேவகனாகவே இருப்பாய் !

(33) தும்ஹரே பஜன ராம கோ பாவை /
ஜனம ஜனம கே துக பிஸராவை //

உன்னிடம் பக்தி கொள்வதால் ஒருவன் ஸ்ரீராமனை அடைகிறான்; எத்தனையோ பிறவிகளில் தொடர்ந்து வந்த துன்பங்கள் அவனை விட்டு அகல்கின்றன...

(34) அந்த கால ரகுபதி புர ஜாயீ /
ஜஹாம் ஜன்ம ஹரி பக்த கஹாயீ //

... அவன் தன் வாழ்வின் முடிவில் ஸ்ரீராமனின் உறைவிடம் செல்கிறான்; அங்கு அவன் ஹரி பக்தனாக மதிக்கப்படுகிறான்.

(35) ஔர தேவதா சித்த ந தரயீ /
ஹனுமத ஸேயி ஸர்வ ஸுக கரயீ //

அனுமனைத் தவிர வேறு எந்தத் தெய்வத்திடமும் மனத்தைச் செலுத்தாத ஒருவனுக்கும் எல்லா இன்பங்களும் நிறைகின்றன.

(36) ஸங்கட கடை மிடை ஸக பீரா /
ஜோ ஸுமிரை ஹனுமத பல பீரா //

எல்லாம் வல்ல ஆஞ்சநேயரை நினைப்பவரின் துன்பங்களும் துயரங்களும் விலகி ஒடுகின்றான்.

(37) ஜய் ஜய் ஜய் ஹனுமான கோஸாயீ /
க்ருபா கரஹு குருதேவ கி நாயீ //

ஓ ஆஞ்சநேயா, உனக்கு வெற்றி, வெற்றி, வெற்றி உண்டாகட்டும். ஓ பரம குருவே, எங்களுக்கு அருள் புரிவாயாக !

(38) ஜோ சத பார பாட கர கோயீ /
சூடஹி பந்தி மஹா ஸுக கோயீ //

இந்தத் துதிகளை நூறு முறை பக்தியுடன் படிப்பவன் உலகத்தளைகள் எல்லாம் நீங்கப் பெற்று பரமானந்தத்தை அனுபவிக்கிறான்.

(39) ஜோ யஹ படை ஹனுமான சாலீஸா /
ஹோ ஸித்தி ஸாகீ கௌரீஸா //

இந்த ஹனுமான் சாலீஸாவைப் படிப்பவனுக்கு சிவபெருமான் அருள் புரிகிறார்; அவன் பரிபூரண நிலையை அடைகிறான்.

(40) துளஸீதாஸ ஸதா ஹரி சேரா /
கீஜை நாத ஹ்ருதய மஹ டேரா //

என்றென்றும் தம் இதயத்தில் இறைவன் எழுந்தருளி வாழட்டும் என்று அவரது நித்திய சேவகனான துளசிதாசன் பிரார்த்திக்கிறான்.

பவன தனய ஸங்கட ஹரண,
மங்கள மூரதி ரூப /
ராம லகண ஸீதா ஸஹித,
ஹ்ருதய பஸஹு ஸுரபூப //

துன்பங்களைப் போக்குபவனும் மங்கள உருவினனும் தேவர்களின் தலைவனும் வாயு மைந்தனும் ஆகிய ஸ்ரீ ஆஞ்சநேயர் எனது இதயத்தில் ஸ்ரீராம லட்சுமண சீதையுடன் நிலவட்டும்.

சியாவர ராம சந்த்ர கீ ஜெய்
பவனசுத ஹனுமான் கீ ஸ்ரீ ஜெய்
போலோ பாய் சப்தன்கீ ஜெய்



## ஸ்ரீமான் சதாசிவம் குமாரசிங்கம் அவர்களின்
# வாழ்க்கை வரலாறு

சித்திரமேழி இளவாலையில் அமைந்ததொரு சிற்றூர். உழவு தொழிலாற் சிறப்புற்ற ஊர் ஆதலின் சித்திரமேழி என்ற பெயரை இவ்வூர் பெற்றது. மேழி என்றால் கலப்பை என்று பொருள். "மேழி பிடிக்குங்கை வேல் வேந்தர் தோங்குங்கை" என்று புலவர்கள் பாராட்டியுள்ளது இங்கே குறிப்பிடத்தக்கது.

உழவு தொழிலை முதன்மையாகக் கொண்டு மேன்மையுற்றோர் வாழும் சித்திரமேழி ஊரிலே சைவவேளாளர் குலத்திலே தோன்றிச் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்த சதாசிவம்–சின்னாச்சி தம்பதிக்கு எழுவர் மக்கள் தோன்றினர். ஐந்தாவதாகத் தோன்றிய செல்வப் புதல்வரே திருவாளர் குமாரசிங்கம் அவர்கள் ஆவர். வளரும் பயிரை முளையிலேயே தெரியும் என்பர். மிகச் சிறுபராயத்தினராக அவர் இருந்தபோதே அவர் உள்ளத்திலே "செய்யுந் தொழிலே தெய்வம்" என்ற குறிக்கோள் ஆழப் பதிந்துவிட்டது. எனவே சித்திரமேழிக்கே சிறப்புடைத் தொழிலாக அமைந்த கமத்தொழில் கைவந்தவராக அவர் மிளிர்ந்ததில் வியப்போதும் இல்லை. மற்றையோர் எல்லாம் தொழுதுண்டு பின் செல்பவராக இருந்தபோது இவர் உழுதுண்டு வாழ்பவராக மட்டும் அமைந்துவிடாமல் உழவினால் உயிர்கள் அனைத்தையும் ஓம்புவராக அமைந்து சிறப்புற்றார்.

உணவுக்கு அடுத்த இடத்தில் வருவது உடை என்ற சிந்தனை இவர் உள்ளத்தில் எழுந்ததும், Vel Readymade Stores என்ற ஸ்தாபனம் பிறந்தது. ஸ்தாபனத்தை வெற்றிகரமாக நடத்தித் தனி முத்திரை பதித்து மகிழ்ந்தார்.

தெல்லிப்பழை தென்மேற்கில் விழிசிட்டி என்றொரு சிறு குறிச்சி உண்டு. அங்கே சைவவேளாண் மரபில் வந்த சீராளர் பராசக்தி தம்பதியின் கனிஷ்ட புதல்வி செல்வி சின்னத்தங்கம் திருவாளர் குமாரசிங்கத்தின் வாழ்க்கைத் துணை நலமாக அமைந்தார். இத்தம்பதி ஆற்றிய இல்லறம் என்னும் நல்லறத்தின் பயனாய் நித்தியானந்தராஜா, புஷ்பராணி, பரமானந்தம் (சதா), உமாராணி, தனராணி, விஜயராணி, முருகானந்தன் எனும் மக்கள் எழுவர் தோன்றினர். உமாராணி அமரர் ஆகிவிட்டார். ஏனையோர் அனைவரும் இன்று சிறப்பாக வாழ்கிறார்கள். ருக்குமணி, பாலச்சந்திரன்,

புவனராணி (ரோகினி), சிறிதரன், ஜெயக்குமார், சோதிமலர் எனும் அறுவரையும் மருமக்களாகப் பெற்று உவக்கும்பேறும் குமாரசிங்கம் – சின்னத்தங்கம் தம்பதிக்குக் சேர்ந்து விட்டது.

குமாரசிங்கம் தம்பதி, தான தருமம் செய்தல், இறைவழிபாடு செய்தல் என்பவற்றிலும் எல்லையற்ற ஈடுபாடு கொண்டவர்கள். குமாரசிங்கம் அவர்களுடைய குலதெய்வம் சித்திரமேழியில் எழுந்தருளும் ஞானவைரவ சுவாமி. திருமதி சின்னத்தங்கம் குமாரசிங்கத்தின் குலதெய்வம் விளிசிட்டி ஞானவைரவ சுவாமி. குலதெய்வங்களுக்குக்குச் சிறப்பான வழிபாடுகள் ஆற்றியதோடு தம்முடைய இஷ்ட தெய்வங்களுக்கும் வழிபாடுகள் ஆற்ற இவர்கள் தவறியதில்லை. விளிசிட்டி வீரபத்திர சுவாமி, மாவிட்டபுரம் கந்தசுவாமி, யாழ்ப்பாணம் விஸ்வலிங்கப்பிள்ளையார் ஆகிய தெய்வங்கள் இத்தம்பதியின் இஷ்ட தெய்வங்களாக அமைந்து அருள் பாலித்தன. எனவே இவர்களின் வாழ்க்கை ஒப்பிலாச் சிறப்புடன் அமைந்ததில் அதிசயம் எதுவும் இல்லை.

கொழும்பிலே தமது ஓய்வு காலத்தை மகனுடன் (சதா) "ஒச்செட்" கட்டிடத்தில் அமைந்த இல்லத்திலே கழித்தார். அப்போது ஆஞ்சநேயர் வழிபாட்டிலே ஈடுபடும் வாய்ப்பு வந்துள்ளது. வழிபட்டார் தொண்டுகள் ஆற்றினார்.


அவர் இம்மண்ணில் எல்லா நலங்களும் பெற்றார். கோகுலன், கிருத்திகா, சங்கித், தர்மினி, ரோகினி, விபூசன், நிதர்சன், கிருஷாந், துஷாந், ஜெயகான், ஹரிஹரன், இந்துஜா, காந்தரூபன் ஆகிய பதின் மூவரையும் பேரர்களாகப் பெற்று மகிழ்ந்தார். அவருடைய வாழ்க்கை நிறைவான வாழ்க்கை. இப்போது அது நிறைவுற்ற வாழ்க்கை.

அவர் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



# வம்ச விருட்சம்



# Family Tree

(Siththiramezhi, Ilavalai) **Sathasivam + Sinnachchi**

- Kanakaratnam
- Sellamuthu
- Seenivasakam
- Poolokasingham
- **Kumarasingham**
- Jeganathan
- Markandeyar

(Vizhisitty, Thellippalai) **Seeralar + Parasakthi**

- Sellam
- Sinnappu
- Arunasalam
- Sithamparam
- Kasippillai
- **Sinnaththangam**


**Kumarasingham + Sinnaththangam**

- Nithiyanantharajah + Rukkumani → Kokulan, Kiruththika, Sangith
- Pushparani + Balachandran → Tharmini, Rohini
- Paramanantham (Satha) + Puvanarani (Rohini) → Vipooshan
- Late. Umarani
- Thanarani + Sritharan → Nitharsan, Kirushanth, Thushanth
- Vijayarani + Jeyakumar → Jeyaharan, Hariharan, Inthuja
- Murukananthan + Sothimalar → Kantharuban

# உளம் நிறைந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்

சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் **சதாசிவம் குமாரசிங்கம்** அவர்களின் ஈமக்கிரியைகளிற் கலந்து எம்மீது அன்பு செலுத்தியும் மலர் வளையங்கள், பூமாலைகள் சமர்ப்பித்தும் அனுதாபச் செய்திகளை அனுப்பியும் எமது துக்கத்தில் பங்கு கொண்ட உறவினர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் எமது உள்ளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



DESIGNED & PRINTED BY UNIE ARTS (PVT) LTD. COLOMBO - 13. TEL. [illegible]